புதுமை

ஆசிரியர்
கோசல்ராம்



148

148/3.59

JL
[handwritten library label]

UMAI. ஜூலை 1, 1959 விலை 25

உலகப் பிரசித்திப் பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் - பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்
பென்ஸ் தயாரிப்பு

மாடல் LP 312/48—5 டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.
பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும் உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க
தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.

மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் பிரைவேட் லிமிடெட்,

5, ஸ்காட் ரோடு : : மதுரை.

போன்: 88 தந்தி: VEEVEEYES

வே. வ.

சண்முக நாடார் & சன்ஸ்

விருதுநகர்.

★

எங்களிடம் தயாராகிற

நயம் நல்லெண்ணெய்,

நயம் உளுந்து, துவரம்

பருப்புகளை

வாங்கி உபயோகியுங்கள்.

A S P

சிக்கரி கலந்த

காப்பித் தூள்

★

தயாரிப்பாளர்:

A.S.P. அய்யம்பெருமாள் நாடார்,

விருதுநகர்.

புதுமை

சந்தா விகிதம்

தனிப்பிரதி	... ...	25 ந.பை.
6—மாதச் சந்தா	... ...	ரூ. 1-50
வருடச் சந்தா	... ...	ரூ. 3-00

வெளிநாடுகளில் (இலங்கை, மலேயா) தனிப்பிரதி 30 ந.பை.

விளம்பர விகிதம்

மேலட்டை: பின்பக்கம் மூன்று கலர்	ரூ.	250
,, உட்பக்கம் ...	ரூ.	150
உட்பக்கங்கள் :		
முழுப் பக்கம் ...	ரூ.	100
½ ,, ...	ரூ.	60
¼ ,, ...	ரூ.	30
1 கலம் 1 அங்குலம்	ரூ.	10

ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு முன்பணம் கட்டக் கூடிய ஏஜெண்டுகள் தேவை.

—நிர்வாகி.

A. T. N.
Thammanna Chettiar & Co.,

Brass, Copper & Stainless Steel Wares,

RAJA STREET,

COIMBATORE.

H. O. TIRUPUR.

★

அ. த. ந. தம்மண்ண
செட்டியார் அண் கோ.,

பித்தளை, செம்பு, எவர்சில்வர் பாத்திரங்கள்
உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

ராஜா தெரு,

கோயம்புத்தூர்.

தலைமை ஆபீஸ்: திருப்பூர்.

இந்த இதழில்...

மணி: 2 ஜூலை 1959 ஓசை: 12

	பக்கம்		பக்கம்
ஊருக்கு உபதேசம்	4	பழரசம்	28
விளக்குமாற்றுக்கட்சி !	5	விடிவெள்ளி	33
காங்கிரஸ் ஆட்சியில்...	8	விரைந்து வாரும்	44
இதோ, ஆள் விழுங்கும் புலிகள்!	9	தாமரைக்கன்னி	45
பாட்...பாட்...பாட்...பட்	9	பிறப்பும் வளர்ப்பும்	46
திரு. கஸ்தூரி சீனிவாசன்	10	பெண் மனம்-புதிர்	56
ஏற்றமும், இறக்கமும்	12	பாசமும் கடமையும்	59
இவர்தான் டி-காலே	19	வாழ்வுக்கு அமுதானுள்	65
'மாஜி' ராஜாஜியும், 'மாடர்ன்' ராஜாஜியும் !	20	ஒரு சொல்	71
அன்பும், அறமும்	25	ஊருக்கென்ன உபதேசம் ?	79
		நீலக்கடல்	85

ஆகஸ்டு மலரில்....

உங்களுக்குப் படைக்கிறோம்!

- ★ அறிவுக்கடலில் ஆழக்குளித்து பொறுக்கி எடுத்த ஆணி முத்துக் கட்டுரைகள் !
- ★ கற்பனை வானில் சிறகடித்துப் பறந்து படைத்த கனிரசக் கவிதைகள் !
- ★ வாழ்க்கையில் தோய்ந்து, கலந்து, பின்னிய வண்ணச் சிறுகதைகள் !
- ★ மனத்தின் நுண்மையைப் படம் பிடிக்கும் விஞ்ஞானக்கதை
- ★ சித்திரக்களஞ்சியம் !
- ★ பத்திரிக்கைத் தொழில் வளர்ச்சியில், ஓர் மைல் கல் !

புதிய அம்சங்கள்! அதிக பக்கங்கள்!

விலை 25 காசுதான்!

உபதேசம், ஊருக்குத்தான்!



கேரள கம்யூனிஸ்டு சர்க்கார் அமைதியான மக்கள் மீது செய்த துப்பாக்கிப்பிரயோகங்களுக்கு விசாரணை நடத்த மறுத்துவிட்டது. முதுகுளத்தூரில் பயங்கர கலகம் நடந்தபொழுது சென்னை சர்க்கார் சுட்டதை, திரு. நம்பூதிரிபாட் கண்டித்தது நினைவு இருக்கலாம்!

புதுமை

விளக்குமாற்றுக் கட்சி!

'கன்ஸர்வேட்டிவ்கட்சி!'
'விளக்குமாற்றுக்கட்சி!'
'முட்டுக்கட்டைக்கட்சி!
'தர்மகர்த்தாக்கட்சி!'

'சோஷலிஸவிரோதக் கட்சி!'—'உட்லண்ட்ஸ்' ஓட்டலின் புல்தரையிலே உட்கார்ந்து, சிந்தித்து, சிந்தித்து மேலே சொன்ன எல்லாப் பெயர்களையும் முணுமுணுத்துப் பார்த்து, இறுதியிலே ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் தமது நீண்ட அரசியல் வாழ்வின் கடைசிக் கட்டத்திலே, பெற்றெடுத்த 'குறைப் பிரசவ'க் குழந்தைக்கு, 'சுதந்திரக் கட்சி!' என்று நாமகரணம் சூட்டி... 'தாலாலோ...' பாடி நிற்கிறார்!

1951-ல் ஹிந்தி வெறிபிடித்த ஸ்ரீ தாண்டனுடன் கூட்டு சேர்ந்து டெல்லியில் நேருவுக்கு எதிராகச் சதி செய்ய முயன்றவுடன், நேருவால் வீட்டுக்கனுப்பப்பட்டு 1952 தேர்தல்காலத்தில் 'நல்லவர்களுக்கு ஓட்டுபோடுங்கள்' என்று சொல்லி தேர்தலுக்குப் பின்னால் மந்திரியானபின் காங்கிரஸ்தான் நாட்டைக் காப்பாற்ற முடியுமென தஞ்சாவூர் பண்ணையாள் சட்டத்தைக் கொண்டுவந்து, அச்சட்டத்தை எதிர்த்தவர்களை 'வீணர்கள்' என்றுபேசியவரை பதவியிலிருந்து போகச் சொன்னபின் தவங்கிடந்து ஆசையோடு பெற்ற குழந்தை!

சென்னை முதலமைச்சர் பதவியிலிருந்து இறக்கப்பட்ட நாள் தொட்டு, இன்றுவரை ஏங்கி, ஏங்கித் தவம் கிடந்து, தெருவிலே கிடந்த அநாதைப்பிள்ளைகளை எல்லாம் மனம் கூசினாலும் மறைத்துக்கொண்டு, தொட்டுத் தொட்டுத் தடவி, அது ஒத்துக்கொள்ளாது சலித்து, 'எப்படியோ யார் மூலமோ... பெற்றே ஆக வேண்டும்!' என்று பிரியப்பட்டு, பலருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி கூடிக்கலந்து, மூன்றாண்டு காலமாகக் கருவைத் தாங்கி, பிரசவவேதனைப்பட்டு, ஜன்னி கண்டு, பலமுறை பிதற்றி, அரற்றி, கைகால் இழுத்து, கண்கள் சொருகி, நாக்கு வெளியே தள்ளி, பற்கள் கிட்டிப்போய் எப்படியோ பிழைத்து—இறுதியிலே பிரசவித்த குழந்தை!

பெறாத பிள்ளைக்குப் பெயர் வைக்க என்றே முற்பட்டு, புருஷன் என்று அழைக்க யாரையும் காணோம்; பிள்ளை பெயர் முத்துராமலிங்கம்!' என்ற பழமொழியை உண்மையாக்கி, எத்தனையோ பெயர்களை அலசிப் பார்த்து, 'கன்ஸர்வேட்டிவ்' கட்சி என்று பெயர் வைத்தால் விளக்கெண்ணெய் வாடை குழந்தை வாயிலும் வீசும்!' என்று கண்டுகொண்டு, 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்றபடி நொண்டிக் குழந்தையை 'தாண்டவராயன்' என்பது போலவும், ஊமைப்பிள்ளைக்கு 'சண்டப் பிர

சண்டன்' என்று பெயரிட்டுழைப்ப தோத்தும், 'சுதந்திரக் கட்சி' என்று பெயர் சூட்டி, 'விளக்குமாற்றுக் கட்சி' என்று வீட்டுக்குள்ளே கூப்பிட செல்லப் பெயரொன்றும் சூட்டியிருக்கிறார்கள்!

'நியூயார்க் டைம்ஸ்' பால்புட்டி அனுப்ப, 'கல்கி' கரைத்துக் கொடுக்க, காளா கைத்தாங்கலாக வாங்க, மஸானி ஊட்ட, ரங்கா தாலாட்ட, சி. பி. பாட, ரத்தின சாமி ஆட, ஒய். எம். ஐ. ஏ. விலும் லட்சுமிபுரம் வாலிபர் சங்கத்தி லும் மாத்திரம் மாவிலைத் தோர ணங்கள் தொங்க, நாள் கழித்து பிரசவித்ததால் இரத்தம் அதிகம் செலவாகி, 'ஹிஸ்டீரியா'வில் குழந் தையைப் பெற்றெடுத்த தாய் உள றிக் கொட்டிக்கொண்டிருக்க — காரியங்கள் வேகமாக நடை பெற்று வருகின்றன!

ஐயோ! பாவம்! இந்தக் குழந்தை பிழைத்து, தவழ்ந்து, தள்ளாடி, நடந்து, பேசி, வளர்ந்து, பொறுப் புணர்ந்து, அறிவடைந்து, பெரிதாகி, தாயைக் காப்பாற்றி, தாயின் தீராத ஆசைகளை நிறைவேற்ற வேண்டும்! அந்த அன்னையும் நீண்ட நாள் வாழ்ந்தாக வேண் டும்!

இத்தனை சித்திர, விசித்திரங் களிடையே உருவாகி இருக் கிறது, சுதந்திரக்கட்சி!

ஜரிகைத் தலைப்பாகைகள், மாஜி திவான்கள், அதிருப்தியா ளர்கள், மிராசுதாரர்கள், திரு. டி. டி. கே. யால் அன்று 'ஆள் விழுங் கும் புலி' என்று வர்ணிக்கப்பட்ட பம்பாய் முதலாளிகள் ஆகியோர் கள், சுதந்திரக்கட்சியைத் தங்கள் நலன்பேணும் அமைப்பாகக் கருதி அதை அணைக்க ஆரம்பித்திருக் கிறார்கள்!

ஆளும் காங்கிரஸிலிருந்து, அகில இந்தியக்கட்சிகளாகிய சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட், பி. சோ. உட்பட, பிரிவினை விரும்பும் தி. மு. க. வரை, 'வர்க்க பேத மற்ற, சோஷலிஸ சமுதாயம்' என்ற இலட்சியத்தைக் கொண்டி ருக்க, சுதந்திரக் கட்சி மாத்திரம் வேறு சுருதியோடு பேசுகிறது!

ஆளும் கட்சி வர்க்கபேதங்களை வளர்த்து வருகிறதாம்! உதாரண மாக நிலப்பிரச்னையில் மிராசுதார்-விவசாயிக்கு இடையே நிலவிய நல்லுறவை, காங்கிரஸ் சீர் குலைத்து விட்டதாம்! எனவே, நிலச்சீர்திருத்தங்களை ஒழித்துக் கட்டி, பழைய நிலையையே கொண்டு வந்தால் தான், ஊர் உருப்படுமாம்! அதாவது, முன்பு மாதிரி மிராசுதார், ஏக சக்ராதி பதியாக இயங்க, விவசாயி கை கட்டி, வாய் புதைத்து நின்று, ஏதோ, கொடுத்ததை வாங்கிப் போக வேண்டுமாம்!

ஆகா! என்ன அபாரமான மூளை! சுதந்திரக் கட்சியின் மூளை யைத் தவிர வேறு எங்கு இது போல அரிய யோசனைகள் பிறக் கும்?

அந்தப் பழைய உற்பத்தி நிலை நீடித்தால்தான் உற்பத்தி பெருகு மாம்! கூட்டுறவு முறைவந்தால் குடியே கெட்டுப் போகுமாம்!

இப்படிச் சொல்லுகிற கட்சியில் பெருநிலக்கிழார்கள் நாக்கைச் சப் புக் கொட்டிக் கொண்டு சேர் வதில் வியப்பென்ன இருக் கிறது?

ஆனால் வாழ்நாளெல்லாம், 'கிஸான்' என்று உதட்டிலே முணு முணுத்துக்கொண்டிருந்த ஸ்ரீமான் ரங்காகாருவின் 'டங்கர்'தான் கொஞ்சம் வியப்பைத் தருகிறது!

விவசாயியை அரசாங்க அடிமை ஆக்குவதை எதிர்க்கக் கிளம்பிய ரங்கா, விவசாயியை என்றும் நிலக்கிழாரின் பிடியிலேயே வைத் திருக்கவிரும்பும் பழையமுறைக்கு வக்காலத்து வாங்கும் ராஜாஜி யோடு கைகுலுக்குவதுதான் விசித்திரம்!

கசாப்புக்கடையில், ஆட்டுக்கு நியாயம் கேட்கப்போவது போல் நிலக்கிழார்கள் கூட்டத்திலே போய், உழைப்பாளி கிஸானுக்கு உரிமை வாங்கக் கிளம்பியிருக்கிறுர் திருவாளர் ரங்கா! அவருடைய பல அரசியல்'ஸ்டண்டு'களிலும் அவருக்குப் பின் வந்த பக்தர்கள் இந்த 'ஸ்டண்டு'க்குப் பிறகு நிச்சயம் மறைந்து விடுவார்கள்! காலம் அதைக்கூறும்!

சமுதாய அமைப்பைப் புரட்சிகரமாக, சட்டபூர்வமாக, அமைதியாக இரத்தம் சிந்தாமல் மாற்றும் காங்கிரசை--காங்கிரஸ் இலட்சியமாம் சோஷலிஸத்தை – எதிர்க்கிறுர்கள், 'தர்மகர்த்தா சோஷலிஸம்' என்று ஓர் சொல்லை வைத்துக்கொண்டு!

பாவம்...மகாத்மாஜீ இன்று இல்லை...எனவே எவரும் அவரைப் பயன்படுத்த முற்பட்டு விடுவதைப் பார்க்கிருேம்!

மகாத்மாஜீ உயிரோடு இருந்த காலை,பலகாங்கிரஸ் மகாசபைகளிலே உருவாக்கிய தீர்மானங்களைத் தானே இன்று அமுல் நடத்துகிருேம்?

'கோவிந்தனுக்கே (உழுபவனுக்கே) நிலம்!' என்று எழுதியது யார்?

கார்ல் மார்க்ஸா? –இல்லையே - காந்திஜி ஆயிற்றே?

அவரது பெயரைச் சொல்லி மாத்திரம்–சோஷலிஸத்தை எதிர்த்துவிட முற்படுகிருர்கள்! எப்படியோ? அதுவும் 'சோஷலிஸம்' என்று சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது! 'தர்மகர்த்தா' கையாலாகாதவர்களை மேற்பார்க்கத்தான் தேவை! இந்தச் சொற்சிலம்பம், நாணற்புல்லாக ஒடிந்து விழப் போகிறது!

உலகின் இன்றைய சமுதாய முறைகள் இரண்டு-ஒன்று பொதுவுடைமை; இரண்டு முதலாளித்துவ முறை.

இந்தியா முன்னேற வேண்டும்; வர்க்கபேதமற்ற, சுரண்டலற்ற, சரி, சம சந்தர்ப்பங்கள் கொண்ட வறுமையற்ற சோஷலிஸம் மலர வேண்டும்.

அதை அடைவதற்கு, பொதுவுடைமையரின் பலாத்கார வழியை நாடப்போவதில்லை! செஞ்சீனுவில் நடந்த கோடிக்கணக்கான நிலக்கிழார்கள் கொலை முறை நமக்கு வேண்டாம்!

அதே நேரத்தில், முதலாளித்துவ முறையின் குறைபாடுகளை நாம் கொண்டிருக்கவும் கூடாது! கோடீசுவர'போர்டு'ம்,சாதாரணக் குடிமகனும் இங்கே இருக்கமுடியாது! அப்படி இருக்க அனுமதிக்கப்பட்டால், பொதுவுடைமைப் பூதம் நம்மை விழுங்குவது உறுதி! இந்த உண்மையை எத்தனை சுதந்திரக்கட்சிகளாலும் மாற்ற முடியாது!

* * *

புதிய கட்சி பிரமாதமாக எதையும் செய்யப்போவதில்லை என்று அரசியல் அரிச்சுவடி அறியாதார் கூட ஆருடம் சொல்கிருர்கள்!

இமயமலையை எதிர்க்கப் புறப்பட்ட எலிக்குஞ்சுகள், அட்லாண்டிக்கிற்கு அணை போட ஆயத்தம் செய்யும் அணிற்பிள்ளைகள், சோஷலிஸ உணர்ச்சி வெள்ளத்தை அடைக்கக் கிளம்பியிருக்கும் சுண்டைக் காய்கள்!— இதை நமது நாட்டு விவசாயியும், தொழிலாளியும் நன்ருக அறிந்தவர்களே.

பாவம்! நிலக்கிழார்கள், இதை நம்பி சுதந்திரக்கட்சி உண்டியலிலே சில்லறை போடுகிருர்கள்! ஸ்ரீமான் இராஜாஜியோ, பிற தலைவர்களோ சென்னையை விட்டு — அல்லது ஓரளவுதுணிந்தால் தமிழ் நாட்டுப் பிற நகரங்கள் வரை மாத்திரம் வந்தாலும் — கிராமங்களை எட்டியும் பார்க்கப்போவதில்லை. பார்த்தால், என்னவாகும் என்று அவர்களுக்குத் தெரியும்!

விளக்குமாற்றுக்கட்சிக்கு வெண்சாமரம் வீசுவோர்கள் விரைவில் இதை உணர்வார்கள்!

காங்கிரஸ் ஆட்சியில்:

பாடபுத்தகங்களும், பாரதிதாசனும்!

பச்சிளம் குழந்தைக்குப் பச்சை மிளகாய் சாப்பிடக் கொடுக்கலாமா?

பல்லில்லாத கிழவருக்கு பல்லுடைக்கும் பலகாரங்கள் ஏன்?

பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கு வெறுப்பை வளர்க்கும் விஷயங்களைக் கற்றுத்தரலாமா?

'கூடாது; கூடாது; கூடாது!' என்று தான் நீங்கள் கூறுவீர்கள்! நியாயபுத்தியும்,சராசரி அறிவும் படைத்த எல்லோரும் சொல்லுவார்கள்!

ஆனால் சென்னை அரசினரின் பாட புத்தகக்குழு மாத்திரம் நேரெதிராகத் தீர்ப்புக் கூறும்!

இதோ—ஓர் உதாரணம்!

* * *

தமிழ்நாட்டின் இன்றைய சிறந்த கவிஞர்களில் பாரதிதாசனும் ஒருவர் —ஒப்புக்கொள்கிறோம். அவர் 'புரட்சிக் கவி' என்பதை ஏற்றுக்கொள்ள இயலாவிட்டாலும்கூட!

என்றாலும் கவிஞர் பாரதிதாசன் அரசியல் கொள்கைகள் சில கொண்டவர்; நாடு துண்டாக்கப்பெறவேண்டும் என்ற கட்சியை ஆதரிப்பவர் — இது வெளிப்படை.

அத்துடன், நமது தீவினை காரணமாக, தமிழகத்தின் தாய் மொழி போதிக்கும் தமிழாசிரியர்கள் பெரும்பாலோர், கட்சிக்கருத்துக்களைக் கலந்து பாடத்தோடு பிள்ளைகளுக்கு ஊட்டும் பாதகத்தைச் செய்து வருவதும் யாவரும் அறிந்ததே!

ஏதாவது ஒரு கவிதையைக் கற்றுக் கொடுக்குமுன்னர், கவிஞனைப் பற்றியும் கூறவேண்டியது பாடத்திட்டம்.

'பாரதிதாசன் கவிதைகளைப் பாடப் புத்தகத்தில் சேர்த்தே ஆகவேண்டும்' —இது பாடப்புத்தகக் குழுவினரின் சட்டம்.

எனவே 'வெறும் வாயை, மெல்பவனுக்கு அவல் அகப்பட்ட கதை'யாக, நமது ஆசிரியப் பெருமக்கள் பாரதிதாசனரின் 'பகுத்தறிவு' வாதங்களை, பிரிவினைக் கருத்துக்களை, பிஞ்சு நெஞ்சங்களிலே ஏற்றும் திருப்பணியை அரசாங்க ஆதரவோடு செய்யத் தலைப்படுகிறார்கள்!

நிலவைப்பற்றிய பாட்டோ அல்லது மலையைப்பற்றிய செய்யுளோ எதாக இருந்தாலும் அதை விடுத்து, சிறுவர், சிறுமியரின் பிஞ்சு நெஞ்சங்களில் அரசியல் நஞ்சைக் கலப்பதற்கு, ஏற்ற பொருத்தமான சூழ்நிலையை நமது கல்வி இலாகா செய்து வருகிறது!

பொதுவுடைமை நாடுகளில் இருப்பதுபோல, பாடப் புத்தகங்களை ஆளும் கட்சிக்கு ஆதரவாக உருவாக்குமாறு நாம் சொல்லவில்லை!

அபிப்பிராய சுதந்திரம் இருக்கட்டும்! ஆனால் ஆளும்கட்சியை ஒழிப்பதற்கும், குழந்தைகள் மனதைக் கெடுப்பதற்கும்அரசாங்கமே வழிவகுக்கலாமா?

பகுத்தறியும் திறன்பெற்ற கல்லூரி மாணவனுக்கு பாரதிதாசனைப் பாடமாக்கினால் பரவாயில்லை ; இடை நிலையிலே வேண்டாம் என்பதே எமது கருத்து.

குறிப்பாக, அரசாங்கக் கல்வி இலாகாவும் அமைச்சர்திரு.சுப்பிரமணியமும் இதற்கு விளக்கம் தந்தாக வேண்டும்! தெரிந்துசெய்தாரா ? இவருக்கே தெரியாமல் அந்த இலாகா நடக்கிறதா? இத்தனைக்கும் முத்திரை வைத்துக் கொடுக்கும்முதல்மந்திரி திரு.காமராஜ்காரு இப்படியெல்லாம் தனது கொள்கைகளை கொலை செய்யும் இலாகா ஒன்றுசெயல்படுவதை புரிந்து கொண்டிருக்கிறாரா?''

''இப்பாடப் புத்தகக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டு செயலாற்றிய அதிகாரி, அமைச்சர்களைப் பற்றி என்னவெல்லாம் பேசியிருக்கிறார் என்பதை சர்க்காரிடமுள்ள(பைல்) ரிக்கார்டுகளிலிருந்து தெரிந்துகொள்ளுங்க''ளென்று முதல்மந்திரியைக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு செயல்படும் அரசாங்க அமைச்சர்கள் ஊர் ஊராகச் சென்று ''காங்கிரஸை பலப்படுத்துங்கள்! தேசத்தை துண்டாட தூண்டும் தீய சக்திகளை ஒழியுங்கள்!'' என்று சொல்வதற்கு அர்த்தமிருக்கிறதா ?

இதோ, ஆள் விழுங்கும் புலிகள் !

நாடே பதறியது, 'முந்திரா பேர ஊழல்' கண்டு! பொதுமக்களின் பணம் சுமார் ஒன்றேகால் கோடி ரூபாய் கடலில் போட்டமாதிரி செல வழிக்கப்பட்ட செய்தி கேட்டுப் பத்திரி கைகள் கொதித்தன! பொதுமக்கள் குமுறினார்கள்! பாராளுமன்றம் பதை பதைத்தது!

நேரடியான பொறுப்பில்லாவிட்டா லும், இலாகாவின் தலைவர் என்றமுறை யில் ஒப்பற்ற தியாகத்தை உடனடியா கச் செய்து, ஜனநாயக வளர்ச்சியின் வரலாற்றில் தம் பெயரைப் பொன்னெ ழுத்துக்களால் பொறித்துக்கொண் டார், மதிப்பிற்குரிய அன்றைய நிதி அமைச்சர் திரு. டி.டி. கிருஷ்ணமாச்சாரி யார்!

ஆனல் அவரது தியாகமும், 'ஆள் விழுங்கும் புலிகள் ஜாக்கிரதை!' என்ற எச்சரிக்கையும் விழலுக்குஇரைத்தநீரா கப் போய்விட்டன!

பம்பாய் பிரதம நீதிபதி திரு. சக்லா– "நிதிஇலாகாக்காரியதரிசி திரு.பட்டீல், ஆயுள் இன்ஸ்யூரன்ஸ் கார்ப்பரேஷ னின் திரு. காமத், திரு. வைத்திய நாதன் ஆகியமூவரும் தங்கள் பொறுப் புக்களை – அரசாங்க நிதியைப் பேணும் முக்கிய கடமைகளைப் புறக்கணித்தார் கள்" என்று தீர்ப்பளித்தார்.

மத்திய அரசாங்கம்அடுத்து நியமித்த சுப்ரீம் கோர்ட் மாஜி நீதிபதி திரு. விவியன்போஸ் போர்டும் – நிதி இலாகாக் காரியதரிசி திரு. பட்டீலே முக்கிய குற்றவாளி என்று ஊர்ஜிதம் செய்தது!

இரண்டு பொறுப்புவாய்ந்த நீதிபதி களின் தீர்ப்புகள்இவ்வாறு வெளியான பிறகும், சர்க்கார் தன் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க விதிகளின்படி மத்திய சர்வீஸ் கமிஷனின் உதவியை நாடியது.

மத்திய சர்வீஸ் கமிஷன், திரு. பட்டீ லுக்கும் திரு.காமத்துக்கும் 'ஞானஸ்நா னம்'செய்வித்து அவர்களைக் குற்றமற்ற வர்கள் என்று கூறிவிட்டது!

அதிலும்கூட மத்திய சர்வீஸ் கமிஷ னில் ஐ. ஸி. எஸ். இல்லாத அங்கத் தினராகிய திரு. சிவசண்முகம் பிள்ளை தைரியமாக,'சக்லா,போஸ் தீர்ப்புக்கள் சரியே; பட்டீல் ஒழுங்கற்ற முறையில் நடந்திருக்கிருர்' என்று கூறியிருக்கிருர். அவரை நாம் பாராட்டுகிருேம்!

தைரியமூக அரசாங்கப் பணத்தை மனம் போனபடி இலட்சக் கணக்கில் வாரி, வழங்கிய அதிகாரிகள் ஒரு தண் டனேயும் இன்றித் தப்பும் அதிசயம் நடந்து விட்டது! ஐ.ஸி.எஸ். நிறைந்த அதிகார 'வர்க்கம், தங்கள் ஐ.ஸி.எஸ். சகாக்களைக் காட்டித் தராது என்பது ருசுவாகிவிட்டது! 'ஆள் விழுங்கும் புலிகள்'பட்டப்பகலில் நடமாடுவதைத் தானே இது குறிக்கிறது?

பாட்... பாட்... பாட்... பட்... பட்... பட்...

வடை சுடுவது எளிது; அப்பம் சுடு வது எளிது; ஆளைச்சுடுவது அருமை! —இப்படி நினைத்திருந்தோம் ... இப் பொழுது மாற்றிக்கொள்கிருேம்!

அப்பமும், வடையும் சுடுவதுபோல, ஆகாத அரசியல் கட்சிகளை, விரோதக் கொள்கை கூறும் தொண்டர்களைச் சுடுவதும் எளிதுதான் போல் இருக்கி றது!

தடியடிகள் நாள்தோறும் நடைபெற்ற வண்ணம் உள்ளன!

பிரம்படிகள் சர்வ, சாதாரணமாகப் போய்விட்டன!

துப்பாக்கிப்பிரயோகங்கள் தீபா வளிப் பட்டாசு சுடுவதுபோல நடை பெறுகின்றன!

'பட்...பட்...டம்...டப்' என்று கேர ளத்தில் இருந்து ஓசை கேட்டவண்ண மாக இருக்கிறது!

பாட்டின் துப்பாக்கிப்பாட்டு தொட ர்ந்து ஒலித்த வண்ணமாக இருக்கிறது!

நூற்றுக்கணக்கிலே ரவுண்டுகள்! டஜன் கணக்கிலே பிணங்கள்! ஒரே சுடுகாடு! 'போதாத குறைக்குப் பொன் னியும் வந்தாளாம்!' என்ற மாதிரி

போலீஸோடு கடற்படை, இராணுவப் படைகள் வேறு!

இருக்கவே இருக்கிறார்கள், பொது உடைமை அன்பர்கள்! கல்லெறிவது, கத்தியால்குத்துவது, தீயிடுவது,எதிர்க் கட்சியினரை எதுவும் செய்வது அவர்களுக்குப் பிள்ளை விளையாட்டு!

டாங்கே டமாரமடிக்க, ரணதிவே தப்பட்டை முழங்க, இரத, கஜ, துரக பதாதிகளுடன் பாட், சுட்டார்! சுடுகிறார்...இன்னும் சுடுவார்!

அமைதியாகச் சத்தியாகிரகம் செய்பவர்கள் மீது குண்டு அர்ச்சனை!

சத்தியாக்கிரகம் செய்பவர்கள் சாக் காட்டிற்கு அனுப்பப்படுகிறார்கள் !

பிணங்கள் விழுந்தவண்ணமாக இருக்கின்றன! கருப்புக்கொடிக்கு நிறையக்கிராக்கி ஏற்பட்டுவிட்டது !

உங்களுக்கு முதுகளத்தூர்...தவறு முதுகுளத்தூர் நினைவிருக்கிறதா?

ஆயுதம் தாங்கிய கூட்டத்தினர் அராஜகம்,செய்தபொழுது ஏழைகளின் குடிசைகளைக் கொளுத்தி சூறையாடி மனிதனை மனிதன் கொலை பலமுறை யோசித்து நமது சென்னை அரசாங்கம் துப்பாக்கியை ஏந்தியது!

குண்டர்களை நோக்கித்தான் சென்னை அரசாங்கத்தார் சுட்டார்கள்! ஆனால்... அப்பப்பா...இங்கே நம்பூதிரிபாட் கூட்டத்தார்கள் போட்ட கூச்சல்... நமது அரசாங்கம் உடனே 'விசாரணை' அராஜகம் நடந்து கொண்டிருந்தபொழுதே ஆரம்பித்தார்கள்!

'எரியும் தீயிலே ஊற்றிய எண்ணெயா'க பலாத்காரம் பரவுவதற்கு மந்திரிகள் உத்தரவிட்ட 'விசாரணை' வழிவகுத்துத் தந்தது !

பாவம்! நமது மந்திரிகள், பாட்டிடம் பாடம் படிக்கவேண்டும்!

சத்தியாகிரகிகள் மீது சுட்ட பாட்- பலமுறை சுட்ட பாட், ' விசாரணையா? அது எதற்கு?'! என்று ஓங்கி அடித்து விட்டார்!

நாம்—அவரது துணிவைப் பாராட்டுகிறோம்!

திரு. கஸ்தூரி சீனிவாசன் காலமானார்.

'ஹிந்து' பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றிய திரு. கஸ்தூரி சீனிவாசன் அவர்கள் காலமான செய்திகேட்டு மிக்க வருந்துகிறோம்.

பல்வேறு பொது அலுவல்களில் ஈடுபட்டுப் பெருந் தொண்டு செய்துவந்த பெருந்தகை, திரு. சீனிவாசன்.

அருங்கலைகளைப் போற்றி வளர்த்த சங்கங்களில் இருந்து, விளையாட்டுப் போட்டிகள் நடத்தும் மன்றங்கள்வரை அவரது கவனம் விரிந்து செலுத்தப்பட்டு வந்தது.

பத்திரிகைத்துறையில் அவர் ஒரு 'எவரெஸ்ட்'ஆக விளங்கினார். நேரிய செய்திகளையும், பட்சபாதமற்ற தலையங்கங்களையும் வெளியிட்டு ஓர் புதிய பரம்பரையையே உருவாக்கினார்.

உலகப்புகழ்பெற்ற பத்திரிக்கையாக 'ஹிந்து'வை உயர்த்தினார்.

அத்தகைய மேதை இன்று மறைந்துவிட்டார். என்றாலும், அவரது அரும் தொண்டுகள், பொதுநலப் பணிகள், 'காலத்தை வென்ற சாலச் சிறந்த நினைவுச் சான்றுகளாக' இலங்கி அவரது புகழுடம்பை நிலைநிறுத்தும் என்பதுறுதி.

தமிழ்நாட்டின் சிறந்த பெருமைக்குரிய பத்திரிகையாக இலங்கும் 'ஹிந்து'வின் சிற்பியாக விளங்கிய அவரது மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைக் காணிக்கையாக்குகிறோம்.

அட்டைப் படத்தில்

பனிரெண்டாவது வயதில் நிலத்தில் உழுத விவசாயி, 1930-ம் ஆண்டில் உப்பு சத்தியாகிரகப் போரில் கலந்து, இன்று சுதந்திரஇந்தியாவில் கலை வளர்க்கும் கூடத்தின் — விஜயா—வாஹினி ஸ்டுடியோவின் அதிபராகத் திகழ்கிறார். இவரையே—திரு. நாகிரெட்டியையே-நமது இந்தஇதழ் அட்டை பெருமையோடு தாங்கி நிற்கிறது.

எல்லோருடனும் இன்முகத்துடன் பழகும் திரு. ரெட்டியை தென் இந்திய பிலிம் வர்த்தகசபை ஒருமனதாகத்தலைவராய்த் தேர்ந்தெடுத்திருப்பதில் வியப்பில்லை. படத்தயாரிப்பாளரின் கச்சா பிலிம் தேவைக்காகப் போராடி வெற்றியுடன் டெல்லியிலிருந்து திரும்பிய வீரரல்லவா திரு. ரெட்டி!

அன்று...1940-ல் கதர் உற்பத்தி செய்தவர், இன்றும் கதர் ஆடையிலேயே எளிய தோற்றமளிக்கிறார். ‘மூர்த்தி சிறிது என்றாலும் கீர்த்தி பெரிது! “மதராஸ் போகும் போது விஜயா-வாஹினி ஸ்டுடியோவைப் பாருங்கள்” என்று அங்கியப்பிரமுகர்களையும் இந்திய அரசாங்க அதிகாரிகள் சொல்லுவது, இந்த ஸ்டுடியோவுக்கு மட்டுமல்ல, சென்னைக்கே பெருமை தரும் விஷயமாகும். ஒரே சமயத்தில் 12 படங்களை எடுக்க வசதிகளை இந் நிலையத்தில் காணலாம்.

திரு. நாகிரெட்டியின் சிறப்பான சிருஷ்டிப்பணிக்குச் சான்றாக பிரசாத் பிராசஸ், விஜயா தோட்டத்திற்குள் உள்ள மாட்டுப்பண்ணை, கோழிப் பண்ணை ஆகியவற்றையும் குறிப்பிடலாம். இந்தியக்குழந்தைகளின் உள்ளங்களைக் குதூகலப்படுத்தும் அம்புலி மாமா, சந்தமாமா முதலிய பல மொழி சஞ்சிகைகளைத் துவக்கி நடத்தி வருகிறவரும் திரு. நாகிரெட்டியே எனும் போது, இவரை ஓர் ‘அதியமனிதர்’ என்றுஅழைக்கத்தோன்றுகிறதல்லவா?


ஏற்றமும்
"பிரயாண வரி கொடுப்பா.."
அண்ணா
பொதுஜனம்
"பஸ்ஸுக்கும் அதிகம் 3 நயா பைஸா"
STATE
SPORT
"ஐயா? சாமி!"
சுதந்திரக்
கட்சிக்கு
உதவுங்கள்

இறக்கமும்
அரபிக் கடல்
நம்பூதிரி பாட்
மக்கள் எதிர்ப்பு
நான் சுதந்திரக் கட்சி யில் சேரப் போகிறேன்."
"உங்களைத் தவிர வேறு யார் போகப் போ கிறார்கள்.."
ஆராரோ...
நீ யாரோ நான் யாரோ
மஸானி
சுதந்திரக் கட்சி

"The child is the father of the Man!"

—*Wordsworth.*

இன்று பள்ளி செல்லும் ஜான்,

நாளை பாரை ஆளப்போகும் ஜவஹர்லால்!

↓

சிறந்த பிரஜைகளை உருவாக்கும் தேசிய முக்கியத்வம் வாய்ந்த பணியில் ஈடுபட்டிருப்பதில் நாங்கள் மிகவும் பெருமை கொள்கிறோம்!

★

கலைவாணி பப்ளிகேஷன்ஸ்,

202, ஜானி ஜான் கான் ரோடு,

சென்னை-14.

சண்முகம் - சகுந்தலை
(நடிகர்திலகம்
சிவாஜி கணேசன் சகோதரர்
திருமணக் காட்சிகள்

சரவண பிலிம்ஸ்
புரொடக்‌ஷன் நெ. 1ல்
சிவாஜி. சரோஜாதேவி
நம்பியார். M.R. ராதா
தாம்பரம் லலிதா
T.G.R. பிக்சர்ஸ்
இவன் அவனேதான் (ல்)
அம்பிகா

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES
RING SPINNING FRAMES
DRAWING FRAMES
REELING MACHINES
FLY FRAMES
BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes

ENQUIRIES SOLICITED.

TEXTOOL COMPANY LIMITED

Post Box No. 221, Coimbatore. (South India)

Telephone: 409 & 1409 *Telegrams: "TEXTOOLCO"*

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகார வகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத்திரவியங்கள், பவுன்டன் பேனா, சிலேட், பென்சில் வகைகள், ஷாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாயமாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு :

போன் : 333

19, கொட்மலே ரோடு,

நாவலப்பிட்டிய.

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262 த. பெ. நெ. 2345

S. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவனிங் பஜார் :: :: P. T. மதருஸ்.

&

37, ஹைரோடு,

திருநெல்வேலி ஜங்ஷன்.

இவர்தான் டி-காலே

'மணிக்கு ஒரு நாகரிகமாக மாறும் இடம்' பிரான்சு நாட்டின் தலைநகரம் பாரிசுமாநகரைப் பற்றி இப்படிச் சொல்லுவார்கள்.

மனதை வேகமாக மாற்றிக்கொள்வது போல, தங்கள் ஆட்சியாளர்களையும் விரைவில் மாற்றிக்கொள்வது அவர்கள் பழக்கம்!

10 மாதங்களுக்கு மேல் எந்தமந்திரி சபையும் அங்கு நீடிப்பது கடினம்!

அந்த பிரான்ஸின் விதியை மாற்றியவர்தான், ஜெனரல் சார்லஸ்-டி-காலே!

ஆறரை அடி உயரம்; நரைத்த தலை; பரந்து வரும் வழுக்கை; இடுப்பருகில் சதைப்பற்று; கண்ணாடி அணிந்த கண்கள்; இதுதான் டி-காலேயின் உருவம்!

நான்கு சகோதரர்களுடன் பிறந்தவர் டி-காலே; சிறு வயதிலிருந்தே 'பிரான்ஸ்' என்றால் அவர் உயிராக மதித்தார்; பிரஞ்சுக்காரர்களிடமிருந்தே பிரான்ஸுக்கு வரும் ஆபத்துக்களைத் தடுக்கவே வாழ்நாள் முழுவதும் போராடியவர் டி-காலே!

* * *

ஸெயின்ட்ஸியர் இராணுவக்கல்லூரியில் படித்த டி-காலே, முதல் உலகப் போரில் 3 முறை காயம் அடைந்தார்; பிறகு ஜெர்மானியர்கள் சிறையில் 32 மாதங்களைக் கழித்தார்.

போருக்குப் பிறகு ஒரு விருந்திலே சந்தித்த, அழகிய இளம் பெண்ணின் உடை மீது ஒரு கோப்பைத் தேநீரைக் கைதவறிக் கவிழ்த்து விட்டார், டி-காலே! ஐந்தே மாதங்களுக்குப் பிறகு அந்த அம்மையாரே, அவரது மனைவியானார்!

"பிரஞ்சு பாதுகாப்பு அரணை 'மக்னாட்' கோட்டையை எங்கள் 'டாங்கு'கள் தவிடு பொடியாக்கும்; இதை பிரான்ஸில் உங்கள் சிறந்த தொழில் நுட்ப வல்லுநரான டி-காலே மாத்திரம் அறிவார்!" என்றார் ஹிட்லரின் நண்பர் வான் ரிப்பன்டிராப்!

இரண்டாம் உலகப்போரிலே முதலில் பிரான்ஸ் முறியுண்டது. 'பிளிட்ஸ் கர்க்' என்னும் இடத்தில் மாத்திரம் டி-காலேயின் படை வென்றது. இலண்டனுக்குச் சென்று, பிரான்ஸின் போராட்டத்தை அங்கிருந்து நடத்தினார்.

டி-காலே, நேசக்கட்சித் தலைவர்கள் சர்ச்சிலுடனும், ரூஸ்வெல்ட்டுடனும் போட்ட சண்டைகள் வரலாற்றில் இடம்பெற்று விட்டன!

அரசாங்கமற்றஅநாதை டி-காலேயின் உரத்தகுரலைக் கண்டு பயந்துவிட்ட ஜனாதிபதியின் மெய்க்காப்பாளர் ஒருவர், காஸாபிளாங்கா பேச்சு வார்த்தைகளின் போது, டி-காலேயை நோக்கி துப்பாக்கியையே உயர்த்திவிட்டாராம்!

சர்ச்சில் பிறகு சொன்னார்: "தான் யாருடைய கைப்பொம்மையுமல்ல என்று நிரூபிக்க, டி-காலே அவ்வாறு நடக்க வேண்டியிருந்தது!"

* * *

போருக்குப்பிறகு கூட்டு மந்திரி சபை அமைத்தார் டி-காலே; ஆனால் விரைவிலேயே ராஜினாமா செய்தார். அதற்குப் பிறகு பல ஆண்டுகளாக 'அரசியல் அஞ்ஞாத வாசம்' செய்தார்.

அல்ஜீரியப் பிரச்னையில் பல மந்திரி சபைகள் கவிழ்ந்தன. பிரான்ஸ் ஒரே குழப்பத்தில் இருந்தது. பிரஞ்சு மக்கள் டி-காலேயை அழைத்தார்கள்! அவரும் பதவியேற்றார்!

இதுவரை பிரான்ஸின் எந்த ஜனாதிபதிக்கும் இல்லாத பரந்த அதிகாரங்களை அவருக்குக் கொடுத்திருக்கிறார்கள், புதிய அரசியல் சட்டத்தின் மூலமாக!

'பிரான்ஸின் தலைவிதி' என்று அழைக்கப்படும் டி-காலேயின் சீரிய வரலாறு இதுதான்!

—"ஏழைபங்காளன்"

‘மாஜி’ ராஜாஜியும்,
‘மாடர்ன்’ ராஜாஜியும்!

(கருப்பையா, பி. ஏ.)

மதிப்புக்குரிய தலைவர் ராஜாஜி அவர்கள் நமக்கு முன்பாக, மிக மிகக் கோபங்கொண்டவராக, வந்து நிற்கின்றார்—

“காங்கிரசுக்கட்சி, வாக்காளர்களைத் திருப்தி செய்யவேண்டும் என்ற கருத்தோடு, கம்யூனிஸ்டுக்கட்சியின் பாதை வழி போய்க்கொண்டிருக்கிறது; இதற்கு எதிராக சரியான உருவத்தோடும் கொள்கைகளோடும், தைரியத்தோடும் இயங்கிடக் கூடிய எதிர்க்கட்சி, ஏதும் இல்லை. எனவே பலம் வாய்ந்த எதிர்க்கட்சியொன்றை அமைக்கின்றோம்!”

“சமூக நீதியும், சமுதாய நலனும் சோஷலிசக் கோட்பாட்டினுல்தான் ஏற்படவேண்டும் என்பதில்லை. சோஷலிசக் கொள்கையை நாங்கள் முழுமூச்சோடு எதிர்க்கின்றோம்”

“மகாத்மாகாந்தி அவர்கள் குறிப்பிட்ட தர்மகர்த்தாமுறையைத் தான் நாங்கள் பின்பற்ற விழைகின்றோம்.”

“எவருடைய சொத்துக்களையும் பறிமுதல் செய்கின்ற உரிமை அரசினர்க்கு இருக்கக்கூடாது. சமுதாய நலங்கருதி தனியார் சொத்துக்களை அரசினர் பெற முயல்வதாயின், தக்க நஷ்ட ஈடு கொடுக்கப்பட வேண்டும். இதற்கேற்ற வண்ணம், இப்போதுள்ள அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

“விவசாயப் பிரச்னையில் நாங்கள் கூட்டுறவு முறையினை மிக வன்மையாக எதிர்க்கின்றோம்! இப்போதுள்ள நிலையே—அதாவது நிலச் சொந்தக்காரர்கள் எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் வைத்துக் கொண்டு பயிரிடும் முறையே—நீடிக்க வேண்டும். காங்கிரசுக் கட்சி நிலச்சீர்திருத்தம், அதிக உணவு உற்பத்தி என்ற பெயரில் எடுத்து வரும் எல்லாச் செயல்களையும் நாங்கள் கண்டிக்கின்றோம். நிலத்துக்கு உச்ச வரம்பு கட்டக் கூடாது; அரசினர் தானிய வியாபாரம் செய்யக் கூடாது; கூட்டுறவுச் சாகுபடி கூடவே கூடாது! நிலச் சொந்தக்காரர்களையே அதிக உற்பத்தி செய்வதற்கான வசதிகளைச் செய்து விட்டு விட வேண்டும்”

“கனரகத் தொழில்களை மட்டும்தான் அரசினர் எடுத்து நடத்த வேண்டும். மற்றத் தொழில்கள் பூராவும் தனியார் துறைக்கே விடப்படுதல் வேண்டும்”

“வரிவிதிப்பு முறை,மக்களின் நியாயமான வாழ்க்கை நிலையினைப் பாதிக்காத வகையில், அமையவேண்டும். நாங்கள் அதிக வரிகளின்மூலம் அமுல் நடத்தப்பெறும் துரித முன்னேற்றத் திட்டங்களை எதிர்க்கிறோம்”

“அதிகார வர்க்கம் — ஆபீசர்களின் கூட்டம்—பரவலாக வளருவதை நாங்கள் எதிர்க்கிறோம்”

—இந்தக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளுவதாகவும், இவற்றை நிறைவேற்ற “சுதந்திரக்கட்சி” என்ற அமைப்பை நிறுவுவதாகவும், இதனுடைய மாநாடு ஒன்று அகமதாபாத் நகரில் ஆகஸ்ட் திங்களில் கூட்டப்பெறும் என்றும், ராஜாஜி அவர்களைத்

தலைவராகக் கொண்டு, சென்னை, மைலாப்பூர், 'உட்லண்ட்ஸ்' தோட்டத்தில் 4-6-59 அன்று நடத்தப்பட்ட கூட்டத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டத்திலே ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகள் அனைத்தையும் பற்றி, சமீபகாலமாக ராஜாஜி அவர்கள் பிரச்சாரம் செய்து வருகிறார்.

ஆம்; "மகாபாரதத்திலே தருமர் முதலிய பாண்டவர்கள் ஐந்துபேர்களும் எப்படிக்கிருஷ்ண பரமாத்மாவை நம்பினார்களோ, அதுபோல இந்தியா என்றென்றும் காங்கிரசை நம்பவேண்டும். ஏனென்றால், காங்கிரசின் வளர்ச்சியும் தேசத்தின் வாழ்வும் அவ்வளவு நெருக்கமாகப் பின்னப் பட்டிருக்கின்றன" என்று கவர்னர் - ஜெனரலாக இருந்தபோது முழக்கம் செய்த மதிப்புக்குரிய ராஜாஜி அவர்கள் தாம், இப்போது, "காங்கிரசு ஒரு துடைப்பக்கட்டை ஆகிவிட்டது" என்று கூறிக்கொண்டு புதிய கட்சியொன்றினைப் பிறப்பித்திருக்கிறார்.

விளக்குமாறு — காங்கிரசு!

விவேகமுள்ளவர் என்று பேசப்படும் ராஜாஜியின் அழகிய உவமைகளிலே இதுவும் ஒன்று போலும்!

காங்கிரசைத் துடைப்பக்கட்டைஎன்று வைத்துக்கொண்டாலும், அது பயனற்றது என்று ராஜாஜி அவர்கள் சமீபகாலம் வரை குறிப்பிட்டதில்லை.

உதாரணமாக —

28-12-57-ந் தேதிய "சுயராஜ்யா" ஏட்டில் ராஜாஜி அவர்களின் திருவாய்மொழி இது —

"காங்கிரசு நாட்டின் குறைகளையும் குற்றங்களையும் களைய வேண்டுமாயின், அழுக்கு விளக்குமாற்றால் வீட்டைச் சுத்தப்படுத்த முடியாது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே இந்த விளக்குமாற்றை நாம் சுத்தம் செய்வோமாக!"

1957-ம் ஆண்டு இறுதியிலே 'அழுக்கினைக் களைவோம்' என்றவர், 1959-ம் ஆண்டுதொடக்கத்திலே,'விளக்குமாறு வேலைக்குப் பயன்படாது',என்று தமது கருத்தினை மாற்றிக் கொண்டதன் காரணம் என்ன ?

ராஜாஜியின் துடைப்பக்கட்டை விவகாரம் ஒருபுறம் இருக்க, மேலே குறிப்பிடப் பெற்றுள்ள அவரது கொள்கைகள் பூராவுக்கும், அவரது வாய்மொழி மூலமாகவே பதில்தர முயலுவோமாக! ஆம், ராஜாஜியின் கேள்விகளுக்கு ராஜாஜியின் பதில்களையே சமர்ப்பணம் செய்கின்றேன்!

'கன்சர்வேடிவ்' கட்சி அமைப்பதாக முன் வந்திருக்கிறார் ராஜாஜி! 'இருக்கின்ற பொருளாதார நிலை அப்படியே நீடிக்க வேண்டுமென்று விரும்பும் பழமையாளர் கட்சி இந்தியாவில் இடம் பெறுவது, கம்யூனிஸ்ட் கட்சியைச் செல்வாக்குப் படுத்துவதில் முடியும்' என்று சில பெரியவர்கள் எடுத்துக் காட்டிய போது, காரசாரமாகத் 'தமது கட்சியின் மேலான பெயர் அது' என்று புகன்றார்.

'கன்சர்வேடிவ்' மனப்பான்மை என்பது ஏர் உழுபவன் குடிசையிலேயே இருக்க — கந்தல் துணியுடன் காலங் கழிக்க — பெரு மிராசுதார் போகப் பெருவாழ்வு நடத்துவதாகும்; விவசாயத் துறையைப் பொறுத்தமட்டில். இந்தப் பழமையாளர் போக்கை எவரேனும் எதிர்த்தால், "நமது பண்டைய கலாச்சாரமே பறிபோய் விட்டது" என்பார் இவர்.

இதனைக் கிண்டல் செய்து, 'நமது பாரதீய புராதன கலாச்சாரத்தைப் பேணுதல் வேறு; "கன்சர்வேடிவ்கள்" என்று சொல்லி, காலத்தை ஓட்டுவது வேறு', என்று தெளிவாக ராஜாஜி அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்.

"அது (கன்சர்வேடிசம்) நவீன அறிவையொட்டி மாறுபாடுகள் ஏற்படுத்துதலைத் தடுக்கவில்லை. அப்படி மாறுவதற்குத் தவறினால் அழிவு ஏற்படும். பாதுகாப்புக் கன்சர்வேடிவ முறையினை, நாம் தவறுதலாக, உண்மையின் சவக்குழியாக ஆக்குவோமானால் அது நம்முடைய தவருக இருக்குமேயல்லாது நமது மூதாதையரின் குற்றமன்று"

—இப்படி, பாரதிய வித்தியாபவன் வெளியிட்டுள்ள "ராஜாஜியின் பேச்சுக்கள்" என்ற ஆங்கிலப்புத்தகத்தில் எழுதுகிருர்.

இப்போது உண்மைக்குமாருகவும், நவீன அறிவையொட்டி மாறுபாடுகள் செய்துகொள்ள மறுத்தும் 'சவக்குழி' அமைக்கவும் முற்பட்டிருப்பவர் அதே ராஜாஜி அவர்கள் தாம்!

சோஷலிசக்கொள்கையைத் தாம் முழுமூச்சோடு எதிர்ப்பதாக ராஜாஜி அவர்கள், மேலே கட்டுரையின் தொடக்கத்தில் காட்டியிருப்பதுபோல, கூறுகின்ருர்.

1955-ம் ஆண்டு ஆவடியில் நடைபெற்ற காங்கிரசு மகாநாட்டில்தான் சோஷலிசத்திர்மானம், விறுவிறுப்பான வாசகங்களோடு நிறைவேறியது. அதனை அன்றைக்கு ஆதரித்து நீட்டப்பட்ட கரங்களில் முதலாவது கை ராஜாஜியின் திருக்கை!

ராஜாஜி அவர்கள் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர், சென்னை ராஜ்ய முதலமைச்சராக இருந்தபோது, சென்னை ரோடரி சங்கவிழாவிலே கலந்து கொண்டு பேசுகையில்—

"தெரிந்தோ, தெரியாமலோ, உலகம் சோஷலிசப் பொருளாதாரத்தை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதாகபிரதமர் நேரு சொன்னர். இதிலே பீதியடைய ஒன்றுமில்லை"

—என்று குறிப்பிட்டார். உலகம் முழுவதற்கும் சோஷசலிசப் பொருளாதாரம் பரவுதலை அன்றைக்கு வரவேற்றவர், இன்றைக்குச் "சோஷலிசம் என் முதல் எதிரி" என்று கூறுவானேன்!

காந்தியடிகளாரின் தர்மகர்த்தா முறையினைத்தாமும் தமது கட்சியினரும் பின்பற்றப்போவதாக ராஜாஜி அறிவிக்கின்ருர்.

காந்தியடிகளின் பெயரைக் கள்ளச் சந்தைக்காரன் கூடப்பயன்படுத்துவது, துரதிருஷ்டவசமாக, நாட்டிலே வழக்கமாகிவிட்டது.

இல்லாவிட்டால் "அதர்மகர்த்தாக்கள்" கட்சி கூடவா காந்தியத்தைப் பின்பற்றுவதாகப் பொய் பேசும்?

'காந்தியோடுகூட இருந்தவர், அவரது கொள்கைகளைப்பற்றி நன்ருகத் தெரிந்தவர்', என்று பேசப்படுபவர், ராஜாஜி அவர்கள்.

அவரைக் கேட்கிறேன்— 'உட்லண்ட்ஸ்' ஓட்டலிலே ராஜாஜியோடு 4-6-59 அன்று, ஒப்பஅமர்ந்து, ஒருங்கே பேசி, தீர்மானம் நிறைவேற்றியவர்களிலே முக்கியமானர்கள் சிலர், காந்தியடிகள் எவற்றையெல்லாம் வாழ்க்கையின் பெருங்கொடுமைகள் என்று கருதினரோ, அவற்றை அன்ருடம் செய்து வருபவர்கள்!

—இல்லையென்று மறுத்திட நெஞ்சிலே தைரியமுண்டா மாம்பலத்து மாமுனிவருக்கு? குதிரைப் பந்தய ஆட்ட நிபுணர் ஒருவர் தானே, அன்றைய தினம் மூன்ருவது முக்கிய பேச்சாளராக விளங்கியவர்?

போதை தரும் மதுவகை, தங்கி இளைப்பாறக்குளிர் அறை-என்று தேடுகின்ற ஒருவர்-இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலும் ராஜாஜியுடன் கலந்துகொண்ட ஒருவர், அன்றையதினம் வந்திருக்கவில்லையா? "என்னலான உதவிகளைச் செய்கிறேன்" என்று வாக்குத்தரவில்லையா?

5-6-59ந் தேதி "இந்து" பத்திரிகை பட்டியல் போட்டுக் காட்டியதே, அன்றைக்கு கலந்து கொண்டவர்களது பெயர்களையெல்லாம், அவர்களிலே நான்கைந்து பெயரைத்தவிர,காந்தீயம்-தர்மகர்த்தா முறை என்ற சொற்களுக்கு அருகிலேயே போகத் தகுதி படைத்தவர் உண்டா?

"பொருளாதாரசமத்துவத்தின் உண்மையான பொருள் "ஒவ்வொருவனுக்கும் அவனுடைய ஊதியம்தேவையைப் பொருத்த அளவில் தரப்படவேண்டும் என்பதாகும்", அதுதான் மார்க்ஸின் உரையும் கூட. ஒரு தனிமனிதன், ஒரு மனைவி நான்கு குழந்தைகளையுடைய வேருெரு மனிதன், கேட்கின்ற அளவிற்குக் கேட்டால் அது பொருளாதார சமத்துவத்தை மீறுவதாகும்.

—இது மகாத்மா காந்தியடிகளாரின் பொருளாதாரத் தத்துவம்.

இந்த வகையில் கணக்கெடுத்தால் 'தர்மகர்த்தாக்களான' சுதந்திரக் கட்சியின் புதுத்தலைவர்களிலே எத்தனை பேர்கள் பொருளாதாரச்சமத்துவத்தை 'மீருதவர்கள்' என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றேன்!

விவசாயப் பிரச்னையில் ராஜாஜியின் புதியகட்சி, புரட்சிகரமான—அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் கடைப்பிடித்திருக்கக் கூடிய — கொள்கைகளைப் பேசுகிறது! நிலச் சொந்தக்காரர்களிடமே பொறுப்பை விடவேண்டுமாம்!

காரன்வாலிஸ் பிரபு காலத்திலிருந்து "நிலச்சொந்தக்காரர்" என்ற சாதி இருந்து வருகிறது. இருநூற்றாண்டுகளாகப் பொறுப்பை உணர்ந்தவர்கள் செய்ததெல்லாம் என்ன? "உலகத்திலேயே இந்தியக் குடியானவன் மிக மிக ஏழ்மையானவன்" என்ற பெருமையை வாங்கிக் கொடுத்தது தான்!

— இது ராஜாஜி அவர்களுக்கு நன்ருகத் தெரியும்.

அவருடைய திருக்கரத்தால் தீட்டப்பட்ட "அபேதவாதம்" என்ற நூலை மேலெழுந்தவாரியாகப் புரட்டிப் பார்த்தால்கூட புரிந்து விடும், மிராசுதார்கள் அவரிடம் என்ன பாடு பட்டிடுக்கிருர்கள் என்பது!

அதேபோல—

சுதந்திர அரசினர் நாட்டைப் புனரமைப்பதற்கு முன் வந்த போது, ஜமீன்களும், ஜாகீர்களும், மிட்டாதார்களும். மிராசுகளும் அவர்களது கண்களிலே பட்டனர்; விளைவு, "ஜமீன்ஒழிப்புச் சட்டம்." இதனைப் பூரணமாக ஆதரித்ததுமட்டுமின்றி, பெருமையுடன் பாராட்டிப் பேசியுமிருக்கிருர் ராஜாஜி. இது நாடறிந்த உண்மை. ஜமீன் ஒழிப்புக்காக அவரும் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்களும் குட்டிக்கதைப் பிரச்சாரமும் செய்திருக்கின்றனர்.

ஆனல், இன்றைக்கு; "நிலங்களைத் தொடாதீர்கள்; நிலச்சொந்தக்காரர்களின் தர்மகர்த்தா சிந்தனையிலே நம்பிக்கை வையுங்கள்" என்கிருர் அதே தலைவர்!

"அரசினரின் கட்டுப்பாடு என்பதே கூடாது" என்று, மிகக்கேவலமான யோசனையைச் சொல்லுகின்றோம், எனத்தெரிந்தும், மிக்க தைரியத்தோடும் கூறுகிருர் ராஜாஜி.

ஆனல்—

இதே ராஜாஜி அவர்கள்,

"அடக்கு முறையும், அரசியலாரின் தலையீடும் இந்த அரைகுறையான உலகில் தவிர்க்க முடியாதவை" என்று முன்மொழி பகன்றிருக்கிருர்— கவர்னர்-ஜெனரலாக, சீரும், சிறப்பும். அரசாங்கப் பெருமதிப்பும் பெற்று வாழ்ந்தபோது! சந்தேகமுடைய நண்பர்கள் தயவு செய்து 21-6-58-ந் தேதிய "சுயராஜ்யா"வை நோக்கும்படி வேண்டுகிறேன்!

இப்படிப் பேசியவர் கவர்னர்-ஜெனரல் ராஜாஜி அவர்கள்!

இப்போது, "கூட்டுறவுப் பண்ணை அடக்குமுறையின் சின்னம்" என்பவர் வெறும் ராஜாஜி அவர்கள்!

"அடக்குமுறை, தவிர்க்கமுடியாதது" என்று பொறுப்போடு பேசியவர், பதவியிலிருந்தவர்! 'மாஜி' ராஜாஜி!

"நிலச் சொந்தக்காரர்களை அடக்காதீர்கள்; அவர்களிஷ்டப்படி விடுங்கள்" என்று ஆலோசனை வழங்குபவர் பதவியில் இல்லாதவர்! 'மாடர்ன்' ராஜாஜி.

—இதைக் கவனத்திலே வைத்துக் கொள்ளுங்கள்!

கூட்டுறவு உற்பத்தி முறையை ராஜாஜி அவர்கள் எதிர்க்கிருர். அது அநியாயமாம்! ஒரு பாவமும் அறியாத விவசாயிகளை அது ஸ்தம்பிக்கச் செய்து விடுமாம்; அதனல் உற்பத்தி பெருகாதாம்!

கூட்டுறவுமுறை, நேற்றைக்குஇறக்குமதி செய்யப்பட்டதன்று.

அடிக்கடி எந்தக் கம்யூனிஸ்ட சீனத்தைக் காட்டி ராஜாஜி பயமுறுத்துகிருரோ, நாம் அவர்களிடமிருந்து கடன் வாங்கியதாகச் சொல்லுகிருரோ, அந்த ஆட்சி தோன்றுமுன்பே, கூட்டுறவுப் பயிர்முறை பற்றி விவாதித்திருக்கிரோம்!

பம்பாய் சாகுபடி விவசாய நிலச் சட்டம் (1948), பம்பாயில் விவாதிக் கப்பட்டபோது, ரெவினியூ அமைச்சர் "சமூக சமத்துவமும், கூட்டுறவுப் பண்ணை முறையும் காங்கிரசாரின் இலட்சியங்கள்" என்று முழங்கியிருக்கிறார்.

இந்தச் சட்டம் பம்பாய் சட்டமன்றத்தில் நிறைவேறியபின் கவர்னர்-ஜெனரல் ராஜாஜி அவர்களின் அங்கிகாரம் பெற்று அமுலுக்கு வந்திருக்கிறது.

—சிரிக்காதீர்கள், அன்றைய சூழ்நிலையில் அதனைச் செய்து, இன்றைய சூழ்நிலையில் கூட்டுறவை ஏசவும் வந்திருக்கிறார் ராஜாஜி அவர்கள்!

அதுமட்டுமா?

"நிலச்சொந்தக்காரர்களை ஒன்றும் செய்யக்கூடாது; அவர்களையே நியாயமாக நடந்துகொள்ள விடவேண்டும்— அதுதான் தர்மகர்த்தா முறை" என்று புதுக்கொள்கை பேசும் ராஜாஜி அவர்கள் 1951-ல் சென்னை ராஜ்ய முதல் அமைச்சராக அவரே இருந்தபோது, பண்ணையாட்களும் சாகுபடியாளர்களும் நிலச்சொந்தக்காரர்களது தர்மகர்த்தா முறைப்படி இருக்கட்டும், நமக்கென்ன என்று இருந்தார்?

பலத்த எதிர்ப்புக்களுக்கிடையே, "தஞ்சை சாகுபடியாளர் பண்ணையாளர்சட்டம்" அல்லவா நிறைவேற்றினர்!!

அப்போது, இன்றைக்கு ராஜாஜியின் உற்ற நண்பர்களாக உள்ள பலர், தனியாக ஒரு சங்கம் வைத்து ராஜாஜியை எதிர்த்தனர்!

ராஜாஜி தஞ்சை சென்று பேசினர்.

"காலப்போக்குக்கேற்ப மிராசுதார்கள் மாறவேண்டும்; இல்லாவிட்டால் அவர்களுக்கு இன்னமும் சங்கடம் உண்டாகும்!"

—இப்படிப் பேசியவர் "நிலச் சொந்தக்காரர் அருகே போகாதீர்" என்று நமக்குத் தருமோபதேசம் செய்கிறார்!

யாரோ ஒரு தலைவர், "Rajaji is a bundle of contradictions" என்று ஒரு முறை குறிப்பிட்டதாக நினைக்கிறேன்.

—அது எவ்வளவு உண்மை என்று என்று இப்போது தெரிகிறதல்லவா?

தந்தி: குமரன் டெலிபோன்: { மில்: 93 / ஆபீஸ்: 583 }

குமரன் மில்ஸ் லிமிடெட்,

பூளைமேடு P.O. கோயமுத்தூர்.

நிறுவப்பட்டுள்ள கதிர்கள் ... **19,044**

மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு ... **5,900**

நாங்கள் உயர்தரமான 20s 36s 40s 60s 80s நிர். பருத்தி நூலும், 20s நிர். ஸ்டேபிள் பைபர் நூலும் தயார் செய்கிறோம்.

எங்கள் நூலை சென்னை ஆந்திர மாகாணங்களில் மிகுதியாக உபயோகப்படுத்துகிறார்கள்.

Sri G. V. RAMASWAMY NAIDU &
Sri G. V. MUTHUSWAMY NAIDU
Committee of Directors.

குழந்தைகள் கதை:

அன்பும் அறமும்

(கே. ஆர். பானு)

தோட்டம் ஒன்று இருந்தது. நிறைய பூச்செடிகள் இருந்தன. ரோஜா, மல்லிகை, மருதாணி முதலியவை வளர்க்கப்பட்டன. ஆனாலும் மருதாணி மட்டும் ஒருபுறமாக இருந்தது. வீட்டுக்காரனுக்கும் – அவனது மனைவிக்கும் மருதாணிப் பூக்களிடம் அலாதிப் பிரியம்.

தோட்டத்தின் ஒரு பக்கம் மாமரம் ஒன்று இருந்தது. இரண்டு சிட்டுக் குருவிகள் மரத்தில் கூடுகட்டி இருந்தன. குருவிகளின் சப்தம் இசையாக ஒலித்துக்கொண்டிருக்கும்.

மாலை நேரம் ஆகும்.வீட்டுக்காரனும், அவனது மனைவியும் தோட்டத்துக்கு வருவார்கள். ஒவ்வொரு இடமாக நின்று பார்ப்பார்கள்.

மருதாணிச்செடியிடம் வருவார்கள். 'யாவற்றைச் காட்டிலும் மருதாணியின் மணம் சிறந்தது' என்பாள் வீட்டுக்காரனின் மனைவி. வீட்டுக்காரன் கேட்ப்பான்; சிரித்துக்கொள்வாள். மருதாணிப் பூக்கள் அடங்கிய கொத்தைப் பறிப்பான். மனைவியிடம் கொடுப்பான். ஆசையுடன் தலையில் வைத்துக் கொள்வாள்.

* * *

பெண் குருவிக்கு ரொம்பவும் பெருமை. சொல்லிச்சொல்லிக் காட்டும். அதே சமயம் ரோஜாவும், மல்லிகையும் மருதாணியிடம் அலட்சியம் கொண்டிருந்தன.

நாட்கள் ஆகின. மருதாணி பாவம் வாடிப்போய் இருந்தது. ஒரு நாள், வீட்டுக்காரி தோட்டத்துக்கு வந்தாள். வெளியூர் போய் இருந்தாள். மருதாணியைக் கண்டாள். வருத்தம் ஆனது. உடனே தோட்டக்காரனுக்கு உத்திரவு போட்டாள்.

மருதாணிச்செடியைச்சுற்றிக்கொத்தி விட்டான். மணலை அணைத்துக் கொடுத்தான். இரண்டு வேளைகளும் தண்ணீர் விடுவான்.பசுமை காணத் துவங்கியது. பூக்கள் கொத்து கொத்தாகத் தொங்கின.

'வீட்டுக்காரியின்உள்ளம் நல்ல நிலம்' என்றது பெண் குருவி. அகங்காரம் மொண்டன மல்லிகையும்–ரோஜாவும். ஆனாலும் வீட்டுக்காரிக்குப் பிடித்தது மருதாணிப் பூக்கள்தாம். அவளின் அன்புதாம் மருதாணியை வளர்த்தது.

'பெண்களுக்கு அன்பு உடன் பிறந்தது' என்றது பெண் குருவி.

"வா! வா! காட்டுவேன். பிரமாதமாகப் பேசாதே.." என்றது ஆண் குருவி.

* * *

வீட்டுக்காரர் முன் பக்கத்து அறையில் இருந்தார். அவரிடம் வயதுவந்த முதியவர் பேசிக்கொண்டிருந்தார்.

இரண்டு குருவிகளும் சன்னலில் உட்கார்ந்தன. பேசுவதைக் கவனித்தன.

வந்தவருக்கு ஒரு பெண் இருக்கிறாள். குடும்பம் ரொம்பவும் கஷ்டப்படுகிறது. அவளுக்குத் திருமணம் நடக்கவேண்டும்.

* * *

வீட்டுக்காரருக்குத் தெரிந்தவர் இருக்கிறார். அவரிடம் ஒரு பையன் வேலைக்கு இருக்கிறான். நல்லவன்;கெட்டிக்காரன். நண்பரிடம் சொன்னார். அவரும் ஏற்பாடுகள் செய்தார். திருமணமும் நடந்தது.

வந்தவர் சொன்னார்:

"அய்யா! உங்க உதவியை மறக்கமாட்டோம். காலம் உள்ளவரை எங்கள் குடும்பம் கடமைப்பட்டதுங்க..." என்றார். கைகள் குவித்திட்டார்.

வீட்டுக்காரர் தவித்துப் போய்விட்டார். எழுந்திருந்தார்.

"அப்படியெல்லாம் சொல்லாதீங்க. எனக்கு மூத்தவங்க. ஒன்று மட்டும் சொல்வேன். பணம் படைத்தவங்க செய்யவேண்டிய தொண்டு அது. ஏழ்மைப்பட்டவங்களைக் காப்பாற்ற வேண்டியது பொறுப்பு..." என்றார்.

வந்தவர் கிளம்பினார்.

* * *

அந்தக் குடும்பத்திலே அன்பும், அறமும், கருணையும், பாசமும்! இருந்தன! அவை குருவிகளையும் பற்றிக் கொண்டன!

பெண்குருவியைப் பார்த்தது ஆண் குருவி. அதுவோ பேசவில்லை! ஆண் குருவி சொல்லியது:

"ஆண்கள் உள்ளத்திலும் அன்பு பெருகும். இயற்கையாக வரவேண்டும். ஆனாலும் பண்புக் குடும்பம் அது..." என்றது.

பெண் குருவியும் ஒப்புக் கொண்டது; சொன்னது:

"அம்மாதிரி நான் நினைத்தது தவறு. வீட்டுக்காரர் ரொம்ப நல்லவர். தர்மமே கடமையாகக் கொண்டவர்..." என்றது.

*   *   *

நடுப்பகல் ஆனது. சாப்பாட்டு நேரம் வந்தது. ஆண் குருவி சொல்லியது:

"வா! வா! காட்டுவேன். வீட்டுக்காரரும், அவர் மனைவியும் கருணை மிக்கவர்கள்..." என்றது.

இரண்டும் பறந்தன.

சாப்பாட்டு அறையில் பல குழந்தைகள் உட்கார்ந்து இருந்தன. எல்லாம் ஏழைக் குழந்தைகள்.

தட்டங்கள் போடப்பட்டு இருந்தன. சமையற்காரன் உணவைப் பரிமாறினன். குழந்தைகள் ருசித்துச் சாப்பிட்டன. வீட்டுக்காரரும், அவர் மனைவியும் ரஸித்தனர். பாவம்! அவர்

களுக்குக் குழந்தைகள் கிடையாது. அவர்கள் முகம் பெருமையால் பூரித்தது.

பெண் குருவிக்குக் கண்ணீர் வந்து விட்டது.

"உத்தமர்கள்; உயர்வானவர்கள்; கருணை உள்ளம் கொண்டவர்கள்..." என்றது.

"நீயும் பெண் இனம் அல்லவா? இரக்கம் ஏற்பட்டதில் அதிசயம் இல்லையே?" என்றது ஆண் குருவி.

* * *

இரவு ஆகிவிட்டது. ஆண் குருவி ஏதோ கேட்டது. பெண் குருவிக்குக் கோபம். பதில் சொல்லவில்லை.

"நீ இப்படி இருக்கிறாயே? சிறு விஷயங்களுக்கெல்லாம் கோபித்துக் கொள்கிறாய்; என்னோடு வா. காட்டுவேன். வீட்டுக்காரர் மனைவியின் அடக்கம் யாருக்கும் வராது..." என்றது, ஆண் குருவி.

பறக்க ஆரம்பித்தது. பெண் குருவியும் தொடர்ந்தது.

* * *

இரவு உணவு சாப்பிட்டாயிற்று. வீட்டுக்காரர் உட்கார்ந்திருந்தாரர். அவர் மனைவி கீழே உட்கார்ந்திருந்தாள்.

அவர் ஏதோ சொன்னார். குரல் உயர்ந்து இருந்தது. கோபம் போலும்! வீட்டுக்காரரின் மனைவி பணிவுடன் மறுமொழி சொன்னாள்; சிரித்துக் கொண்டாள்.

வீட்டுக்காரர் சமாதானம் கொண்டார். இருவரும் பேசத்துவங்கினர். முன் போன்றே மகிழ்ச்சி அவர்கள் பேச்சில் இருந்தது.

ஆண் குருவி சொன்னது:

"பார்த்தியா! பெண்களுக்கு அடக்கம்தான் அறிவு..." என்றது.

"இனிமேல் ஒன்றுமே எதிர்த்துப் பேசமாட்டேன்..." என்றது, பெண் குருவி.

* * *

வீட்டுக்காரர் திரும்பினார். சன்னலில் உட்கார்ந்திருந்த குருவிகளைப் பார்த்தார். மனைவியிடம் சொன்னார்:

"அந்தக் குருவிகளிடம் எத்துணை ஒற்றுமை! எத்துணை அன்பு..." என்றார்.

"மெய்தாம்'க..." என்றாள், வீட்டுக்காரர் மனைவியும்.

பெண் குருவியைப் பார்த்தது ஆண் குருவி. அதுவோ வெட்கம் மேலிடப் பறந்தது கூடுநோக்கி.

வீட்டுக்காரர் சொன்னார்:

"கூறுவேன்! அன்பும், அறமும், கருணையும், பாசமும் உள்ள வாழ்வுதாம் நம்முடைய கடைசி மூச்சுவரை இருக்க வேண்டும். கடவுள் கருணை வேண்டும்..." என்றார்.

கரங்கள் குவித்திட்டார்!

எங்கும் புகழ்பெற்றதும் யாவராலும் போற்றப்படுவதும்

உயர்ந்த ரகப் புகையிலையினாலும், கைதேர்ந்த ஆட்களைக்கொண்டும் தயார் செய்வதுமான

மங்களூர் லிங்கம் தர்பார் பீடி

எப்பொழுதும் உபயோகியுங்கள்!

தப்பாது ஆனந்தம் தரும்.

விலாசம் :

லிங்கம் தர்பார் பீடி பாக்டரி,

[உரிமையாளர்: T. R. தர்மலிங்க முதலியார்]

31, தேவராஜ முதலித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.



அவர் தேறிய பரீட்சைகள் மிகச் சொற்பம்? ஆனால் அவர் பெற்ற பட்டங்களோ மிகமிக அதிகம்! அது எப்படி? இப்படிப்பட்ட மனிதரை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா! அல்லது கேள்விப்பட்டிருக்கிறீர்களா! உங்களில் பெரும்பாலோர் அவரைப் பார்த்திருக்கமாட்டார்கள். ஆனால் அவர் எல்லோருக்கும் தெரிந்தவர் என்றே சொல்ல வேண்டும்! அவர் யார்? அவர்தான் பிரிட்டிஷ் பிரதமர்...வின்ஸ்டன் சர்ச்சில்!

“போரில் மனிதன் ஒரு முறைதான் இறக்கிறான்! ஆனால் அரசியலில் பலதடவை மரிக்கிறான்” என்று இங்கிலாந்தின் இரும்புமனிதர் சர்ச்சில் பலதடவைகள் கூறி இருக்கிறார். அது அவரது அரசியல் வாழ்க்கையின் அனுபவந்தான்! இன்று எண்பத்தினான்கு வயதாகியும் அரசியல் போராட்டத்தை அவர் முழுவதும் விட்டு விடவில்லை. எப்படி விடுவார்?

பிறப்பு !

1974ம் வருடம் நவம்பர் 30ம் திகதி அவர் பிறந்தார். இங்கிலாந்தின் பிரபுக்கள் குடும்பம். அவர் பாட்டனார் மாரல்பரோ கோமகனாயிருந்தவர். தந்தை பிரபு இரண்டோல்பு சர்ச்சில்! தாயார் அமெரிக்க அழகி ஜென்னி!

பள்ளி வாழ்க்கை !

சர்ச்சிலின் பள்ளி வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருக்கவில்லை. அவரே இதை ஒளிக்காமல் விவரித்திருக்கிறார். “நான் குழந்தையாக இருந்தபோது விளையாட்டுச்சாமான்களை வைத்துக்கொண்டு மகிழ்ச்சியாயிருந்து வந்தேன். நான் ஒரு மனிதனானதிலிருந்து வருடந்தோறும் எனது மகிழ்ச்சி அதிகரித்து வந்திருக்கிறது. ஆனால் இந்தப்பள்ளி வாழ்க்கையானது எனது வாழ்க்கைப் பிரயாணத்தில் ஓர் இருண்ட இடமாகவே இருக்கிறது” என அவர் எனது “இளமை வாழ்க்கை” என்ற நூலில் எழுதியிருக்கிறார்.

பிரிட்டனிலுள்ள புகழ் பெற்ற பாடசாலைகளில் ஒன்றான “காரோ”வில் தாம் கல்வி பயின்று வந்த காலம் முழுதும் தம்மை “ஒரு லத்தின் பாட்டு எழுதும்படி செய்வதிலோ, கிரேக்க மொழியில் அரிச்சுவடியைத் தவிர வேறு எதையும் கற்றுக்கொள்ளுமாறு செய்வதிலோ யாரும் வெற்றிபெறவில்லை” யென்று சர்ச்சிலே கூறுகிறார்! பாடசாலையிலே ஒரே குறும்புதான்! அதற்காக அவர் பெற்ற தண்டனைகளும் அதிகம்தான்!

அபாயமா? அது என்ன!

சர்ச்சில் 21-வது வயதில் படையில் சேர்ந்தார். இந்தியா, சூடான், கியுபா ஆகிய இடங்களில் நடைபெற்ற சிறு போர்களில் ஈடுபட்டார். 1899-ல் படையை விட்டு வெளியேறினார். அரசியலில் நுழைந்தார். பாராளுமன்றத் தேர்தலில் (அந்த ஆண்டிலேயே) படுதோல்வி அடைந்தார்!

‘மார்னிங் போஸ்ட்’ என்ற பத்திரிகையின் யுத்த நிருபராகத் தென்னாப்பிரிக்காவில் வாழ்க்கையை ஆரம்பித்தார்! போயர் யுத்தத்தில் கவச மோட்டாரில் ஏறி தைரியமாக யுத்த களத்தில் நுழைந்து செய்திகளைக் கொண்டு வந்தார். ஒரு சமயம் அவர் போயர்களின் கையில் அகப்பட்டுக் கொண்டார். அவரைச் சிறை செய்தனர் போயர்கள்! ஆனால் சிறையிலிருந்து தப்பினார் சர்ச்சில்! தப்பிய செய்தி போயர்களுக்குத்தெரியவே, “அவரை உயிருடனோ, பிரேதமாகவே கொண்டு வந்தால் சன்மானமளிக்கப்படும்” என்று பிரகடனப்படுத்தினர். ஆனால் சர்ச்சிலோ அதை அணுவேனும் பொருட்படுத்தாது எதிரிகளின் பிரதேசத்திலேயே

நூறு மைல்கள் நடந்து உயிர் தப்பி பிரிட்டனில் ஒரு வீரராக அவரை வரவேற்றனர். அடுத்த ஆண்டில் தேர்தலில் வெற்றி பெற்ருர்!

அரசியல் வாழ்வு!

1903-ல் 'கன்சர்வேட்டிவ்' கட்சியிலிருந்து வெளியேறி 'லிபரல்' கட்சியில் சேர்ந்தார். 1906-ல் அவர்கள் கையில் ஆட்சி மாறியபோது அமைச்சரவையில் இடம் கிடைத்தது. 1909-ல் திருமணம் செய்துகொண்டார். 1911-லேயே 'ஜெர்மனி போருக்குத்தயாராகிறது' என்று கூறிவிட்டார். யுத்த அமைச்சரானுர். போருக்கு ஆயத்தம் செய்தார். 1914-ல் யுத்தம் ஆரம்பமாகியது. அவர் யோசனையின்படி அனுப்பப்பட்ட பல்லாயிரம் வீரர்கள் 'கலிப் போலி'யில் உயிரிழந்தனர். பதவியிலிருந்து சர்ச்சில் வெளியேற்றப்பட்டார். உடனே போர்முகாமிற்குச் சென்று ஜெர்மானியரை எதிர்த்துப் போர்புரிந்தார். மீண்டும் யுத்த அமைச்சரானுர். 1922-ல் தேர்தலில் தோல்வியடைந்தார். சோர்வு அடையவில்லை. 1924-ல் தேர்தலில் வெற்றி பெற்ருர். நிதி அமைச்சரானுர். ஆறு ஆண்டுகள் நிதி அமைச்சராக இருந்து பணியாற்றினுர். தொழிற்கட்சி வெற்றி பெற்றது. 10 ஆண்டுகள் வெளியேயிருந்து நூல்கள் எழுதிக் குவித்தார். தொழிற்கட்சியை அச்சுறுத்திக்கொண்டே வந்தார்.

1932-ல் ஜெர்மனி "மீண்டும் யுத்தத்திற்கு தயாராகிறது" என எச்சரித்தார். 1939-ல் யுத்தம் ஆரம்பமானது. 1940-மே மாதத்தில் முதல்அமைச்சரானுர்.

துணிவு! துணிவு!!

பிரான்சு வீழ்ந்தது; பெல்ஜியம் விழ்ந்தது; போலந்து கவிழ்ந்தது; இங்கிலாந்து வீழ்ந்துகொண்டிருந்தது; சர்ச்சில் அஞ்சாது அறைகூவினுர். "எங்கள் தீவைக்காப்பாற்றுவோம்! என்ன அளவிற்கும் அஞ்சோம்! கடலிலே போர் செய்வோம்! எதிரி இறங்குமிடம் எல்லாம் போர் செய்வோம்! வயல்களில், வீடுகளில், வீதிகளில், மலைகளில் எங்கெங்கும் போர்செய்வோம்! ஒரு போதும் சரணடைய மாட்டோம்!"

ஹிட்லரை முறியடித்த மாபெரும் பெருமை இங்கிலாந்தின் இரும்புமனிதரான சர்ச்சிலேயே சாரும்! அவரின்றேல், இன்று ஜனநாயகம் அழிந்திருக்கும் என அரசியல் மேதைகள் கூறுகின்றனர். யுத்தம் முடிந்ததும், 'யுத்தத்திற்குத்தான் அவர் தகுதியானவர், ஆக்க வேலைக்கு அவர் லாயக்கில்லை' என்று தீர்மானித்தார்கள் ஆங்கிலேயர்கள்.

அபாயத்திற்குப் பயந்து ஓடாதே!

சர்ச்சில் ஒரு தடவையாவது அபாயத்திற்குப்பயந்து ஓடியதில்லை. ஆனுல் அவர் அபாயம் இருக்கும் இடத்திற்குத்தேடிச்சென்ருர் என்றே கூறலாம். அக்காலத்தில் விமானப்பிரயாணம் செய்வதென்ருல் உயிரைப் பணயம் வைத்து விளையாடுவது என்றுதான் அர்த்தம்! ஆனுல் அந்த நாளில் அவர் விமானத்தில் பறந்தது மட்டுமின்றி தாமே விமானத்தை ஓட்டியும் சென்ருர். விமானத்துடன் கீழே விழுந்து மயிரளவில் அவர் உயிர் தப்பியது பலதடவை! விமானத்தில் பறக்க வேண்டாமென்று அவரை அரசாங்கம் எவ்வளவோ கேட்டுக்கொண்டும் அவர் அதைப் பொருட்படுத்தவே இல்லை! அபாயத்தில் வாழ்வதில் அவருக்கு ஒரு தனிமகிழ்ச்சி! அவரது நீதி வசனம் "அபாயத்திற்குப் பயந்து ஓடாதே" என்பதுதான்!

தோற்றம்

"பயமுறுத்தும் அபாயத்திலிருந்து புறமுதுகு காட்டி ஓடக்கூடாது. அவ்விதம் செய்தால் அபாயம் இருமடங்காகிவிடும்! பின்வாங்காது தைரியமாக அதை எதிர்த்து நின்ருல் அபாயம் அரைவாசியாகக் குறைந்துவிடும்" என்பதே சர்ச்சிலின் அனுபவ வாக்கு!

நடுத்தர உயரம்! பருத்த உருவம்! உருண்டு திரண்ட வழுக்கைத்தலை, நீண்ட சுருட்டு, தெளிந்த சிந்தனை பரந்த அரசியல் அறிவு, இரக்கமற்ற எதிர்வாதம்.........இவை சர்ச்சிலின் குணங்கள்!

உள்நாட்டுக்கொள்கைகளில் புரட்சி, வெளிநாட்டுக் கொள்கையில் தடித்த ஏகாதிபத்தியம்...இவையே அவரது அரசியல் கொள்கைகள்.

நோபல் பரிசு!

ஓவியம் தீட்டல், நூல் எழுதல், பேசுதல், இவைகளே அவரது பொழுது போக்குகள். "இரண்டாவது உலகப்போர்" என்ற நூலை ஆறு தொகுதிகளாக எழுதி வெளியிட்டார். அதற்காக அவருக்கு "நோபல் பரிசு" வழங்கப்பட்டது.

விழாவிலே!

1953-ம் வருடத்தில் எலிசபெத் அரசியார் தங்கவாளினால் சர்ச்சிலின் தோளைத்தொட்டு "நைட்" பட்டம் ('சர்' பட்டம்) வழங்கினார். விண்ட்சர் அரண்மனையில் அரசியார் முன் முழந்தாளிட்டு வணங்கி இந்தக் கவுரவத்தைப்பெற்றுக்கொண்டார்.

1954 ஜூன் 24ம் தேதி சர். வின்ஸ்டன் சர்ச்சில் பிரிட்டனின் மாபெரும் வீரர் பரம்பரையில் ஒருவராகச் சேர்க்கப்பட்டார். "மகத்துவமிக்க கார்ட்டர் வீரர் "பரம்பரையில் அவர் சேர்க்கப் பட்டார். அன்று பிரிட்டனைச் சேர்ந்த வின்ட்சரிலுள்ள அர்ச். ஜார்ஜ் தேவாலயத்தில் இந்தச் சடங்கு நடைபெற்றது. 'காணுதற்கு அரியதாய், மின்னொளி விசுவதாய், இசை நலம்நிறைந்ததாய்' இருந்தது. ("தோள் கண்டார் தோளே கண்டார்" என்னு கவி கம்பன் கூறியது இதற்கு முற்றிலும் பொருந்தும்). இந்த விழாவானது அன்று 80 வயது நிரம்பிய பழுத்த அரசியல் மேதையான சர். சர்ச்சிலின் வாழ்க்கையிலேயே உள்ளத்தை உருக்கும் ஒரு பெரிய விழாவாக விளங்கியது...இன்று அவருக்குள்ள மதிப்பு வேறு யாருக்குமே இல்லை என்று கூறினால் மிகையாகாது.

(தொகுத்தவர் : திருமால்)

"அஞ்சுகமே! உன் நெஞ்சிலே என்னைப் பார்க்க முடியவில்லையா?"
தேவர் பிலிம்ஸ்: "வாழ வைத்த தெய்வம்"



இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட் மதராஸ்-1.

தொழிற்சாலை : சங்கர்நகர், திருநெல்வேலி ஜில்லா

IC 424

மக்கள் விரும்பும்

ராமகிருஷ்ண

பீடிகள்

P.R. ஆறுமுகநாடார் & சன்ஸ்

முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா.

9. சந்திப்பு

வள்ளிக்கண்ணன்

கண்கள் எத்தனை எத்தனையோ உருவங்களால் வசீகரிக்கப்படுகின்றன. ஆயினும் ஒருமுறை கண்ட ஒரு உருவை மீண்டும், மீண்டும் காணத் துள்ளுகின்றன அவை! கவர்ச்சிக்கும் சக்தி பெற்ற அந்த எழில் உருவம் எதிரே இல்லாத போது, 'அது எங்காவது தென்படுமா?' என்று விழிகள் சுழல்கின்றன. அந்த உருவைக் கண்டு விட்டதும் தனி ஒளி பிறக்கிறது சுழலும் கண்களிலே!

மனம் எவ்வளவோ விஷயங்களைப் பற்றி எண்ணாமலில்லை. எனினும், எப்பொழுதோ கண் வழியே உள்ளத்தில் புகுந்து விட்ட ஒரு உருவத்தைப் பற்றி எண்ணிக்கொண்டே இருப்பதில் அது தனி இன்பம் பெறுகிறது. மற்றவர்களிடம் காண முடியாத அழகை, இனிமையை, தனித்தன்மையை அந்த உருவத்திடம் காண்பதாக நினைவு வர்ணம் பூசுகிறது. அந்த நினைப்பே மிக்க சுவை உடையதாகி விடுகிறது!

ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது தான் இது. எந்தக் காலத்துக்கும்—எந்த இடத்தில் உள்ளவருக்கும்-பொது நியதி தான் இது.

இளம்வழுதியின் உள்ளமும் இதே நிலையில் தான் இருந்தது. 'கூரிய வாளினும் ஒளி பொருந்திய பார்வையைத் தன் மீது வீசித் தனக்குத் தீராத நோயை உண்டாக்கி விட்ட அந்த அழகுக் கொடியை மறுபடியும் சந்திக்க வேண்டுமே?' என்று தவித்தது அது.

'காலையில் அரும்பிய' நோய் தான் அது. 'பகல் எல்லாம் போதாகி' வளர்ந்த அது—அவன் உள்ளத்தின் வேறு உணர்ச்சித்தீயினால் கருகி மடிந்தாலும் மடிந்து போயிருக்கலாம். ஆனால் காலத்தென்றல் துணை புரிந்து மறுநாள்-'மாலையில் மலரும்'படி செய்து விட்டதே! ஆற்றங்கரையில் சந்தித்த சிற்றிடைச் சிங்காரியை மறுபடியும் கோயிலுக்குச் செல்லும் வழியில் கொண்டு வந்து நிறுத்தி விட்டதே!

நோய் புகுத்திவிட்ட மின்னல் பார்வை தானே 'நோய் தீர்க்கும் மருந்து' ஆகவும் திகழ முடியும்? அவன் மனக்கொதிப்பை ஆற்றவல்ல அமுதமாக விளங்கக்கூடிய அவள் பெயரும் அமுதம் என்று தானே இனித்தது?

அவன் மனம் அவளை நாடியது. அவன் விழிகள் அவளைத் தேடின. 'அவள் யார்? எங்கே இருப்பவள்? அவளை மறுபடியும் காண்பது எப்படியோ?'—உணர்வின் அலைகள் ஒன்றின் பின் ஒன்றாக எழுந்து மோதின அவன் உள்ளப்பரப்பிலே. அதன் பயனாகப் பெருமூச்சு தான் விம்மி, விம்மி வடிந்தது.

யவனனிடமிருந்து அந்த அழகுப் பூங்கொடியைப்

பாதுகாத்த தன் பிறகு தொடர்ந்து நிகழ்ந்த சம்பவங்களின் புதுமையினாலும், அவை எழுப்பிய உணர்வுத் துடிப்புகள் காரணமாகவும் இளம் வழுதியின் உள்ளத்தில் அவள் நிழலாடாமலிருந்தாள். பின்னர் அமைதி ஏற்பட்டதும், கலங்கிக்குழம்பிய நீர்ப்பரப்பில் தெரியாமல் பதுங்கிய சந்திர பிம்பம், குழப்பம் ஒடுங்கியதும் மிகத் தெளிவாகத் தென்படுவது போலவே, அவளுடைய உருவம் 'பளிச்'சென ஒளிர்ந்தது. குறுகுறுக்கும் கருவிழிகளும், புன்னகை மலரும் செவ்விய உதடுகளும், குமிழ்நாசியும், குழிவுபடியும் வழுவழுப்பான கன்னங்களும், காவிய ஏடு போன்ற நெற்றியும், மேகக் கற்றைகள் போன்ற கூந்தல் சுருள்களும் எதிர் நின்று வதை செய்வன போல் அவன் நினைவில் பசுமையாய் எழுந்தன.

மாமூலனாரைப் பற்றியும், மங்கையர்க்கரசி பற்றியும், சாத்தன் கணபதி செய்த உதவி பற்றியும் அவன் எவ்வளவோ சிந்திக்க வேண்டியிருந்தது. ஆலோசனைக் கூட்டத்தில் பேசப்பட்ட எண்ணங்களை அவன் தனித்திருந்து அலசி ஆராய வேண்டியிருந்தது. அக்கூட்டம் தந்த புத்துணர்வோடு, பெருமிடுக்கோடு வெளியேறிய அவன்

பாதையில் வலிய வந்து குறுக்கிட்ட வர குணத் தேவரைப் பற்றியும், அவருடன் வம்பு செய்ததால் இனிமேல் விளையக் கூடிய ஆபத்துகள் பற்றியும் அவன் நிதானமாக எண்ணிப் பார்க்கத்தான் வேண்டும். எண்ணிப் பிரித்துத் திட்ட மிடுவதற்கா விஷயங்கள் இல்லாமல் போயின இளம்வழுதியின் மனக்குகை யிலே?

ஆனால், அவனது அறிவுத்துடிப்புக் குத் திரையிட்டுவிட்டது உணர்ச்சி களில் எல்லாம் மிகுந்த வலிமை பெற்ற உணர்வு. இரவும், தனிமையும் அவ் உணர்வுத் தீயைத் தூண்டி விட் டன. ஆகவே, அவன் எண்ணத்தில் அவளே நின்றாள். அவன் கனவில் அவளே சிரித்தாள். அவனுடைய ஏக்கமேயானாள் அழகி அமுதவல்லி!

அவள் எங்கிருப்பாள் என்பது மட் டும் தெரியுமானால், அவன் நள்ளிரவு என்று கருதமாட்டான்; எதிர்ப்படக் கூடிய தடைகள், இன்னல்கள் எதை யுமே பொருட்படுத்த மாட்டான்! காதல் எனும் வில் உந்தி விட்ட அம் பாக மாறி அவன் நேரே விரைந்தோ டித் தனது ஆசையின் எல்லையாக விளங்கிய அழகியைத் தொட்டு விடு வானே? அவள் இருப்பிடம் தெரியா தது தானே பெரிய தடையாகிவிட்டது இப்போது?

நினைவின் நிழலாகப் பூத்துக் குலுங் கிய அமுதம் அவன் கனவின் உயிராகி, உணர்வில் விளையாடி, அதிகாலையி லேயே அவனுக்கு விழிப்பு புகுத்தி விட்டாள்!

முந்திய தினம் போலவே அன்றும் வைகறை வேளையில் ஆற்றை நோக்கிச் சென்றால் அவளைக் காணமுடியும் என்று அவன் மனம் ஆசை காட்டியது. அவன் 'போகலாமா வேண்டாமா?' என்று ஒரு கணம் தயங்கினான். ஆசை அவனை இழுத்துச் சென்றது. அவ்வாறு செல்லும்போது அவனுக்கு ஒரு வருத் தம் ஏற்படத்தான் செய்தது. 'அமுத வல்லி அங்கு தனியாக வரமாட்டாளே; அவளுடன் மற்றும் பல பெண்களும் வருவார்கள் அல்லவா?' என்ற நினைப்பு தான் அதற்குக் காரணம்.

ஆனால் அன்று அவனுக்கு நல்ல வாய்ப்பாகவே அமைந்தது. அமுத வல்லி தோழிகள் சூழ வரவில்லை. ஒருத்தி துணை வர அழகு மயிலென அசைந்து வந்தாள் அவள். தூரத்தில் கண்ட பொழுதே அவன் உள்ளம் உவகையால் நிரம்பியது. அவள் முகம் இனிய தாமரை போல் மகிழ்வால் மலர்ந்தது. அவளும் அவனைப் பற்றி எண்ணிக் கொண்டேதான் இரவுப் பொழுதை ஓட்டி அடைத்திருக்கிறாள் என்பதை அவள் முகமலர்ச்சியும், விழி களின் தாவுதலும் காட்டிக் கொடுத் தன!

அவளுடன் வந்த துணை கூட முதல் நாள் மாலை நேரத்தில் அவளோடு கோயிலுக்குச் சென்றவள் தான் என அறிந்தான் அவன். அவள் வேண்டு மென்றே, பலருடன் நீராடக் கிளம்பா மல், அத் தோழியுடன் புறப்பட்டு வந் திருப்பாளோ என்று ஐயுற்றான் வழுதி.

அமுதவல்லியின் செவ்விதழ்களூடே மூன்றாம் பிறை போல் இள நிலவுப் புன்னகை தெரிந்தும், தெரியாதவாறும் இலங்கியது. அவளாகப் பேச்சு உதிர்க்க முன்வருவாள் என்று அவன் எதிர் பார்க்கவில்லை. மேலும் இன்று அவனுக்குப் பேசுவதற்கு உரிமையும் அவசியமும் இருந்ததாகவே அவன் கருதினான்.

'நேற்று நீங்கள் இரண்டு பேரும் விபத்து எதுவும் இல்லாமலே வீடு சேர்ந்திருப்பீர்கள் என்றுநினைக்கிறேன்' என்றான் இளம்வழுதி.

மகிழ்வும் நாணமும் கொண்ட அமு தம் வெறுமனே தலையசைத்தாள். அவள் தோழி 'ஆமாம்' என்றாள். 'நீங் கள் குறுக்கிட்டிராவிட்டால் எங்களுக்கு என்ன நேர்ந்திருக்குமோ! நல்ல வேளை நீங்கள் காப்பாற்றினீர்கள்' என்றும் சொன்னாள்.

'வீடு போய் சேருகிறவரை எங் களுக்கு ஒரே பயம் தான்' என்று மென் குரலில் பேசினாள் அமுதம். 'இன்பத் தேன்' நனைத்தது இளம் வழுதியின் செவிகளை!

'அதற்குப் பிறகும் கூட அமுதத்துக்கு பயமாவது பயம்!' என்று குறும்பாகப் பேச்செடுத்தாள் தோழி.

'பேசாமலிரு!' என்று விரலால் வாய் புதைத்து, சைகை செய்தாள் அமுத வல்லி.

'பயம் ஏன்?' என்று கேட்டான் அவன்.

'நமக்கு உதவி புரிய வந்தவர் என்ன ஆபத்தில் சிக்கிக் கொண்டாரோ! களப்பிரர்கள் பொல்லாதவர்கள் ஆயிற்றே! தனியே அகப்பட்டுக் கொண்டு அவர் என்ன பாடு படுகிருரோ என்று தான். வேறு எதற்காக பயப்படப் போகிருள் அவள்? அல்லது, யாருக்காகக் கவலை கொள்ளப் போகிருள்?' என்று கூறிச் சிரித்தாள் தோழி.

'பேசாமல் இரடி!...ஐயோ, பேசாமலிரேன்!' என்று அமுதம் தொடர்ந்து தொல்லைப்படுத்தியதையும் தோழி பொருட்படுத்தவில்லை. சிரித்துக் கொண்டே சொன்னுள்.

'இரவு முழுவதும் இவளுக்குத் தூக்கமே கிடையாது. களப்பிரர்கள் வெறித்தனமாக ஆடி ஓடி அமர்க்களப் படுத்திக் கொண்டிருந்தார்களா? ஐயோ பாவம், அவர் எப்படித் தான் தப்புவாரோ—எங்கே போய் மறைந்திருப்பாரோ என்று வருத்தப்பட்டு வாடித் தவித்தாள். தூங்கலாம் என்று கண்ணை மூடினுல், மனம் தூங்கவா செய்கிறது? காப்பாற்ற வந்தவரை அநேக களப்பிரர்கள் துரத்துவது போலவும், குதிரை வீரர்கள் வந்து விரட்டுவது போலவும், சண்டை போடுவது போலவும் கனவுகள்...ஆனுல் ஒன்று...எந்த நிலைமையிலும், நெருக்கடியிலும் வெற்றி அந்த வீர இளைஞருக்குத்தான் இல்லையா?' என்று கேட்டபடி தோழி அமுதத்தைப் பார்த்தாள்.

வெட்கமும் மகிழ்ச்சியும் பொங்கிப் பரவ, முகம் தாழ்த்தி நின்ற தலைவி 'போடி!' என ஒற்றைச் சொல் சிந்திஞள்.

அவள் நின்ற தோற்றமும், தலையை ஆட்டிச் சொல் உதிர்த்த விதமும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் காந்தக் காட்சிகளாகவே விளங்கின அவனுக்கு. அவன் ரசித்துச்சிரித்தான்! 'பின்னே அமுதவல்லி இப்போ பேசாமலே நிற்கிருளே?' என்ருன்.

'உன் பெயர் கூட அவருக்குத் தெரிந்திருக்கிறதடீ! அப்புறமென்ன?' என்று கெண்டை பண்ணிஞள் தோழி.

அமுதவல்லியின் அகன்ற கண்களின் சுடர்மணிகள் விழிக்கடையில் ஒதுங்கின. அவனைக் கண்டு மகிழ்வதற்காகத் தான். உள்ளத்தில் விம்மிய மகிழ்வுப்பேரலையின் சிறுநுரை போல் இளநகை ஒதுங்கியது அவள் இதழ்க் கடையில். எனினும் அவள் முணமுணத்தாள்.

'நேரமாகிறது...எல்லோரும் வந்து விடுவார்கள். வா'

அவள் நகர்ந்தாள். தோழியும் நடந்தாள்.

'உன் பெயர் எனக்குத் தெரியாதே? அதைச் சொல்ல வேண்டாமா?' என்று விளையாட்டாகக் கேட்டான் வழுதி.

'தெரிய வேண்டிய பெயர் தெரிந்து விட்டதல்லவா? அது போதும்' என்று சொன்னுள் தோழி.

திரும்பிப் பாராமலே நடந்தாள் அவள். அமுதவல்லி திரும்பி நோக்கியவாறே போனுள். 'யாராவது வந்து விடப் போகிருர்கள்!' என்று அவளுடைய தோழி அவளுக்கு எச்சரிக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது இப்பொழுது.

அவ்விதம் எச்சரிப்பதற்கு அருகில் எவரும் இல்லாததனுல் இளம் வழுதி அமுதவல்லி மீது வைத்த விழிகளை வேறுபக்கம் திருப்பாமலே நின்ருன். அவள் பின் சென்ற மனதைச் சுண்டி இழுக்கும் நினைப்பற்றவனுகவே நின்ருன். அவள் காட்சி எல்லையிலிருந்து மறைந்து விட்ட பிறகும் கூட அத்திசையிலேயே பார்வை பதித்து நின்ற அவனை விழிப்புறச் செய்வதற்கென்றே வருவது போல் பேரோசை ஒன்று எழுந்தது. நெருங்கி வருவது போல் ஒலித்தது.

முதலில் தெளிவற்றுக் குழம்பிய ஒலி அலைகளாக மிதந்து வந்த ஓசை சிறிது சிறிதாகப் புலனுகியது. பலப்பல குதிரைகள் வேகமாக அடிபெயர்த்து முன்னேறுவதாக உணர்ந்தான் அவன். அவனுடைய அறிவின் குரலுக்குக் கீழ்ப்படிந்து, இளம்வழுதி பாதையை விட்டு விலகி மரங்கள் நின்ற ஒரு பகுதியில் புகுந்து மறைவாக நின்ருன்.

தரையிலிருந்து பொங்கியெழும் புழுதி மேகப்படலம் போல் கவிய, அதை ஊடுருவியவாறு குதிரைகள் பாய்ந்தன. தேர்ந்தெடுத்த மிடுக்கான குதிரைகள் மீது எடுப்பாக வீற்றிருந்த வீரர்கள் களப்பிரர்கள் தான் என்பதை எவரும் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. இளம் வழுதிக்கு

முதலிலேயே அது விளங்கி விட்டது. ஆனால், 'இவ்வளவு அதிகாலையில் அவர்கள் எங்கே கிளம்பிவிட்டார்கள்?' என்பதை விளக்குவதற்கு யாருமில்லையே என வருந்தினன் அவன்.

சாத்தன்கணபதியைக் கண்டு பேசி, ஏதாவது ஆலோசனை செய்யலாம் எனும் எண்ணத்தோடு அவன் வேகமாக நடந்தான். பூங்குடி ஆச்சியின் இருப்பிடம் சேர்ந்த போது அவனுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. அங்கு அவனது நண்பன் இல்லை. 'அவன் எங்கே போயிருக்கிருன், எப்பொழுது திரும்பி வருவான் என்று தன்னிடம் சொல்லவில்லை — தனக்குத் தெரியவும் தெரியாது' என்று மீனாட்சி ஆச்சி அறிவித்தாள்.

அடுத்து அவனுக்கு மாமூலனாரின் நினைவுதான் வந்தது. அவரைக் காண்பதற்காக இளம்வழுதி சென்றான். வழி நெடுகிலும் பரபரப்பு மிகுந்திருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது. இரண்டு மூன்று பேராக நின்று ஜனங்கள் கூடிப் பேசுவதும், சந்தேகம் எழுப்பக் கூடியவர்களைக் காணும்போது தத்தம் அலுவல் மீது செல்வோர் போல் பிரிந்துபோவதும் அவன் கவனத்தில் பதிந்தன. குறிப்பிடத் தகுந்த ஏதோ ஒன்று நிகழ்ந்திருக்கிறது—அல்லது, முக்கிய நிகழ்ச்சிகள் எழுவதற்குரிய அறிகுறிகள் தோன்றியிருக்கலாம்—என்று எண்ணினன் அவன்.

யாரிடமாவது பேச்சுக் கொடுத்து என்ன விஷயம் என்று அறிய வேண்டும் எனும்ஆசை அவனுக்கு எழுந்தது. இருப்பினும் அதைச் செயல்படுத்த முனையவில்லை அவன். மற்றவர்கள் அவனைச் சந்தேகிப்பதாகத் தோன்றியது அவனுக்கு. எனவே அவன் எவரிடமும் பேசுவதற்காக நிற்காமல் மாமூலனார் வீடு தேடி நடந்தான்.

அவர் வீடு பூட்டியே கிடந்தது. அங்கும் ஏமாற்றமே எதிர்ப்படவும் அவன் உள்ளத்தில் சிறிது வருத்தம் எழுந்தது. பிறகு குறிப்பற்று, திட்டம் எதுவுமற்று, கால் இழுத்துச் சென்ற வழியிலே நடந்தான் இளம்வழுதி.

அத்திருநகரிலே அவன் தனியன். அவ்வேளையில் அவனுக்குத் துணை நிற்பவர்கள் யாருமில்லை என்றே தோன்றியது. தனது இதயத்துடிப்பை எதிர்காலத்தின் ஒளிநிரம்பிய செயலாக மாற்றுவதற்கு அவன் எவரெவர் துணையை நாடலாம் என்று எண்ணினனே, அவர்கள் எல்லோரும் இறுதி வரையில் அவனோடு நிற்பார்களா; அவர்களை நம்பலாமா?' என்றுஅவனால் தீர்மானிக்க இயலவில்லை. அதற்காக அவன் மனம் தளர்ந்து விடவுமில்லை.

அவனைத் தனிவழியிலே அனுப்பத் துணிந்த அவனுடைய அன்னை—நிகழ்காலத்தின் இருளை அகற்றி எதிர்காலத்திலே நாடுமுழுவதும் பேரொளி பரப்புவதற்குத் தகுந்தவனாகத் தன் மகன் வளர வேண்டும் என்ற ஆசையோடு அவனுக்குப் பயிற்சிகள் பலவும் அளித்த நற்றாய்—அவனுக்கு அடிக்கடி போதித்திருந்தாள்:

'வழுதி, உனது வீரம்தான் உனக்கு உறுதியான துணையாகும். உடல் வலிமையும், அறிவின்பலமும், உள்ளத்தின் உறுதியும்தான் உனக்கு இறுதிவரை துணை நிற்கக்கூடிய சக்திகளாகும். அவற்றை நம்பிச் செயல்புரிவாயாக!'

தன் தாயின் வார்த்தைகளை இளம்வழுதி மறந்தவனல்லன். மேலும், வீரத்துக்கு எத்தகைய மதிப்பு இருந்தது என்பதை அவனாகவும் அறிந்து கொண்டிருந்தான். ஆகையால் அவன் உள்ளம் எளிதில் சோர்வு அடைந்து விடாதுதான்.

இருமுறைகள் ஏமாற்றம் அடைந்த இளம்வழுதிக்கு அளவிலா ஆனந்தம் அளிக்க விரும்பியது போல் சந்தர்ப்பம் செயலாற்றியது.

அவன் எங்கெங்கோ அலைந்து திரிந்தபோது ஒருவீதியில் ஒரு வீட்டின் சாளரம்ஒன்றிலே அவன் மனதுக்கினிய காட்சி பூத்தது. வியப்புடன் அவனையே

கவனித்தபடி தோன்றிய அழகுமுகம் அமுதவல்லியினுடையது என்பதைக் கண்டு கொண்டதும் அவன் களிப் படைந்தான். உவகையுடன் அவ் வீட்டை அணுகும் வேளையில், சாளரத் துச் சுந்தர உதயம்திடீரென்று மறைந்து விட்டது.

வாடிய அவன் முகம், மீண்டும் மகிழ் வால் முழுதலரும்படி ஒரு வாசலில் தோன்றினுள் அமுதம். அவனை அழைத்தாள். அவனும் அவளோடு வீட்டின் பின்புறத் தோட்டத்தில் அடி எடுத்து வைத்தான்.

'உன்னை இவ்வேளையில் இப்படிச் சந்திக்க முடியும் என்று நான் எண் ணவேயில்லை' என்று அவன் சொன் னுன்.

அவள் மகிழ்வு குலுங்கத் தலையசைத் தாள். 'நானும் நினைக்கவில்லை. நீங்கள் தனியாக இந்நகர வீதிகளில் திரிவது ஆபத்து இல்லையா?' என்ருள்.

'எது வந்தாலும் ஏற்றுக் கொள்ளும் பண்பு என்னுடையது. அஞ்சியிருந் தால் பொட்டுப் பூச்சி போல் இருளில் ஒண்டிக்கிடக்க வேண்டியதுதான்' என்று அவன் கம்பீரமாக மொழிந் தான்.

பெருமையும், வியப்பும் கலந்த பார் வையைப் பரிசளித்தாள் அவள். அவ னிடம் எவ்வளவோ பேசவேண்டும் என்று தவித்தது அவள் மனம். ஆனுல், நாணம் அவள் உதடுகளுக்குப் பூட்டு போட்டுவிட்டது! அவளது எழில் விழி கள் அவன் முகத்துக்குச் சென்றன. அங்கேயே தங்கி, ஒளி தெறிக்கும் அவனுடைய கண்களைப் பார்வையால் தொட்டு இன்புற வேண்டும் என்று துடிப்பது போல் இமைகள் படபடத் தன. ஆயினும், அத்துணிவு இல்லா தவை போல் அவை வேகமாய்த் தரை நோக்கிப் பாய்ந்தன!

'சட்'டென எண்ணிக் கொண்டவள் போல் அவள் பேசினுள்: 'உங்களைக் காண என் தாய் மிகுந்த மகிழ்ச்சி அடைவாள். அவளை அழைத்து வரு கிறேன்...''

அவன் வியப்புடன் கேட்டான்! "நீ என்னைப் பற்றி உன் பெற்ருேரிடமும் சொல்லி விட்டாயா?' என்று.

'ஊங்' என ஒயிலாகத் தலையசைத் தாள் அவள் நீருற்றுப் போல் குமிழி யிட்டுப் பொங்கிவந்த சிரிப்பை அடக்க முடியாதவளாய் முறுவலித் தாள். 'உதவி புரிந்தவர்களை மறந்து விட முடியுமா? எனக்குக் காலம் அறிந்து உதவி செய்தவர்களைப் பற்றி நான் பேசாமல் இருக்க முடியுமா?' என்ருள். மோகனமாய்ச் சிரித்தபடி, அவன் இதயத்தில் தைக்கும் பார்வை ஒன்றை விசிவிட்டு, உள்ளே ஓடிப் போனுள் அமுதவல்லி!

10. எதிர்பாராதது!

'களப்பிரர்கள் விழ்ச்சியுறுவதற் குரிய காலம் நெருங்கிக் கொண்டிருக் கிறது!'

வருவது கண்டு கூறும் கூர்த்த மதி யினர் போல் திடமான குரலில் அழுத் தமாக அறிவித்தார், புலவர் மாமூல ஞர்.

'அதற்குரிய நிமித்தங்கள் ஏதாவது தோன்றி உள்ளனவோ?' என்று பணி வுடன் கேட்டாள் மங்கையர்க்கரசி.

சிந்தனையில் ஆழ்ந்து விட்டவர்போல் சிறிதே மோனத்திருந்த புலவர் அவள் பக்கம் திரும்பி 'ஊம்?' என்ருர்.

'ஆள்வோர் அழியும் காலம் வரு கிறது என அறிவிக்கப் பல குறிகள் தோன்றும் என்று கேள்விப்பட்டிருக் கிறேன். வால் வெள்ளியின் தொடர்ச் சியான தோற்றம், அச்சுறுத்தும் நில நடுக்கம்...'

மங்கையர்க்கரசியின் பேச்சைக் கேட்டுச் சற்றே நகை புரிந்தார் அவர். 'களப்பிரரின் வீழ்ச்சியை அறிவிப்ப தற்கு அத்தகைய புறச்சான்றுகளும்

தேவையோ? ஆள வந்தவர்கள் அகந்தை மிகக் கொண்டு வெறித்தனமாகச் செயலாற்றத் துணிந்தாலே, அவர்களுடைய வீழ்ச்சிக்கு அடிகோலியாயிற்று என்று தானே பொருள்? மக்கள் நலனைக் கருத்திலே கொள்ளாது, தனது நன்மைகளைப் பெருக்கும் செயல்களில் ஈடுபட்டு, மதிகெட்டு, மண்ணகத்தோருக்குத் தீமை புரிவதிலே இன்பம் காணத் தொடங்கி விட்டால், அம் மமதையாளர்கள் மண்ணைக் கவ்வும் காலம் வெகு தொலைவில் இல்லை என்றுதானே நாம் கொள்ள வேண்டும்?'

மங்கையர்க்கரசி மறுத்துரைக்கவில்லை. ஆயினும் தனது ஐயத்தைப் போக்கிக் கொள்ள விரும்பியவளாய் அவள் வினவினாள்: 'களப்பிரரைப் பற்றி நீங்கள் திடீரென்று இவ்விதம் பேசுவதற்கு முக்கிய காரணம் ஏதேனும் இருக்குமல்லவா?' என்று.

'அவர்கள் அழிவடைவர் என்று கூறும் ஆயிரம் குறிகளை அவர் தம் செயல்களிலும் பண்புகளிலுமே காண முடிகிறதே? கயமைக் குணங்கள் எல்லாம் அவர்களிடம் குடிகொண்டு விடவில்லையா என்ன? ஆட்சிவெறி தலைக்கேறியவர்களாய் மித மிஞ்சிக் குடிப்பதும், கூத்திடுவதும், மக்களை வேட்டையாடுவதும், நாட்டுக்கு நல்லது கருதாமல் நாட்டினரை வறியராக்குவதற்குரிய செயல்களையே புரிவதும், சிறுமைக் குணம் உடையவர்களை வெறியாட்டம் போட அனுமதிப்பதும், வலுவற்ற ஆட்சி முறைமையும், கொதிப்புறும் நாட்டு நிலைமையும் அவர்களுடைய சிதைவைப் பற்றி எடுத்துச் சொல்லும் பறையொலிகள் அல்லவா?'

மங்கையர்க்கரசி வாய்திறவாது தலையாட்டினாள். அவ்விருவர் கவனத்தையும் ஈர்க்கும் நோக்குடன் வெளியே யாரோ ஓசை எழுப்பியது அவள் செவிகளில் விழவும், 'வரலாமே!' என்று குரல் கொடுத்தாள் அவள். 'வரப்போவது யாரார்?' என முன்பே அறிந்து வைத்திருந்தவள் போல, முகமலர்ச்சியோடு 'அவர்களும் வந்துவிட்டார்கள்' என்று கூறினாள்.

அவள் பேசிமுடிக்கவும், சாத்தன் கணபதி இளம்வழுதியை அழைத்துக் கொண்டு உள்ளே வரவும் சரியாக அமைந்தது. 'ஏன் இவ்வளவு நேரம்?' என்று அவள் சாத்தனை விசாரித்தாள்.

'வழுதி பூங்குடி ஆச்சி வீட்டில் காணப்படவில்லை. அங்கு அவர் வந்து சேருவதற்குள் மாலை ஆகிவிட்டது. வழுதி எங்காவது வலையில் சிக்கியிருப்பாரோ, அல்லது வெறியர்கள் எவரோடாவது வம்பு இழுத்து விபத்துக்கு உள்ளாகியிருப்பாரோ என்ற கவலையோடு காத்திருந்தேன்...' என அவன் கூறினான்.

மங்கையர்க்கரசியின் அருள் நிறைந்த விழிகள் இளம் வழுதியைக் கனிவுடன் நோக்கின. அன்பு ஒளி வீசும் அவள் முகத்தில் தாயின் பெருமித நிறைவும் மகிழ்வும் தவழ்ந்தன. 'வலியச் சென்று வம்பை இழுத்துப் போட்டுக்கொள்ளாமலே இருக்க முடியாதோ உன்னால்?' என்று கேட்டாள். அவள் குரலில் கண்டிப்போ, குறை கூறவோ, கோபமோ தொனிக்கவில்லை, பரிவு கலந்த ஒரு குழைவே ஒலி செய்தது.

இளம்வழுதி சிரித்தபடி முகம் தாழ்த்தினான். 'இன்று நான் அப்படி எதுவும் செய்யவில்லை. சாத்தனை சந்திக்க முடியவில்லை. புலவர் அவர்களையும் வீட்டில் காண இயலவில்லை. அதனால் வீதிகளில் சுற்றி வந்தேன். அறிமுகமான ஒருவர்வீட்டில் விருந்துண்ண வேண்டிய அவசியம் ஏற்பட்டது' என்றான்.

'அது யாரோ?'

அவள் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று குழம்பினான் அவன். வெட்கமும், மகிழ்வும் அவனைப் பற்றிக் கொண்டன.

அவன் குழப்பத்தைக் கவனித்த மங்கையர்க்கரசி குறுநகை பூத்தாள். 'வேண்டாம். சொல்ல விருப்பமில்லாததை நீ எங்களுக்கு அறிவிக்க வேண்டாம்' என்றாள்.

'விழிப்புடன் நடந்து கொண்டால்

சரி... நாம் ஆலோசிக்க வேண்டியது பற்றிச் சிந்திப்போம்' என்று குறுக்கிட்டார் மாமூலனார்.

'சாத்தன்கணபதிதன்னைக்கொண்டு வந்து சேர்த்த இடம் மாமூலனாரின் வீடல்ல; முந்திய இரவில் ஆலோசனை செய்வதற்காகப் பலரும் குழுமியிருந்த மடாலயமும் அல்ல; முதல் தினம் தான் மறைந்திருப்பதற்கு வசதியளித்த மங்கையர்க்கரசியின் தனியிடமும் அல்ல' என்பதை இளம்வழுதி உணர்ந்துவிட்டான். அழகும் குளுமையும் நிறைந்த சூழலில் தனித்திருந்த அந்த வீடு சகல வசதிகளையும் பெற்ற இடமாகவே தோன்றியது. அதுவும் மங்கையர்க்கரசிக்குச் சொந்தமானதாக இருக்கலாம் என அவன் எண்ணினான்.

அந்த அம்மையாரைப் பற்றித் தெளிவாகவும் விவரமாகவும் அவன் எதுவும் அறிந்துகொள்ள இயலவில்லை இன்னும். அவளைக் குறித்துக் கேள்விகள் எடுக்க அவன் வாய் திறக்க வேண்டியதுதான்; உடனே சாத்தன் ஊமையாகி விடுவான். நண்பனின் இந்தப் போக்கு விந்தையானதாகப்பட்டது அவனுக்கு. மீனாட்சி ஆச்சியோ, 'அப்பிராட்டியாரைப் பற்றி தனக்கு எதுவுமே தெரியாது' என்று முதலிலேயே அழுத்தமாக அறிவித்து விட்டாள். அப்புறம் அவன் யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது?

'சரி. தெளிவாகிறபோது தானாகவே தெளிவாகட்டும். அவ் அம்மையார் மதிப்புக்குரியவர்; மிகுந்த செல்வாக்கு உடையவர் என்று புரிகிறது. இவ்வளவு போதும்' என அவன் தன்னையே தேற்றிக்கொண்டான்.

பலரது போற்றுதலுக்கும் உரியவளான அவள் மாமூலனாரிடம் பக்தி செலுத்தி வந்தாள் என்பதும் அவனுக்குப் புரிந்திருந்தது. அவர் பெரியவர்; அறிவில் உயர்ந்தவர்; கல்வியில் சிறந்தார்; நற்குணங்களின் உறைவிடம் தமிழ்ப்பற்றும், தமிழகத்தின் மீது அன்பும், தாய் நாட்டின் விடுதலையில் அடக்கமுடியாத ஆர்வமும்கொண்டவர்- இவற்றால் எல்லாம் அப்பிராட்டியாருக்கு அந்தப் புலவரிடம் மதிப்பு ஏற்பட்டிருக்கும் என்று அவன் கருதினான். இக்காரணங்களினால் தானே அவர்பால் அவனுக்கும் பக்தியும் பாசமும்

ஏற்பட்டிருந்தன?

மாமூலனார் சொன்னார்: 'களப்பிரர்கள் அச்சம் கொண்டுவிட்டார்கள். அது தெளிவு. இப்பொழுது அவர்களுக்குப் போதாத காலம். மதுரையில் மட்டுமல்ல. பொதுவாகவே அவர்கள் பலவாறு சோதிக்கப்பட்டு வருகின்றனர். முந்நூறு — முந்நூற்றைம்பது ஆண்டுகளாகத் தட்டிக் கேட்க எவருமற்ற சூரர்களாக வாழ்ந்து பழகிவிட்டார்கள் அவர்கள். அதனால் சோம்பலும், மிதமிஞ்சிய சுகபோக ஆசையும் அவர்களிடம் உறைந்துள்ளன. கயமையும் கோழைத்தனமும் குடிகொண்டுள்ளன. பல்லவர்கள் அவர்களுக்குத் தொல்லை கொடுத்து வருகிறார்கள். இது தகுந்த தருணமாகும். பேராற்றல் படைத்த பெருவீரர்களைத் திரட்டிக் கொண்டு வீரத்தோடு அவர்களை எதிர்த்தால் அவர்கள் வீழ்வது திண்ணம். இளம்வழுதி! இதை நீ நினைவில் நிறுத்திக்கொள்வது நல்லது. தனியனாய் இம் மதுரை மூதூரில் முயற்சி செய்வதனாலோ, கூட்டங்கள் கூடிப் பேசுவதனாலோ உன் குறிக்கோள் நிறைவேறி விடாது. நாட்டினருக்கு ஆட்சியினர்மீது வெறுப்பு பிறந்திருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு வீரர்களைக் கூட்டு. உனது வேலை இப்போது இங்கு இல்லை!'

இளம்வழுதி வாய் திறவாது நின்றான். வயதிலும், அறிவிலும், அனுபவத்திலும் பெரியவரான மாமூலனாரின் கூற்று ஆணித்தரமான உண்மை—நல்ல வழி காட்டக் கூடியது—என்றே அவன் உள்ளம் அறிவுறுத்தியது.

'சாத்தன் இன்றுஇரவில் இங்கிருந்து புறப்படுகிறான். நீயும் அவனோடு போ.



நான் திருமுகம் ஒன்று தீட்டித் தருகி றேன். அதை யாரிடம் சேர்ப்பிக்க வேண்டுமோ அவரிடமே அவன் உன்னை இட்டுச் செல்வான். அவர் உனக்குத் துணை புரிவார். அதன் பிறகு செய்யவேண்டுவன குறித்தும் அவரே வழி காட்டுவார்' என்று மங்கையர்க்கரசி அறிவித்தாள்.

'நீங்கள் செய்யும் உதவியை நான் மறக்கமாட்டேன்' என்றான் வழுதி.

'பயணத்துக்குத் தயாராகலாம். உனக்குத் தேவையான குதிரையை சாத்தன் பிறகு கொண்டு வருவான்' என்றும் அவள் தெரிவித்தாள்.

இளம்வழுதி விடை பெற்றுக் கொண்டு வெளியேறினான். அவர் களுடைய செயல்கள் பலவும் மர்மங் கள் நிறைந்ததாகவே தோன்றின அவ னுக்கு. அந்த அம்மையார் காட்டும் வழியைப் பின்பற்றுவதா கூடாதா என்ற தயக்கமும் உண்டாயிற்று.

முடிவில், 'வருவது வரட்டும். எவ் வழியைப் பின்பற்றினாலும் நமக்குப் பெரும் நஷ்டம் வந்துவிடப் போவதில் லையே? உயிருக்காகப் போராட வேண் டிய நெருக்கடியான கட்டங்கள் எதிர்ப் படலாமோ? வைர நெஞ்சும் எஃகு போல் உறுதிபெற்ற கரங்களும் இல்லா மலா போயின நம்மிடம்!' எனத் தேர்ந் தான் அவன். கவலையற்றுச் சென் றான்.

திடீரென்று அவன் கால்கள் தயங் கின. அவனுக்கு முன்னால் சிறிது தொலைவில்வேகமாகச் சென்றுகொண் டிருந்த ஆள் தான் அவன் நடைக் குக் கட்டுப்பாடு விதித்தது. அவனுக் குத் தெரிந்த— ஆரம்பம் முதலே அவனைச் சந்தேகிக்கத் துணிந்த— துறவி அடியார்க்கு நல்லான் தான் போய்க்கொண்டிருந்தான்.

அவன் தன்னைப் பார்க்கவில்லை என உணர்ந்துகொண்ட இளம்வழுதி அவ னைப் பின் தொடர்ந்து செல்லலாமே என்று எண்ணினான். துறவியை முன்னே செல்லவிட்டுப் பின்னே மெது வாக நடந்தான்.

துறவி வீதித்திருப்பம் ஒன்றில் திரும்புவது தெரிந்தது. இளம்வழுதி யும் வேகமாக நடந்து, அங்கு திரும்பி னான். ஆனால் முன்சென்ற துறவி மாயமாக மறைந்துவிட்டது போல் தோன்றியது!

'அவன் அப்படி அங்கு மறைந்திருப் பான்' என்ற சந்தேகம் வழுதிக்கு எழுந் தது. ஒன்றும் தெளிவாக வழியில்லை. இனி எத்திசை செல்வது என்று தீர் மானிக்க இயலாதவனாய் அவன் அவ் விடத்திலேயே நின்றான்.

நேரே முன்சென்றால் வரகுணத் தேவரின் மாளிகையை அடையலாம். அங்கே செல்வது ஆபத்து என்று அவன் மனம் எச்சரித்தது. அந்த இடத்திலேயே நிற்பதுகூட ஆபத்து தான் என்று அவனுடைய உள்ளு ணர்வு கூறியது. வந்த வழியே திரும்பி நடந்து, பூங்குடி ஆச்சி வீடு சேர்ந்து, சாத்தனின் வருகைக்காகக் காத்திருப் பதே அறிவுடைமையாகும் எனத் தீர் மானித்தான் அவன்.

ஆனால், அவன் நினைத்தது நடை பெற வழியில்லாமல் போயிற்று.

அந்திஉலா கிளம்பியிருந்த குடிகாரக் களப்பிரர்கள் சிலர் அவ்வழியே வந் தார்கள். அவன் விலகி வழிவிடாமல் நடுப்பாதையில் நிற்பதைக் கண்டு வெகுண்டார்கள். ஒருவன் அவனை அதட்டி வசை பாடவும், இளவழுதி



கோபம் கொண்டு அவன் முகத்தில் ஓங்கி அறைந்தான். மற்றவர்கள் வழுதியைச் சூழ்ந்து கொண்டார்கள்.

இளம்வழுதி தீவிரமாகப் போராடினான். ஆயினும், அவர்கள் பலர். அவர்களிடையே அவன் தாக்குதலும் தற்காப்பும் வலுவற்றுப் போயின. அவர்கள் அடித்த அடியால் நிலைகுலைந்து தள்ளாடிக் கீழே சாய்ந்தான் அவன்.

அவன் இறந்துபட்டான் என்றே கருதினர் குடிவெறியர்கள். அந்நேரத்தில் மாளிகைப்பக்கமிருந்து வரகுணத்தேவரின் குதிரை வண்டி வருவது அவர்கள் பார்வையில் பட்டது.

'இவன் தேவரின் ஆளாக இருந்தாலும் இருக்குமோ?' என்ற ஐயம் அவர்களுக்கு எழுந்தது. 'அப்படியிருந்தால் தேவரின் பார்வையில் படாமல் தப்புவதே நல்லது' என்று தீர்மானித்து அவனை அப்படியே நடுத்தெருவில் விட்டுவிட்டு வீரர்கள் ஓடி மறைந்தார்கள்.



அவசரமற்ற கதியிலே வந்தது வரகுணத்தேவரின் வண்டி. இளம்வழுதி விழுந்துகிடந்த இடத்தை நோக்கியே வந்து கொண்டிருந்தது அது!

(தொடரும்)

Telephone MADRAS : 4890. MADURAI : 581.

இன்பம் தரும்

31

301

3001

ஜவ்வாது பத்திகள்

சுகந்த மண்டலம்

உரிமையாளர்கள்:
S.V. பழனிமலை
S.V. ரெங்கசாமி

மதுரை. மதராஸ். பெங்களூர். விஜயவாடா



விரைந்து வாரும்

இளம்பாரதி

மழைநீரின் வரவுக்குத் தவமி யற்றும்
மண்ணுயிரை ஏமாற்றக் கருதும் வண்ணம்
இழையோடச் சிறுதூரல் வான்கொ டுத்தால்
எழும்விளைவு மண்ணுயிரைக் காப்ப தில்லை.
பிழையின்றி உயிர்உடலில் ஒட்டி வாழப்
பின்னுமல் எண்ணங்கள் கோவை யாகித்
தழைக்கின்ற நிலைவேண்டும். ஆனால் நானோ
தழல்நடுவில் இருக்கின்றேன் உம்மால் இந்நாள்!

விருப்புக்கும் வெறுப்புக்கும் எனைக்கே ளாது
மெய்பற்றிச் சோலைவழி அழைத்துச் சென்று,
வருகின்ற தென்றலுக்கு வழிம றித்தென்
வாய்மூட வழிசெய்ய முன்னர் காணாப்
பெருமூச்சின் பிறப்புக்கு வித்த மைத்துப்
பின்னியெனை இதழ்முறுக்கி முத்த மிட்டீர்;
உருவற்ற பொருளொன்று நெஞ்சத் துள்ளே
ஊடுருவிப் பாய்கின்ற உணர்வு தந்தீர்!

அலர்தூற்றும் தோழியரை வென்ற போதும்
அன்னைவழி வருகின்ற விழிவீச் சுக்கு
நிலைகுலையும் படியானேன். என்னு ளத்தில்
நீந்திவரும் புத்துணர்வு முகத்த ளத்தில்
அலையெறிதல் தன்மைக்கு விளக்கம் சொல்ல
அன்னைமுன் நின்றிடுதல் உம்பொ றுப்பு!
தொலைவழியில் நிற்காதீர்; உயிர்பி ணைத்துச்
சொந்தமுற எனைஏற்க விரைந்து வாரும்!

★

தாமரைக் கன்னி

பண்ருட்டி இரா. பரமசிவம்



தாமரைக் கன்னி இளங்கன்னி—அவள்
தண்ணீரில் வாழும் மலர்க்கன்னி!
காமர் வண்டுக் குரியவளாம்—செங்
கதிரவன் ஒளியில் சிரிப்பவளாம்!

வட்ட நிலாப்போல முகமுடையாள்—இள
வஞ்சியர் போல நகையுடையாள்!
பட்டு இதழாடை உடுத்திடுவாள்—குளிர்ப்
பனிநீரில் நாளும் குளித்திடுவாள்!

உடலினில் முத்துக்கள் படைத்தவளாம்— கலச
உருவம்போல் மொட்டினை உடையவளாம்!
உடலெலாம் தேன் கிண்ணம் நிறைந்தவளாம்—
மற்ற
உடன்வாழும் பூப்பெண்ணில் சிறந்தவளாம்!

பச்சை இலைமீது உறங்கிடுவாள்—நீள்
பசுந்தண்டுக் காலினால் நின்றிடுவாள்!
உச்சி மலைத்தென்றல் பேணிடுவாள்—நிலா
ஒளியின் வரவுக்கு நாணிடுவாள்!

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்திடுவாள்-நல்ல
கவிஞரின் பாடலில் பொருந்திடுவாள்!
தண்ணீரோ அவளுக்குப் பிறந்தகமாம்—சூடும்
கண்மலர் மாலையோ புகுந்தகமாம்!

★

14. வஞ்சி வலே விரித்தாள்!
வராலாய் அவர் துடித்தார்!

[“அழகு நன்மை பயக்கும் என்ற பொய்த்தோற்றம் எவ்வளவு பொருத்தமாக மனிதர்களே முழுவதும் ஆட்கொள்கின்றது என்பதை எண்ணிஞல் ஆச்சரியமாக இருக்கிறது, ஓர் அழகிய பெண் உளறிக் கொட்டிக் கொண்டிருந்தாலும், நீ அவள் மிக்க நேர்த்தியாகப் பேசுவதாக எண்ணிக் கொண்டு மிக்க கவனத்துடன் கேட்கின்ருய். அவள் மோசமாகப் பேசி, மோசமாக நடந்துகொண்டாலும், நீ அவைகளே மிகச் சிறந்ததாகக் கருதுகிருய். தப்பித் தவறி அவள் ஆபாசமில்லாத சிறந்த செய்திகளேச் சொல்லி விட்டாலோ, உடனே நீ அவள் ‘அறிவின் எல்லே’, ‘பண்பின் சிகரம்’ என்று முடிவு கட்டி விடுகிருய்!”

—லியோ டால்ஸ்டாய்–‘**தி குருட்ஸார் ஸோஞட்டா**’ என்ற கதையில்.]

‘இன்பவுலகம்’ என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பித்தளேத் தகடு சூரியனின் ஒளியிலே தங்கம் போலச் சுடர் விட்டது!

‘காடிலாக்’ காரிலே செல்லும் காரிகையின் கழுத்திலே கிடக்கும் சீமைக் கமல மாலேகூட, இருக்கும் இடத்தின் ஏற்றத்தால் வைரமாகப் பலரால் நினேக்கப்படுவதும், கந்தை உடுத்திய இல்லத்தரசியின் தங்கத்தாலி வறுமையிலே தவழ்பவளின் உறவால் ‘பித்தளேயோ?’ என்ற சந்தேகக் கேள்வியை எழுப்பக் காரணமாவதும், இந்த உலகில் சாதாரண நிகழ்ச்சிகள் தானே?

‘மாபெரும் மாளிகையின் விளம்பரப் பலகை’ என்ற பெருமை ‘இன்பவுலகம்’ என்று பேசாது பேசி நின்ற பித்தளேத் தகட்டின் மினுமினுப்பால் புலஞயிற்று!

‘பணத்திற்கு மனிதன் அடிமை’ என்பதை விளக்குவான் போல, கார் கண்டவிடத்து விரைப்பாக ‘சலாம்’ அடிக்கும் இயந்திரமாக, வேண்டாதவர்கள் நுழைவு கோரும்போது ‘சலோ, சலோ’ என்று ஒரே வார்த்தையை உணர்ச்சியே இல்லாத மரக்கட்டை முகத்தோடு உச்சரிக்கும் பொறியாக மாறிவிட்ட காவல்கார கூர்க்கா, பித்தளேத் தகட்டின் நண்பஞகச் சிலேயாக நின்றிருந்தான்.

மாளிகையின் மதிப்புக்கு வட்டி சேர்க்கும் மோட்டார் வண்டியொன்று ‘போர்டிகோ’வில் காட்சியளித்தது.

தூய்மை, விளம்பரப் பலகையிலே குடி கொண்டிருந்தது; காவல்காரனின் உடையிலே கலந்திருந்தது; மாளிகையின்

தோட்டத்திலே ஒருசிறுதூசி, சருகுஇலை கூட இல்லாது பயங்கரமான தூய்மை பரந்து விரிந்திருந்தது.

மாளிகையின் சுவர்கள், வெண்மை ஆற்றிலே முழுகி எழுந்ததுபோல நெடி துயர்ந்து நின்றன. மோட்டார் வண்டியின் மேனியில் ஒரு சிறு அழுக்குப் புள்ளிகூட இல்லை!

சோபாக்கள், நாற்காலிகள் சோபையோடு காட்சி அளித்தன. மேஜை விரிப்புகள், இரத்தினக் கம்பளங்கள் புதுமைக்கு இலக்கணமாக இலங்கின. சுவரிலே படங்கள் சுத்தமாகத் தொங்கின! புதிய மலர்கள் கண்ணாடிச் சாடிகளை அலங்கரித்தன!

தூய்மை, தூய்மை, தூய்மை! பயங்கரத் தூய்மை!

பூசை அறையிலும் அது புகுந்திருந்தது. ஆண்டவன் பல படங்களில், பல உருவங்களில், பல 'போஸ்'களில் காட்சி அளித்தார்!

வெள்ளிவிளக்கில் நெய்யுண்ட பெருமையில்ஒளியைஉமிழ்த்துகின்றன ஒரு ஜோடி விளக்குகள்! உயர்ந்த வாசனையை ஊட்டிக் கொண்டிருந்தன ஊதுவத்திகள்!

நிறக்குவியலாக தட்டை அடைத்து நின்றன மலர் வகைகள்! இயந்திரம் போல அவைகளை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தார் ஸ்ரீமான் ஏகாம்பரம் செட்டியார்!

வெள்ளித்தட்டிலே இருந்த மலர்க் குவியல் விக்கிரகத்தின் காலடியிலே கொட்டப்பட்டது! அதைத்தவிர பூசை அறையில் வேறு மாற்றம் எதுவும் இல்லை!

ஆண்டவன் அருள் அவனிடத்திலேயே இருந்தது! ஏகாம்பரத்தின்மனம் சிறை மீளவும் இல்லை!

அந்தப் பரந்தமாளிகையின் எல்லாப் பொருள்களிலும் இருந்து விடை பெற்றுக்கொண்ட அழுக்கு அவரது மன மாளிகையிலே 'ஏகசக்ராதிபதி'யாகக் கோலோச்சிக் கொண்டிருந்தது!

பூசனை முடிந்தது! கற்பூரம் எரிந்தது! நிவேதனம் நடந்தது! அடக்கவொடுக்கமாக பட்டுத் துணி மூடிய தட்டை மெதுவாக எடுத்துக் கொண்டு வெளி நடந்தாள் கற்பகம்!

பூசை மும்முரத்திலும் கற்பகத்தின் மீது ஆசைப் பார்வை யொன்றை வீச மறக்கவில்லை பக்த சிகாமணி!

* * *

ஸ்ரீமான் ஏகாம்பரம் செட்டியார் 'மிகப் பெரிய புள்ளி'. பூசை முடிந்தவுடன் 'ஹாலி'லே சென்று அமர்ந்த தோரணை அதை விளக்கிற்று.

கருங்காலியில் செதுக்கிய உருவம்... பானையை வெட்டி இழைத்தது போல உடலோடு இழைந்திருந்த தொந்தி... காதுகளில் வயிரக்கடுக்கன்...'வயதால் வழுக்கை விழுந்தது' என்று சொன்னால் அவர் 'மான நஷ்ட வழக்கு'ப் போட்டு விடுவார்! 'அநுபவத்தால் ஏற்பட்ட வழுக்கை' என்றால் அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்ப்பார்...

கட்டை உருவம்...மினுக்கும் தங்கப் பற்கள்...பணம் கண்களிலும், கன்னங்களிலும் ஒளியை ஊட்டியிருந்தது... இடையில் 'கிளாஸ்கோ'மல் வேஷ்டி...

அவர் ஹாலிலே சென்றமர்ந்ததும், கற்பகம் தூய வெள்ளை 'மல்' ஜிப்பா ஒன்றுடன் வந்தாள்.

செட்டியார் சில விஷயங்களில் குழந்தை...போல நடிப்பார்...அவரைச் சொல்லிக் குற்றமில்லை...அது பணக்காரர்கள் எல்லோருக்கும் அநேகமாக இருக்கும் குறைதான்!

சிறு குழந்தை போலக் கைகளை மேலே தூக்கிக் கழுத்தைத் தாழ்த்தினார் ஏகாம்பரம். கற்பகத்திற்கு அது தினசரிப் பாடம். எனவே மௌனமாக அருகில் வந்து நின்று ஜிப்பாவை விரித்துக் கழுத்திலும், கைகளிலும் மாட்டினாள்.

அவருக்கு அன்று மிகவும் மகிழ்ச்சி. எனவே குனிந்து கற்பகம் ஜிப்பாவை மாட்டிக் கொண்டிருக்கும் பொழுதே, 'நறுக்' கென்று அவள் கன்னத்தை வலது கரத்தால் இழைத்தார். இடது கரம் அவள் கழுத்தை வளைத்தது.

கற்பகம் சிணுங்கினாள்...ஆனால் சீறவில்லை... ...தன்னை விடுவித்துக் கொண்டு அப்பால் நகர்ந்தாள்.

அவள் பின்னழகை அளந்தார், 'அழகுப்பிரியர்' ஏகாம்பரம்!

'கற்பகம்'

குரல் கேட்டுக் கழுத்தை வளைத்தாள் அவள்.

'ஒரு இட்லி போதும்...!

கற்பகம் மறைந்தாள்...ஏகாம்பரம் சிந்தனையிலே ஆழ்ந்தார். 'கெட்டிக்காரி' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

அவர் வீட்டில் நீண்ட நாட்கள் வேலை பார்ப்பது அரிது; குறிப்பாக சமையற்காரிகள் மூன்று மாதங்களுக்கு மேல் தங்க முடியாது! அவருக்கு அதற்குள்ளாக அவர்கள் சமையலும், அவர்களும் அலுத்து விடுவார்கள்!

அவரது தர்ம பத்தினி காலமாகப் பத்து வருடங்கள் பறந்து விட்டன! அவரது ஒரே மகனும் ஓர் விமான விபத்தில் மறைந்துவிட்டான்! எனவே அவரது ஆட்டபாட்டங்களை அடக்குவார் இல்லை!

ஆனால் செட்டியார் எதிலும் செட்டு! தீர்த்தம் சாப்பிட்டாலும் ஈ, காக்கைக்குத் தெரியாது! சாக்கடையிலே புரண்டாலும், சந்தனத்தால் வெளியே பூசிக் கொள்வார்!

வருமானம் பலவகைகளில் வந்து கொண்டிருந்தது! எத்தனையோ நிறுவனங்கள்! வியாபாரங்கள்! 'இன்கம் டாக்ஸ்' ஒழுங்காகக் கட்டுவதே சில இலட்சங்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

கணக்கில் வராத பணம்தான், தருமங்களில் பாயும்! ஊரிலே, 'தர்மசீலர்' என்ற பெயர்!

'இன்பவுலகம்' என்ற பொருத்தமான பெயரில் மாளிகையை வைத்திருந்தார். கற்பகம் போலப் பலர் வந்து போவார்கள்!

ஆனால் கற்பகம் என்னவோ ஒரு வருடமாகத் தங்கி விட்டாள்! இராஜ போஜனம், அதிகாரம்..பணம் நிறையக் கிடைக்காவிட்டாலும், தேவைக்கதிகமாகவே கிடைத்தது.

அவள் வாயே திறக்கமாட்டாள்; அவருக்கு அவளிடம் பூரண சுதந்திரம்! ஆனால் அவளோ அவரது சுதந்திரங்களில் தலையிடுவதில்லை!

கருங்கல்லாக இல்லாது நாணற் புல்லாக வளைந்து வாழ்ந்து வந்தாள், 'இன்பவுலகின்' சமையற்காரி கற்பகம்!

தனது நிலை உணர்ந்தவள்! எனவே நிலைத்துவிட்டாள்!

* * *

மாலுவும் கதிரேசனும் 'இன்பவுலகத்'தின் உள்ளே நுழைந்தார்கள்.



உத்தியோக உடையிலே மிடுக்காக நடந்தார் கதிரேசன். ஒய்யாரஉடையில் ஒயிலாக பின் வந்தாள் மாலு.

ஏகாம்பரம் உணவருந்திக் கொண்டிருந்த நேரம் அது!

சோபாவில் அமர்ந்திருந்த அந்தச்சிறு குழந்தையின் வாயில் இட்டிலித் துண்டுகளை ஒவ்வொன்றாகப் போட்டுக் கொண்டிருந்தாள் கற்பகம்!

இந்தத் திருக்காட்சியைக் கண்டு திடுக்கிட்டார்கள், மாலுவும், கதிரேசனும்!

தங்கள் வருகையை அறிவிக்க, மிஸ்டர் செட்டியார்! என்று குரல் கொடுத்தார் கதிரேசன். அடுத்த வினாடி, கற்பகம் தட்டோடு உள்ளே மறைந்து விட்டாள்!

மாலு, அந்த ஒரு வினாடிக்கு உள்ளாகவே 'திருவாளர். ஏகாம்பரம் ஒரு உத்திராட்சப் பூனை. ஊரிலே மிக்க நல்லவராகப் பெயரெடுத்திருக்கும் அவர் வாழ்வில் பல ஊழல்கள் இருக்கலாம் போலிருக்கிறதே! என்ற முடிவுக்கு வந்து விட்டாள்!

'வாங்க.. வாங்க' என்று சுதாரித்துக் கொண்டு எழுந்தார் ஏகாம்பரம்!

'என்னம்மா... மகாதேவன் சௌக்கியமா! :பார்த்து ஒரு மாசத்துக்கு மேலே ஆச்சுதே!' என்று மாலுவை நோக்கினார்.

'அப்பா லீவிலே இருக்காங்க; சௌக்கியம் தான்...அதுதான் பார்க்க முடியல்லே...!

'என்ன இப்போ லீவு எடுத்திருக்காரு! ஏதாவது விசேஷம், கிசேஷம் உண்டா! கல்யாணம்...கில்யாணம்... 'என்று இழுத்துவிட்டு, பக...பக... என்று சிரித்தார் ஏகாம்பரம்.

கதிரேசனும் முறுவல் பூத்தார். மாலு சற்றே தலையைக் குனிந்து கொண்டாள்!

'அதெல்லாம் ஒண்ணு மில்லீங்க... சும்மா 'ரெஸ்ட்' எடுக்கிறாரு' என்றாள், தாழ்ந்த குரலில்!

ஏகாம்பரம் கதிரேசனிடம் பேச ஆரம்பித்தார்.

'என்ன ஏதாவது தகவல் வந்துச்சுங்களா!'

'ஒன்றுமில்லையே... ஆமாம், அனாதைக் குழந்தைகளை மாத்திரம் திருடிச் செல்லும் அதிசயத் திருடனைப் பற்றி நீங்கள் இது வரை கேள்விப்பட்டிருக்கிறீர்களா!'—இந்தக் கேள்வியைக் கேட்டபடி, ஓரக் கண்களால் மாலுவை அளந்தார் கதிரேசன்!

அவள் நெஞ்சோ 'பட்...பட்' என அடித்துக் கொண்டது! என்றாலும் சாமர்த்தியமாக வெளியில் எவ்வித உணர்வையும் காட்டாமல் இருந்தாள் மாலு.

'எங்கள் ஆஸ்ரம சரித்திரத்தில் இது வரை எதுவும் திருட்டுப்போனதே கிடையாது. அனாதைக் குழந்தைகளைத் திருடிப்போய் என்ன செய்வார்களோ ஒரு வேளை... யாருக்காவது விற்பார்களோ என்று வினவினார் திருவாளர் ஏகாம்பரம்.

'ஆமாம் ..உங்களுக்கு யார் மேலாவது சந்தேகம் உண்டா!' என்று கேட்டார் கதிரேசன்.

'பணம்' காசு காணாமல் போனால் யாரையாவது சந்தேகப்படலாம். இது என்னங்க..புது மாதிரித் திருட்டாயிருக்கு!'

'அதுசரி—நான் சொன்ன விஷயத்தைக் கவனித்தீர்களா?'

என்னங்க?'

'இல்லை... நாங்கள் நேற்றிரவு சென்றிருந்த பொழுது உங்கள் ஆசிரமத் தலைவியின் அறையில் ஓர் ஆண் பிள்ளை...'

'ஓ! அதுவா! நான் கூப்பிட்டு விசாரிக்கிறேனுங்க. அதுக்கும், இதுக்கும் என்ன சம்பந்தம்! அதுஅவங்க சொந்த விசயம். அந்தம்மா ரொம்ப நல்லவங்க. நாங்க அதை கவனிச்சுக்கிறோம்!'

ஏகாம்பரத்துக்குத் தாராவின் மீது மிகுந்த வருத்தம் ஏற்பட்டிருந்தது. என்றாலும் அவர் அவளைப் போலீசுக்காரர்கள் கேள்வி கேட்கும் அளவிற்கு விட்டுக் கொடுக்கத் தயாராகவில்லை! அவள் மீது அவருக்கு இருந்த தனிப் பற்றுதல் அதற்கு காரணமாக இருந்தது!

மாலாவும், கதிரேசனும் ஏமாற்றமடைந்தார்கள். ஏகாம்பரம் இப்படிச் 'சட்'டென விஷயத்தை முடித்து விடுவார் என்பதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

'சரி', உங்கள் இஷ்டம். நான் முடிந்தவரை முயலுகிறேன். நீங்களும்

ஏதாவது தகவல் கிடைத்தால் அனுப்புங்கள்' என்றபடி எழுந்துவிட்டார் கதிரேசன், மாலுவும் தொடர்ந்தாள்.

ஏகாம்பரம் கரம் கூப்பி வழி அனுப்பினர்.

* * *

மாலுஅவ்வளவு எளிதில் தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. 'மீண்டும் எப்படியாவது செட்டியாரைப் பார்க்க வேண்டும்; பார்த்து அந்த ஆசிரமத் தலைவி யார்? ஆனந்த ரங்கத்தோடு அவள் தொடர்பு என்ன? என்று கண்டு பிடித்தே திரவேண்டும்!' என்று முடிவுகட்டிக்கொண்டாள்!

எனவே கதிரேசனைப் பிரிந்த பிறகு மீண்டும் அரைமணி நேரத்திற்குள்ளாக 'இன்பவுலக'த்திலே நுழைந்தாள்!

முதல் முறை கிடைத்த அனுபவத்தால் ஸ்ரீமான் ஏகாம்பரத்தின் உள்ளத்தில் சிறிதை அளந்து பார்த்து விட்ட மாலா அவரது உள்ளத்தின் பலக் குறைவான இடத்தில் தாக்குவது என்ற முடிவோடும்; ஆசிரமத் தலைவியைத் தவிக்கவிடும் அளவிலே அவரை ஆட்டுவது என்ற துணிவோடும் திரும்பிவந்தாள்!

திருவாளர் ஏகாம்பரம் அப்பொழுது அலுவலக அறையில் அமர்ந்து இருந்தார்.

'ஐயா!' என்ற குரல் கேட்டுத் திரும்பினர். மாலு!

அரை மணி நேரத்திற்குள்ளாக வேறு உடையிலே கவர்ச்சிகரமாகக் காட்சியளித்தாள் அவள்!

அமாவாசை இரவின் மைக் கருப்பைப் பூசிய சேலை. அந்திவானச் செம்மை இழைந்தோடிய தலைப்பு. முழு நிலவின் தூய்மையான வெண்மையை உரித்தெடுத்த மேலங்கி.

உல்லாசம் மிகுந்த கண்கள், எக்களிப்பு சுழித்தோடிய கன்னங்கள்; பெருமிதம் பாய்ந்து துள்ளிய அதரங்கள்!

நண்பர் மகாதேவனின் மகளை அவ்வளவு அருகில் அதுவும் தனிமையில் ஸ்ரீமான் ஏகாம்பரம் சந்தித்தது கிடையாது! மின்னலால் தாக்குண்ட நச்சரவம் மூச்சற்றது போல ஒடுங்கி விட்டாரவர்!

'மாலா...என்ன மீண்டும் வந்திருக்கிருய்?'

மாலு இலேசாகச் சிரித்தாள். இனிப்பு மிட்டாயைக் கண்ட ஏழைச் சிறுவனைப்போல அவர் சொக்கிப் போனர்.

'எங்கள் கல்லூரி மாணவியர் சங்கத்திலிருந்து 'ஏழைப் பிள்ளைகள் கல்வி நிதி' ஒன்று திரட்டி வருகிருேம்,. அது பற்றித்தான் உங்களிடம் வந்தது, அப்பொழுது...'

ஓ... இவ்வளவுதானு... சரி நம்ப பேரிலே நூத்தியொண்ணு எழுதிக்குங்க...'

'ரொம்ப' தாங்க்ஸ்'... அதோட அந்த நிதியைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் விழாவிலே தாங்கள் தலைமை தாங்கி...'

'நானு... அதெல்லாம் எதுக்கம்மா?'

'இல்லே... முதலிலே உங்க ஆசிரமத் தலைவியைத்தான் அதுக்குக் கூப்பிடறதா இருந்தோம்.. அப்புறம்....

'அப்புறம் என்ன? ஏன் முடிவை மாத்திப்பிட்டீங்க?'

'அதுவா... நீங்க வருத்தப்படக் கூடாது.. அவங்களைப் பற்றிச் சில விஷயங்கள் கேள்விப் பட்டதனலே....' என்றிழுத்தாள் மாலு!

ஏகாம்பரத்தின் முகம் வெளுத்து விட்டது! மாலு தொடர்ந்தாள்! 'ஏதோ... 'காதல்' விவகாரங்கள் என்று போலீஸ் இலாகாவிலே பேசிக் கொள்கிறர்கள்...'

ஏகாம்பரம் எழுந்து, ஒரு முறை அறையில் குறுக்கே நடந்துவிட்டுப் பின் திரும்பி வந்து அமர்ந்தார். அதற்குள்ளாக அவரது பதட்டம் அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு விட்டது!

'ஏம்மா?.. காதலிப்பது தப்பா? காலேஜ் பெண்களா அப்படி நினைக்கிறீங்க? விசித்திரமா இருக்கே?'—மாலுவை அளப்பது போன்ற பார்வையை வீசியபடி கேட்டார் அவர்!

அவரது நோக்கம்—தனது அநாதை இல்லத்தின் நற்பெயரைக் காப்பாற்றுவது; அதன் மூலமாகவே மாலாவின் மனத்திலே சிறிது நுழைந்துபார்ப்பது என்பதேயாகும். அதற்காகவே மிகச் சாமர்த்தியமாகக் 'காதலைப் பற்றி அந்த இளம் பெண்ணிடம் பேசலானர்!

மாலுவோ மனதினுள் மகிழ்ச்சி கொண்டாள்! ஏகாம்பரத்தைக் குழம்ப

வைத்து, ஆசிரமத் தலைவியை அநாதையாக வேலை இழக்கச் செய்வது என்பது அவள் திட்டம்! 'என்னைப் பொறுத்தவரையில் 'காதல்—கீதல்' எல்லாம் வெறும் வேஷம்.. அதிலும் இளைஞர்களை நம்பவே கூடாது.. உங்களைப் போல அனுபவசாலிகள் சொன்னால் வேண்டுமானால் நம்பலாம்!'

இந்தத் தாக்குதலைத் தாங்க ஏகாம்பரத்தின் மனக் கப்பலால் முடியவில்லை! உணர்ச்சிக் கடலில் முழுகியது மனம்! மாலா மேலும் சொன்னாள்!

'ஏன்.. நீங்கள்... உங்களது தலைவியை 'டிஸ்மிஸ்' செய்யக் கூடாது..?'

'செய்யலாம்.. ஆனால் அவளைப் போலப் பொறுப்பானவங்கள் யார் உடனே கிடைப்பார்கள்?'

'ஓகோ... எவ்வளவு ஊழலாக இருந்தாலும் அவளைத் தலைவியாக வைத்திருப்பீர்கள் போலிருக்கிறது. ஏன் எங்களைப் போன்ற எத்தனையோ பேர் இது போன்ற சேவைக்குக் காத்திருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா?'

இதற்கு என்ன பதில் சொல்வது என்று ஏகாம்பரம் திகைத்தார்!

மாலா எழுந்து விட்டாள்! 'மிஸ்டர் ஏகாம்பரம்'! என்னைப்போன்றவர்கள் என்றும் உங்களுக்கு உதவக் காத்திருக்கிறோம்! ஆசிரமத்தின் நல்ல பெயரைக் காப்பாற்றுங்கள்! உடலிலே புண் இருந்தால் ஆறிவிடும்என்று நினைப்பது இயற்கைதான்.. ஆனால் அழுக ஆரம்பித்து விட்டால் வெட்டி விடுவதுதான் இயற்கை!'

* * *

மாலா சென்று விட்டாள். அவளுடன் தனது மானமும் போய் விட்டதாக மறுகினார் ஏகாம்பரம்!

வஞ்சி விடுத்த வலையிலே விழுந்தவராலாகத் துடிக்கலானார்!

அணு, அணுவாக அவர் உள்ளத்தில் கோபம் கொந்தளித்தது! தாராவின் மீது அது வேகமாகத் தாவிப் பற்றலாயிற்று!

15. சோதனைத் தீயால் பொன்னின் சுடர் குன்றுமோ?

[“அம்மா! நான் எங்கிருந்து வந்தேன்? நீ என்னை எங்கே கண்டு பிடித்தாய்? என்று குழந்தை தாயைப் பார்த்துக் கேட்டது.

அவள் கரைகாணா ஆர்வத்துடன் குழந்தையை இழுத்து மார்போடு அணைத்துக்கொண்டு, அழுகையும் சிரிப்புமாகப் பதிலளித்தாள்:

'என் செல்வமே! என் இதயத்தில் — அதன் ஆசையாகவே நீ மறைந்திருந்தனை! எங்கள் குலதெய்வத்துடன் நீயும் கோயில் கொண்டிருந்தனை! அதைத் தொழுதபோது உன்னையுமன்றோ நான் வழிபட்டேன்!

என்னுடைய கோரிக்கைகளிலும் என்னுடைய ஆசைகளிலும் என்னுடைய உயிரிலும்—ஏன், என்னுடைய தாயின் உயிரிலும்கூட நீ இருந்தனை!

நம் இல்லத்தைக் காக்கும் அழிவிலா சக்தி சொரூபத்தின் மடியிலே நீ தலைமுறை, தலைமுறையாகத் தாலாட்டப்பட்டிருக்கின்றாய்!

சொர்க்கத்தின் முழுமுதற்செல்வமும், அருணோதயத்தோடு பிறந்த இரட்டைப் பிறவியுமான நீ, உலக உயிர் ஓடையோடு மிதந்து வந்து என் இதயத்திலே கரை சேர்ந்துவிட்டாய்!”

— கவியரசர் இரவீந்திரநாத் தாகூர்—
நூல்: “வளர்மதி”]

ஆனந்தரங்கத்தின் அறையிலே அருணாசலத்தின் கடிதம் அவரை வரவேற்றது!

பொழுது புலர்ந்ததும், புலராதது மாகிய அந்த அதிகாலை வேளையிலே அவரது மேஜைமீது 'பளிச்'சிட்டது அந்த வெள்ளைக் கடிதம்!

கொச்சைத் தமிழிலே, தப்பும், தவறுமாய் எழுதப்பட்டிருந்த அக்கடிதத்தின் சாரமிதுதான்:

17701



'அருணாசலம்... அந்த இரட்டைக் குழந்தைகளைக் கண்டதும் ஏதோ ஓர் பாச உணர்வினால் தூண்டப்பட்டான். வெளிச்சத்திலே அவைகளைக்கண்டதும் அவனது பாசத்தின் காரணம் தெளிவாயிற்று... அவனது அருமைக் காதலியின் கன்னத்திலே காணப்பட்ட மச்சம், இரண்டு குழந்தைகளிடத்திலும் காணப்பட்டன... எனவே 'அவனது குழந்தைகளோ?' என்ற ஐயத்துடன் அவைகளைக் கடத்திச்செல்ல முற்பட்டான்... அதே நேரத்தில் பேராசிரியர் குறிப்பிட்டிருந்த 'கண்ணாடிக் குப்பி' அவனது நினைவிற்கு வந்தது! எனவே அதையும் கதிரேசனின் அறையிலே இருந்து கைப்பற்ற முனைந்து எடுத்துக் கொண்டான்! இனி அவனுக்கு நகரத்தில் வேலையில்லை! ஆகையால் இரட்டைக் குழந்தைகளோடும், கண்ணாடிக் குப்பியோடும் மறைந்து போகிறான்!'

பேராசிரியர் காட்டிய கருணைக்குத் தனது நன்றியையும் கூறியிருந்தான் அக்கடிதத்தில்!

கடிதத்தைப் படித்து முடித்ததும், பேராசிரியர் சிந்தனையிலே ஆழ்ந்தார்!

பகல் புலர்ந்துகொண்டு இருந்தது! இருள் ஓட ஆரம்பித்த நேரம்!

ஆனந்தரங்கத்தின் அறிவிலும் சிறிது, சிறிதாகச் சில ஒளிக்கீற்றுகள் ஓட ஆரம்பித்தன!

பல சிக்கலான கேள்விகளின் விடைகளை அவரது மனத்திரை காட்ட ஆரம்பித்தது! 'பிறப்பும், வளர்ப்பும்' பற்றிய அவரது ஆராய்ச்சி விரைவில் ஓர் முடிவுக்கு வருவதற்கான அறிகுறிகள் தென்படலாயின!

சம்பவங்களின் ஓட்டத்தில் அவரது நினைவுளம், மறைவுளத்திற்குத் தள்ளி இருந்த சில எண்ணங்கள் உருப்பெறலாயின!

தீப்பெட்டியை எடுத்து வந்து அருணாசலத்தின் கடிதத்தைச் சாம்பலாக்கினார் ஆனந்தரங்கம்!

அவரது களைப்பும், கவலைகளும் அத்துடன் எரிந்து சாம்பலாயின! மீண்டும் அரை மணிநேரத்தில் தனது மனத்தரசியைக் காணப் புறப்பட்டுவிட்டார் மனநூல் ஆசிரியர்! 'இன்ப உணர்வைத் தாராவுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்' என்ற அவரது மனவெழுச்சிக்கு அப்பொழுது வந்த தந்தியொன்றும் முறுக்கேற்றிற்று!

வென்னீர் ஊற்றப்பெற்ற மல்லிகைச் செடியாக மனம் வாடினுள் தாரா. மலைவுச்சியை அடைந்து விட்டதாக மனப்பால் குடித்த நேரத்திலே பனிச்சுவர் சரிந்து பள்ளத்திலே

உருண்டவனின் மனநிலை ஏற்பட்டது அவளுக்கு! சாய்ந்து நிற்க ஒருதோளும், துன்பச்சுமையை இறக்கி வைக்க ஓர் சுமை தாங்கியும் கிடைத்துவிட்டதாகக் களிப்பெய்தி நின்ற நேரத்தில், இடி போல் வந்தது அச்செய்தி!

'இரட்டைக் குழந்தைகளைக் காண வில்லை!'

பொறுப்பாகப் பேணி வந்த பொருள் தொலைந்தால் ஏற்படும் ஏக்கம் மிகக் கொடியதன்றோ?

போர்முனையில் தோற்ற தளபதியும், புரட்சியில் கவிழ்ந்த தேச பக்தரும், ஆராய்ச்சியில் முறியுண்ட அறிஞனும் போலத் துடித்தாள் தாரா!

அறிவு வந்தது முதல் அவள் வாழ்ந்த வாழ்க்கை எல்லாம் அவள் நினைவிற்கு வந்தது! அநாதைக் குழந்தையாய் அந்த இல்லத்திலே நுழைந்தவள்! அதிலே தவழ்ந்து, அதன் தரையிலே புரண்டு, தளர்நடை இட்டு வளர்ந்தவள்!

நினைவுக்கெட்டிய காலம் வரை அங்குள்ள ஒவ்வொரு பொருளின் சரித்திரமும் அவளுக்கு மனப்பாடம்! தோட்டத்து ரோஜாச் செடி முதல், காற்றில் அசைந்தாடும் திரைச்சீலை வரை அவள் தோழர்கள்! உணர்ச்சிபூர்வமான நட்பு அவர்களைப் பிணைத்திருந்தது!

ஆசிரமத்திலே வளர்ந்தவர்கள், சொந்தக்கால்களில் நிற்கத் துணிவு பிறந்ததும், வெளியேறிப் போனார்கள்;

ஆனால் தாரா, எந்த ஆசிரமத்தில் பலம் வாய்ந்த கால்களை வளர்த்துக் கொண்டாளோ அந்த நிலயத்தின் சக்தி மிக்க கால்களாகத் தானே மாறிவிட்டாள்! அங்கேயே வளர்ந்து, படித்து, அதன் தலைவியாகப் பொறுப்பேற்றாள்!

அவளது நான்கைந்து வருட நிர்வாகத்தில் இன்றுவரை எந்தக் குறையும் நேர்ந்ததில்லை! இன்று நேர்ந்து விட்டதே?

தளர்வுற்ற நிலையில் அச்செய்தியை அறிந்து சோகச்சுழலில் தாரா மூழ்கியிருந்த பொழுது ஆனந்தரங்கம் அருகிலே இருந்திருந்தால், துன்பத்தை மனம் விட்டுப் பங்கிட்டு இருப்பாள்!

இப்பொழுதோ, தனிமையில், 'தாய்' என்ற நினைவறியா அன்பை நோக்கிப் பறந்தோடியது அவளுள்ளம்!

போலீஸுக்கும், நிர்வாகத் தலைவருக்கும் திருட்டைச் சொல்லி அனுப்பி விட்டு அறையிலே நுழைந்ததும், அவள் மனம் கூவிய முதல் சொல்... 'அம்மா!'

'அம்மா... நீ யார்? நான் யார்? என்னை எங்கே கண்டாய்? எனது துன்பத்திற்காகவே என்னைப் பிறப்பித் தாயா? அம்மா...'

'எத்தனையோ பச்சிளம் குழந்தைகளின் அன்புத் தாயாக விளங்கிவரும் எனக்கு அன்னை இல்லையா? கனி தரும் மரம் தனது தாகத்தைத் தவிர்த்துக் கொள்ளத் தண்ணீர் அருந்தக் கூடாதா? அம்மா... என்னை உருவாக்கிய நீ, உலகிற்குக் கொணர்ந்த நீ... ஏன் உன்னை அருவமாகவே வைத்துக் கொண்டுவிட்டாயே?'

கன்னங்களில் கண்ணீர் நீந்த, கருத்திலே கலக்கம் பூத்து நிற்க, சோகச் சிலையாகி அமர்ந்திருந்தாள் தாரா!

அந்த நேரத்திலே திருவாளர் ஏகாம்பரம் அழைத்துவரச் சொல்லியதாகச் செய்தி வந்தது!

* * *

'**தாரா**'—சோகச் சித்திரமாக அடியெடுத்து நுழைந்த அவளைக் குலுக்கியது திருவாளர் ஏகாம்பரத்தின் குரல்.

'நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதானா?'

இடிபோல முழங்கியது, 'இன்பஉலக' அதிபரின்கேள்வி.

தாரா அசையாது நின்றாள். 'அவர் எதைக் கேள்விப்பட்டிருப்பார்?' என்ற வினாவை அலசியது அவள் உள்ளம்!

'நான் கேட்பது காதுகளில் விழ வில்லையா? நேற்றிரவு குழந்தைகள் காணமற் போனது உண்மை தானா?'

'ஆம்' என்பது போலத் தலையசைத்தாள் தாரா.

அவரிடம் அவளுக்கு மிக்க மதிப்பு. அவரது வாழ்க்கையைப் பற்றிய ஆழ்ந்த கண்ணோட்டம் அவளிடம் இல்லை. எனவே அவரைத் தனது 'பெற்றெடுக்காத தந்தை'யாக நினைந்து மதித்து வந்தாள்.

திருவாளர் ஏகாம்பரமோ, கடந்த சில வருடங்களாகத் தாராவைக் காணும் போதெல்லாம் ஓர் வேதனையை அநுபவித்து வந்தார்! அவரது நிழலிலே வளர்ந்த அச் செடியின் மலர் அவரது கண்களைச் சொக்க வைத்தது!

கண்கள் கலங்கி நின்றநிலையில் தலை குனிந்து நின்ற தாரா, தலை கவிழ்த்து நின்ற தாமரை மலர் போலத் தோற்ற மளித்தாள்!

அழகுப்பிரியராம் ஆசிரமத் தலைவர், சுடர்விடும் நெருப்பாக விளங்கிவந்த தலைவியிடம் இதுவரை வாலாட்டத் துணிந்தாரில்லை! இன்றோ, சோகத்தி னால் கனல் குறைந்த நேரத்தில் குளிர் காய்ந்து விடலாம் என்று மனப்பால் குடிக்கலானார். ஆசிரமப் பணிப்பெண் கள், சப்-இன்ஸ்பெக்டர் கதிரேசன் ஆகியோர் கூறிய தகவல்களாலும், மாலா வளர்த்துவிட்ட சந்தேகச்சாயை யாலும் அந்த ஆசை வளர்ந்தது!

பாவம், சுடப்பட்டால் பொன் ஒளி ருமே ஒழிய ஒளி குன்றாது என்று உண ராது போய்விட்டார்!

'சரி. அது போகட்டும்... நேற்றிரவு ஆசிரமத்திற்கு யார், யார் எல்லாம் வந்து போனார்கள்?' கேள்வியில் கேலி யும், கிண்டலும் கலந்திருந்தது!

தணலை வாரித் தலையிலே கொட்டி யது போலிருந்தது தாரைக்கு...நெஞ் சிலே அவமான உணர்வு பெருகி, குன் றிப் போனாள்.

கைதியைப் போலக் குனிந்து நின்ற தாராவை நெருங்கினார் திருவாளர். ஏகாம்பரம்!

'தாரை! என்ன ஊமையாகி விட் டாய்! ஆசிரமமா? அல்லது உன் அந் தப்புரம் என்று எண்ணிக் கொண் டாயா?'

கேள்விக் கணைகளால் அவளது நெஞ்சைத் துளைத்தபடி அவளைச் சுற்றி வந்தார் செட்டியார்!

'யார்...சீக்கிரம் சொல்...நேற்று யார் வந்தது?'

விரட்ட, விரட்ட ஓட்டப்பெற்ற மான்,கொம்புகளைச் சிலிர்த்துக்கொண் டது!

'அது...என் சொந்த விஷயம்! 'அநா வசியமான கேள்விகள் வேண்டாம். வேண்டுமானால் எனது வேலையை 'ராஜினமா' செய்துவிடுகிறேன்!'

'அஹ்...ஹ்...ஹா' என்று பயங்கர மாக நகைத்தார் ஏகாம்பரம்!

'சொந்த விஷயமா?அப்படி ஒன்று இருப்பதாக எண்ணிக்கொண்டாயா? தாரை! நீ ஆசிரமத்தின் சொத்து! உன்னை வளர்த்து, ஆளாக்கியவர் சொத்து! நீ அநாதையாக வந்தாய்! உன்னை நாங்கள் பாதுகாத்தோம்!

கொள்முதல்!

கண்டக்டர் ஐயா! பஸ் சார்ஜெல் லாம் கூட்டப்போறீங்களாமே! விலை கூடறதுக்கு முன்னாலே மொத்தமா ஒரு கட்டு எனக்குக் கொடுத்திருங்க! இந்தாங்க அஞ்சு ரூபா!

நீ எங்கள் சொத்து! ஏன்... என் சொத்து!'

செட்டியார் பேசிக்கொண்டே தாரா வின் அருகிலேயே மேலும் நெருங் கினார்!

தீயிட்ட பொன்னாக ஒளிர்ந்தது தாரா வின் திருமுகம்!

'ஆனால்...உன்னை மன்னிக்கிறேன்... காப்பாற்றுகிறேன்... நீ... மனது வைத் தால்...'

ஏகாம்பரம் தன் பக்கத்திலேயே வந்து விட்டதைக் குரலின் தெளிவால் உணர்ந்த தாரா தலை நிமிர்த்தாள். அவ ரது வெறிகொண்ட கண்களைப் பார்த் தாள். அடுத்த வினாடி!

'பளார்!'

அவளது மென்மை உடலிலே அவ் வளவு வலுமை எங்கிருந்து வந்தது?

ஐந்து விரல்களும் சவுக்கு நுனிகளா கச் சீறின! ஏகாம்பரம் உறுமினார்!

'சபாஷ்! தாரை! சபாஷ்!' அறை யின் வாயிலிலே நின்றிருந்தார் ஆனந்த ரங்கம்!

'அத்தான்!'

'தாரை!'

மறுகணம் இருவரும் ஒருவரானார் கள்! ஏகாம்பரம் இடிவிழுந்த தனி மரமானார்!

(வளரும்

பெண்களின் உள்ளம் மாதுளம்பழம் போன்றது! எண்ணற்ற இரகசியங்களை இதயத்துள்போட்டுஅடைத்து வைத்துக் கொண்டு, ஏதொன்றும் தெரியாதது போல வெளிக்குத் தோற்றமளிப்பது, பெண்ணுள்ளத்தின் தன்மை. இப்படித்தான், இந்த மாதுளம் பழங்கூட, வைர மணிகள் போன்ற நறுஞ் சுவைச் சுளைகளை வரிசை வரிசையாக அடுக்கி மறைத்து வைத்துக் கொண்டு வெளித் தோற்றத்திற்கு மிகச் சாதாரணமாகக் காட்சி தருகிறது.

—ஜெகசிற்பியன்

* * *

ஹேமலதா புன்னகை செய்தாள்: "பெண்களின் மனம் மிகவும் விசித்திரமானது தான்; புருஷர்களின் மேன்மையான குணங்களைக் கற்பனை உலகில் ஸ்திரீ மிகவும் போற்றுகிறாள். ஆனால் வாழ்வில்துர்க்குணம்படைத்த புருஷனுக்குத்தான் அவள் மனம் அடிமையாகிறது. இது பெண்கள் மனதில் ஊன்றியிருக்கும் பலவிதமான உணர்ச்சிகளில் ஒன்று!" என்றாள்.

—"லக்ஷ்மி"

* * *

"விளையாடுவதற்கு நான் பொம்மையுமில்லை; நீங்கள் குழந்தையுமில்லை!" என்று சீறினாள் மேகலை.

'வேண்டாம் வேண்டாம்' என்று அறிவுஇதயம் கூறிற்று. 'உன் ஆசைக்காதலன் வந்திருக்கிறான். இன்பஉலகம் திறந்து கிடக்கிறது. இதைக் கெடுத்துக் கொள்ளாதே' என்று உள் மனம் எடுத்துச் சொல்லியது. மேகலை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தன் சினத்தைக் கொட்ட ஒருவன் அகப்பட்ட சந்தோஷத்தில் இருந்தாள் அவள்.

—ரா. கி. ரங்கராஜன்

"மனம் என்னப்பா, மனம். எல்லாம் கேட்டுப் பழகிவிட்டால் மனம் உறுதியாகிவிடும். பிறக்கும்போதே வருவதில்லை. எல்லாம் பழக்கம் தான்."

—டாக்டர் மு. வ.

* * *

கத்தி ஒன்று நெஞ்சிலே குத்தப்படுமானல் முதல் கணத்திலே வலி தெரியாது; இரண்டாவது விநாடியிலே 'சுரீர்' என்று தோற்றும்; மூன்ருவது மனத்துளியில் வேதனை பிறக்கும்; அதிலிருந்து மூச்சடங்கும் வரை அல்லது முழு குணம் ஏற்படும் வரை வலி பெருகிக்கொண்டே போகும்—நிமிடத்திற்கு நிமிடம் பல்லாயிரம், லட்சம், கோடி எனப் பெருகும் பாக்டீரியன் வளர்ச்சியைப் போல.

சூடுண்ட வெண்புருவைப் போல சோகக் குரலெழுப்ப முடியவில்லை தாராவால்; என்ருலும் அவளது இதயம் அழுதது; உயிரே அழுதது!

—ஆரெஸ்ஸஸ்

* * *

"மனசே! தயங்காதே, இறங்கு! இறங்கி விடு! உன் துன்பமயமான, யாருக்கும் நன்மை விளைவிக்காத வாழ்வுக்கு முடிவு கட்டிவிடு" என்று அவளை உந்தித்தள்ளியது அக்குரல்.

—ஸ்ரீமதி ராஜம்கிருஷ்ணன்

* * *

"அப்பாடா! இப்போதுதான் என்னுடைய மனம் நிம்மதி அடைந்தது.!"

"உன் மனம் நிம்மதி அடைந்துவிட்டிருக்கலாம். ஆனல் என் மனம்?

"என் உள்ளத்தில் காதல் காற்றைப் போல் அல்லவா உருவாகிறது! அதுவும் சண்ட மாருதம்! பிரளய காலத்துச் சூருவளி!

—கி. ராஜேந்திரன்.

"கீதாவுக்கு அன்று வகுப்பில் மனம் ஈடுபடவேஇல்லை. நினைவுகள் எல்லாம் அந்தப்பெண்ணைச் சுற்றி:சுற்றியே வந்தன. இரண்டாவது மணியடித்ததும் பேராசிரியையிடம் அனுமதி பெற்றுக் கொண்டு மிகவும் ஆவலோடு வெளியே வந்தவள் நேரே மரத்தடியை நோக்கி விரைந்து சென்ருள். ஆனல்?

அங்கே அந்தப் பெண் இல்லை! அவள் வந்து போனதற்கு அடையாளமாக ஒன்றிரண்டு ரோஜா இதழ்கள் மட்டும் புழுதியிலே உதிர்ந்து கிடந்தன.

—சங்கர்

* * *

'மனிதர்களின் மனம் மாறுவதைப் பற்றி நான் யோசிக்கவில்லை. பெரியவர்கள் அதனுல்தான் மனதைக் குரங்குக்கு உவமையாகக் கூறியுள்ளார்கள். குரங்கு மனத்தைஒரு நிலைப்படுத்துவது தான் கடினமான காரியம்' என்றேன்.

'என்ன யோசிக்கிறீர்கள்? எவ்வாறு என் மனம் மாறி நான் இங்கு வந்தேன் என்பதைப் பற்றித்தானே?' என்ருள் அந்தத் தோகை மயிலின் சாயல்.

— கு. ராஜவேலு

* * *

"அப்படியானல் என் மனப் பாரம் குறைந்தது. வீணுக இந்த அல்ப விஷயத்திற்காக விவாகத்தை நிறுத்த வேண்டிய அவசிய மில்லை. நீங்கள் அனுப்பவில்லை யென்ருல் அதுவே எனக்குப்போதுமானது. உங்கள் மனத்தில் எனக்கு இன்னமும் இடம்இருக்கிறது என்பதை நான் பூரணமாக நம்புகிறேன்......"

— எஸ். ரங்கநாயகி

மனிதர்களின் மனசே ஒரு விசித்திரமாகத்தான் இருக்கிறது. ஒரு மனசு படும் வேதனையை இன்னெரு மனசு உணர்ந்து கொள்வதில்லை. எல்லாம் சுயநலமும் நம்பிக்கை இன்மையும் தான் காரணம். ஒருவரை ஒருவர் நம்பி ஒருவருக்காகவே ஒருவர் கஷ்டம் நஷ்டம், சுக துக்கம், வாழ்வு—தாழ்வு எல்லாவற்றிலும் பேதமில்லாமல் நடந்து கொண்டால்தானே காரியங்கள் நடக்கும். மோகினி இதை மனத்துஉளுக்குள்ளாகவே நினைத்துப் பேசிக் கொண்டாள், பிறகு பயங்கரமாகச் சிரித்தாள். மீண்டும் படுக்கையில் வந்து படுத்து விட்டாள்.

— பகிரதன்.

'நீங்கள் சுலபமாகச் சொல்லி விட்டீர்கள், அத்தான். பெண்களின் மனதைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. நீங்கள் எவ்வளவு சமாதானம் சொன்னுலும், மூர்த்தியிடம் அந்தப் போட்டோவைக் கண்டபின், என்மனம் நிம்மதியில்லாமல் தவிக்கிறது. அவரை அண்ணு என்று கூப்பிட என் நா கூசுகிறது' எனக் கூறி, பெரிதாக அழ ஆரம்பித்தாள்.

— "புஷ்கலா."



பார்சலை குழந்தை போல்
அணைத்துச் செல்வோம்

எந்த லாரியும் சாமான்களைச் சுமந்து செல்லும். ஆனால் டி. வி. எஸ். லாரி தான் குறிப்பிட்ட நேரத்திற்கும், பாதுகாப்பிற்கும் பெயர் போனறது. பதினான்கு வருட முதிர்ந்த தேர்ச்சியில் பண்பபடைந்த 2750 (எமது) சிப்பந்திகள் உங்கள் சாமான்களை கவனித்து காப்பாற்றிச் செல்கிறார்கள். லாரி செல்லும் இடங்களில், இடவசதிக்கு ஏற்றாப்போல், நமது பண்டக சாலைகள் உங்கள் சாமான்களை பாதுகாக்கின்றன.

ஸதர்ன் ரோட்வேஸ்
ப்ரைவேட் லிமிடெட், மதுரை

TVS-SR 177A

பாசமும் கடமையும்

எஸ்.ஜே.மணியம்மை

"பெண்ணுக்குப் போடவேண்டிய வைரத்தோட்டைப் போட்டால்தான் பெண்ணை அழைத்துக்கொள்ளுவோம். இல்லாவிட்டால் உமது பெண் எங்களுக்கு வேண்டாம். கேவலம், ஒரு வைரத்தோடு கூட போட முடியாத இந்த சம்பந்தியின் சம்மந்தம் எங்களுக்கு வேண்டாம்" என்று காரசாரமாகக் கத்திக் கொண்டிருந்தார் வக்கீல் கிருஷ்ணமாச்சாரி. அவர் பிள்ளையைப் பெற்ற மகராசர். தமது மருமகள் சாந்தாவுக்கு திருமணத்தின்போது போட வேண்டிய வைரத் தோட்டைப் போடாதபடியால் மனிதர் கல்யாணம் முடிந்ததும் தமது வஞ்சத்தை, சாந்தியை வாழாவெட்டியாக்குவதில் தீர்த்துக்கொண்டார். "ஐயா! தயவுசெய்து பொறுத்துக் கொள்ளுங்கள். வருகிற தை மாதம் கட்டாயம் போட்டு விடுகிறேன். மாப்பிள்ளைக்கும் வைர மோதிரம் போட்டுவிடுகிறேன். இப்போது மிகவும் நெருக்கடியான சமயம் ஐயா! நீங்கள் எது வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள். என் மகளின் வாழ்வை மட்டும் பாழாக்க வேண்டாம். அவள் வாழ்வு கருகினால் அந்தக் கவலையே என்னைக் கொன்று விடும். வேண்டாம், ஐயா வேண்டாம். என்னை வேதனையோடே பாதாளத்தில் இறக்காதீர்கள். தாயற்ற அவளுக்கு நீங்கள்தான் இனி தாயும் தந்தையும்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார், ராகவாச்சாரி சப்-இன்ஸ்பெக்டர். அவர் பெண்ணைப் பெற்ற துரதிருஷ்டசாலி. அவருக்குத்தொடர்ந்து நான்கும் பெண்கள். முதல் மூன்று பெண்களையும் மனைவியின் பழைய நகைகள், கொஞ்சம் பூர்வீக சொத்து இவைகளைக்கொண்டு

எந்தவிதக் குறையுமின்றி நல்ல இடங்களாகப் பார்த்துக் கொடுத்துவிட்டார். அவ்வாறே சாந்தாவுக்கும் மனக்குறையில்லாது பெரிய இடத்தில் கொடுக்க வேண்டும் என்ற ஆசையால் வக்கீல் வீட்டார் கேட்ட பணம், நகைகள், சீர் வரிசைகள் எல்லாம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். அவர் எவ்வளவு முயன்றும் வைரத்தோடு மட்டும் அவரால் போடமுடியவில்லை. சாந்தாவுக்குக் கல்யாணமாவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்தான் அவள் தாயார் இறந்துவிட்டாள்.

2

உலகத்திலே எந்தக் காரியம் நின்றாலும் காலம் மட்டும் நிற்பதில்லை. இப்போது சாந்தாவுக்குக் கல்யாணமாகி இரண்டு வருடங்களாகி விட்டன. 'இளமையின் எழிலுடன் கவலையற்ற வானம்பாடியாய்த் திரிந்த சாந்தா எங்கே? உடல் மெலிந்து, உள்ளம் நொந்து கூண்டுக்கிளியாய், சோகப் பதுமையாய் வீட்டிற்குள் நடமாடும் இந்த சாந்தா எங்கே?' என்று அவளைத் தெரிந்தவர்கள் சொல்லிக் கொண்டார்கள். இன்ஸ்பெக்டருக்கும் இதுவரை கல்யாணக்கடனை அடைக்கத்தான் சரியாக இருந்தது. இன்னும் மீதியுள்ள கடனையும் கொடுக்காததால் கடன்காரர் தொந்தரவு வேறு செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இந்த நிலையில் அவரால் வைரத்தோடு எப்படிப் போட முடியும்? அவரைப் போன்ற இன்ஸ்பெக்டர் எல்லாம் எப்படி பணம் சேர்க்கிறார்கள்? அவர்களின் நோக்கம் பணம் சேர்ப்பது. ஆனால் ராகவனோ, எத்தனையோ முறைகள் பணம் அவரைத் தேடி வந்தும் அதை வாங்க அவர் மறுத்துவிட்டார். "களவினால் ஆகிய ஆக்கம், அளவிறந்து ஆவது போலக் கெடும்" என்ற குறளை நினைந்து வாழ்க்கையைச் செவ்வையாய் நடத்தினார். அவர் வாங்கும் சம்பளத்தில்தான் எல்லாம் செய்யவேண்டும். சாந்தாவைப் பார்க்கும்போதெல்லாம் அவர் பெருமூச்சு விடுவார். எப்படிப்பட்ட கொலைகளையும், கேடிகளையும் கண்டு பதறாத அவர் மனம் சாந்தாவைக் காணும்தோறும் கலக்கமடையும். சாந்தா தன் துயரத்தை அறிந்துகொள்ளாதபடி நடந்துகொள்வார். "சாந்தா அடுத்த வருடம் என்னுடைய 'இன்ஷூரன்ஸ்' பணம் வரும். அந்தப் பணம் எல்லாவற்றையும் சேர்த்து உனக்கு வைர அட்டிகையாகவே வாங்கிப் போட்டுவிடுகிறேன்" என்று ஆறுதல் சொல்லுவார்.

சாந்தாவோ வலிய ஒரு புன்முறுவலை வரவழைத்துக்கொண்டு "அப்பா! நான் உங்களுடன் இருக்கவே விரும்புகிறேன். நானும் இல்லாவிட்டால் உங்களுக்கு வேளாவேளைக்கு உணவளித்து உபசரிப்பவர் யார்? நீங்கள் விசனப்படுகிறீர்கள். கடவுள் எல்லாவற்றையும் செம்மையாய் நடத்துவார்" என்பாள் உணர்ச்சியுடன்.

இதற்கிடையில் இன்ஸ்பெக்டர் எத்தனையோ முறை சம்பந்தியைச் சந்தித்து பேசியதெல்லாம் பயனற்றவையாயின. சாந்தாவும் தன் கணவன் சந்தருக்கு கண்ணீரைச் சிந்தி எழுதிய கடிதமெல்லாம் விழலுக்கிறைத்த நீராயிற்று.

சேர்ந்தாற்போல் பலநாட்கள் இன்ஸ்பெக்டர் வேலைமேல் வெளியூர் போக வேண்டியிருக்கும். அப்போது அவர்கள்வீட்டு வேலைக்காரி பொன்னிதான் அவளுக்குத் துணை. தந்தைக்காக தன் துக்கத்தை மறைத்து வைத்திருந்த சாந்தாவுக்குக் தனிமையில் அழுகை பீறிட்டுக்கொண்டு வரும். கணவன் சந்தர் படத்தை வைத்துக்கொண்டு கண்ணீர் விடுவாள். 'தன்னால்தானே அப்பாவுக்கு இப்போது கவலை? நமக்கு விடிவு காலம் வந்தால் அவர் சந்தோஷமாக இருப்பார். நாமும் இந்த நிலை மாறி நாலு பெண்களைப்போல் மாமி, மாமா என்றும், 'அவர்' என்றும் சொல்லிக் கொள்ளலாம். தனக்குப்பின் கல்யாணமான பங்கஜமும் ஒரு கண்ணனைப் பெற்றுவிட்டாளே?' இப்படியே மணிக்கணக்கில் சிந்தனையில்மூழ்கிவிடுவாள்.

3

"சாந்தா, சாந்தா" என்று தந்தையின் குரல் கேட்கவே ஓடிப்போய் கதவைத் திறந்தாள் சாந்தா. தன் தந்தை

குற்றவாளிக் கூண்டிலே மாப்பிள்ளை! பாசம் குமுறியது!
கடமையோ தடுத்தது!

முகத்தைக் கண்டு பயந்தே விட்டாள். இன்ஸ்பெக்டர் ராகவனின் முகத்தில் இவ்வளவு சோகத்தை அவள் கண்டதேயில்லை. அவர் முகம் சவம்போல் வெளுத்துக் காணப்பட்டது. "அப்பா! உங்களுக்குச் சுகமில்லையா? ஏன் இப்படி இருக்கிறீர்கள்?" என்று பதை பதைப்புடன் கேட்டாள்.

"ஒண்ணுமில்லையம்மா. இப்போது ஒரு கேஸை விசாரித்துவிட்டுவந்தேன். கொஞ்சம் அது மனதிற்கு வருத்தமாக இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே பொன்னி கொண்டு வந்த காப்பியை இயந்திரம் குடிப்பதுபோல் குடித்தார். பிறகு என்னவோ நினைத்துக் கொண்டவர்போல் முகத்தில் வேண்டுமென்றே புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டார்.

"சாந்தா! நான் கேட்கும் கேள்விகளுக்கு ஒளிவு மறைவின்றி பதில் சொல். நான் இப்போது இந்த நிலையில் உன்னைத் தனியே விட்டு விட்டு இறக்க நேரிட்டால் நீ என்ன செய்வாய்?"

"என்ன அப்பா இது? எனக்குப் பயமாக இருக்கிறது" என்று அவள் அழ ஆரம்பித்துவிட்டாள்.

"அழாதே சாந்தா! நான் கேட்பதில் உண்மையிருக்கிறது. உனக்குத் தாயுமில்லை. கணவனும் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையில்லை. உடன் பிறந்தோரும் அப்படியே. இந்நிலையில் நான் இறந்து விட்டால் என்ன செய்வாய்? சொல்லம்மா, சொல்" என்றார்.

"நான் அபலைப்பெண். என்ன செய்வேன்? திக்கற்றவருக்குத் தெய்வமே துணை. என்னைச் சிருட்டித்த தெய்வமும், என்னைப் பெற்ற தெய்வங்களும் துணை செய்யும். என் தெய்வம் (கணவர்) என்னைக்காப்பாற்றும் என்ற நம்பிக்கையில் என் வாழ்நாளைக் கழிப்பேன்" என்றாள் அழுதுகொண்டே.

"அம்மா! உன்னைப் பெற்ற தெய்வங்கள் இறந்த அன்றே மண்ணாகிவிட்டனர். உன் தெய்வமாகிய கணவரும் வேறொருத்திக்குச் சொந்தமாகி விட்டார். உன்னை உண்டாக்கிய தெய்வம் உன்னைக் காப்பாற்றுவதற்குங்கூட உன் முயற்சி தேவை. இப்போது முயற்சி எடுத்து ஜீவிப்பாய்" என்றார்.

"அப்பா! அன்பே உருவான நீங்களும் அம்மாவும்கருணைத் தெய்வமான மகாத்மா காந்தியும் பல அரிய சாதனைகளைச் செய்து காட்டிய மகான்களும் உயிர் விட்டபின் அந்த உடல்கள் அழிந்துப் போயின. கேவலம் இந்தப் புழு (பெண்) மாண்டால் மண்டலமா அழிந்துவிடும்? முழக்கயிறு, துளி விஷம், கிணறு இவை போதும் என்னைக் காப்பாற்றுவதற்கு" என்று 'கோ'வென அழுதாள்.

"அழாதே சாந்தா. அழாதே இன்ஸ்பெக்டர் ராகவனின் மகள் இவ்வளவு கோழையா? நீ ஏன் சாக வேண்டும்? இயற்கை அளித்த யௌவனம், அழகு, நீ படித்த கல்வி இவைகளைக் கொண்டு வாழ். அதோடு உன்னைப் போன்ற பெண்களுக்கும் வாழ வழி காட்டு" என்றார்.

"நீங்கள் சொல்வது புரியவில்லைப்பா" என்றாள் அவள்.

"சாந்தா வெறும் சடங்கினால் உன் கழுத்தில் தாலிக் கட்டப்பட்டதே ஒழிய அதனால் துன்பத்தையன்றி யாதொரு சுகத்தையும் கண்டறியாத நீ ஏன் மறு கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது? இதனால் உன் வாழ்க்கையை இன்பமாக மாற்றிக்கொண்டு வாழ்வதைவிட்டு ஏன் வீணாக மடிய வேண்டும்" என்றார்.

"அப்பா என்ன சொன்னீர்கள்? உன்னதக் கொள்கைகளைக் கொண்ட இந்துமதத்தில் தோன்றிய ராகவாச்சாரியா இப்படிச் சொல்லுகிறார்? இந்த சாந்தா ஒரு முறைதான் பிறந்தாள். அப்படியே ஒரு முறைதான் அவள் திருமணமும். வேண்டாம்பா என் மனதைப் புண்படுத்தாதீர்கள்." என்றாள் அழுது கொண்டே.

"மகளே! என்னை மன்னித்துவிடு, உன் மனதைப் புண்படுத்தியதற்கு. எனக்குத் தெரியும், என் மகள் கண்ணகி மரபினள் என்று. தன் மகளின் வாழ்வு தன் கண்முன்னே அநியாயமாய் கருகும்போது எந்தத் தந்தையின் மனமும் பேதலிக்கத்தான் செய்கிறது. உன் கணவன் கைவிட்ட இச்சமயத்தில் நானும் ஒருக்கால் இறக்க நேர்ந்தால் நீ தற்கொலை செய்துகொள்வதில்லை என்று சத்தியம் செய். உம். என்ன யோசிக்கிறாய்?" என்றார்.

அந்தக் குரலிலேதான் எத்தனை அன்பும் அக்கரையும்!

"சரியப்பா! எப்போதுமே சத்தியமாய் நான் தற்கொலை செய்து கொள்ள மாட்டேன்" என்ருள்.

"இப்போதுதான் எனக்குச்சற்று நிம்மதி ஏற்பட்டது" என்ருர் ராகவன்.

4

அன்று இரவு முழுவதும் இன்ஸ்பெக்டர் தூங்கவேயில்லை. நேற்று நடந்த அந்தக் கேசைச் சுற்றியே அவர் மனது வட்டமிட்டுக் கொண்டிருந்தது. சந்திரன்...ஆம்...அவர் மருமகன் தான் கையில் ரத்தம் சொட்டும் கத்தியுடனும் துணியெல்லாம் ரத்தக்கறையுடனும் "கொலை! கொலை!" என்று அலறியபடி போலீஸ் ஸ்டேஷனை வந்தடைந்தான். அங்கே இன்ஸ்பெக்டரைக் கண்டதும் மாமா, "என்னைக் காப்பாற்றுங்கள்." என்று அவர் காலில் மரமெனச் சாய்ந்தான். ஒரு விநாடிதான். அதற்குள் மனந்தெளிந்த இன்ஸ்பெக்டர், "யார் அது? சந்திரனு? இது விடல்லப்பா உறவு கொண்டாட! இது போலீஸ் ஸ்டேஷன் ஞாபகமிருக்கட்டும். டேய் யாரது 303 இங்கே வா! இவனைக் கைது செய்யுங்கள்" என்று கட்டளை இட்டார். ஆனல் சந்தரோ தொடர்ந்து பேசிக் கொண்டே யிருந்தான்.

பின்பு வழக்கைத் தம் டைரியில் பதிவு செய்தார். சந்திரனுக்கும் மோகன் என்றவனுக்கும் ஒரு பெண் விஷயமாகத் தகராறு. பெண்ணுக்கோ சந்திரன் மேல்தான் ஆசை. மோகனுக்கோ இதில் பொருமை. ஆகையால் சந்தர் இல்லாதபோது அந்தப் பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டதால் அப்போது அங்கு வந்து கொண்டிருந்த சந்தர் அதைக் கண்டுவிட்டான். ஆத்திரங் கொண்ட அவன் அங்கே அவனைக் கத்தியால் குத்திவிட்டான். குத்தியதும் பயந்து கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சரணடைந்தான். இதுதான் நடந்தது. கத்தியால் குத்தப்பட்டவனை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார் இன்ஸ்பெக்டர். அவர் மனதில் இப்போது 'கேசைப் பதிவு செய்வதா வேண்டாமா?' என்றுபெரிய போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

"மாமா! என்னை மன்னித்து விடுங்கள். உமது மகள் சாந்தாவை முன்னிட்டாகிலும் என்னை வாழவிடுங்கள். இந்த வழக்கை மேற்கொண்டு நடத்தாது நிறுத்திவிடுங்கள். இந்த வழக்கு கோர்ட்டுக்குப் போனலும் என் தந்தையாம் வக்கீலின் சாமார்த்தியம் அதை வென்றுவிடும். இதற்காக எவ்வளவு பணமானலும் கொடுக்கிறேன். வீணக என் தந்தையின் பேச்சைக்கேட்டதால் நானும் கெட்டேன். சாந்தாவின் வாழ்வையும் கெடுத்தேன், உங்கள் மனதையும் நோகச்செய்தேன்; இனி சாந்தாவுடன் ஒழுங்காகக் குடும்பம் நடத்துகிறேன், மாமா மனமிரங்குங்கள்! உங்கள் கையில்தான் உமது மகள் வாழ்வு இருக்கிறது" சந்தரின் அந்த உருக்கமான வேண்டுகோள் அவர் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது. அவர் அவனை எவ்வளவு உதாசினப் படுத்தியும் அவன்கேட்காமல் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டான். இது நடந்தபிறகு தான் தன் மருமகன் சிறைத் தண்டனை அடைந்ததும், அந்தச் சமயத்தில் தானும் இறக்க நேர்ந்தால் அவள் என்னசெய்வாள் என்று கேட்டு மனம் தெளிந்தார்.

"என் மகள் கண் கலங்காது களிப்புடன் வாழ வேண்டுமானல் இதை யாருக்கும் தெரியாமல் முடித்துவிட வேண்டும். இந்தச் சம்பவம் இன்னும் பலருக்குத் தெரிந்துமிராது. தெரிந்தவர்களுக்கும் விஷயத்தை வெளியில் விட வேண்டாம் என்று பணம் கொடுத்து விட்டால் போகிறது. நல்ல வேளையாக மோகனும் சாகவில்லை என் மகளுக்காக இதைக் கட்டாயம் செய்வேன்" இப்படி அவர் பெற்ற மனமும் பாசமும் மகளின் மேலுள்ள அன்பும் தூண்டின.

ஆனல் இன்ஸ்பெக்டர் உள்ளமோ "இன்ஸ்பெக்டர்! நீ சொல்வது சரியா? மகளானல் என்ன? மருமகனனல் என்ன? எல்லாருக்கும் ஒரே சட்டம் தான்! பலருடைய கேஸ்களைப் பதிவு செய்து சட்டப்படி தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டு குற்றம் செய்தவன் அதற்கான தண்டனை அடையத்தான் வேண்டும். அதுதான் நியாயம். என்று என்று வீம்பு பேசினயே? அந்தக் குற்றவாளிகளின் மனைவியர் மட்டும் இன்ப

வாழ்வு வாழ்ந்தாயிருப்பார்கள்? இன்ஸ்பெக்டர் ராகவன்! உன் கடமையிலிருந்து தவறிவிடாதே! பாசத்தை உதறிவிடு! மனதை மாற்றி இரும்பாக்கிக் கொள். தந்தை என்பதை மறந்துவிடு. உன்னை எப்போதும் இன்ஸ்பெக்டர் என்றே நினைத்துக் கொள். கடமை ஒரு இரும்புப்பாதை. ரயிலானது அதன் மேலேயே சென்றால்தான் புகை வண்டி நிலையத்தை அடைய முடியும். பாதையை விட்டு சிறிது கீழே இறங்கினாலும் பலத்த உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் உண்டாகும் என்பதை மறந்து விடாதே." இப்படி இரண்டுவிதப் போராட்டங்களிடையே ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராய்ச் சிறிது கண்ணயர்ந்தார் இன்ஸ்பெக்டர்.

மறுநாள் இன்ஸ்பெக்டர் சாந்தாவை அழைத்து போலீஸ் ஸ்டேஷனில் நடந்த யாவற்றையும் சாவகாசமாகச் சொன்னார். சாந்தா அழுவதைக் கண்டு ஆறுதல் கூறினார். சாந்தா தன் கணவனைப் பார்க்க வேண்டும் என்றதும், "போய்ப் பாரம்மா கட்டாயம் பார். அது உன் கடமை" என்று சொல்லி அவளை ஸ்டேஷனுக்கும் அழைத்துச் சென்றார்.

தன் கணவனை சிறைக் கம்பிகளுக்கு உள்ளே பார்த்ததும் அவள் கதறி அழுதாள். "அத்தான்! உங்களை இந்த நிலையில் பார்க்க வேண்டும்" என்றாள். மோகனும் மிக்க துக்கத்துடன் தன்னை மன்னிக்கும்படியும் அவள் தந்தையிடம் தனக்காக வேண்டிக் கொள்ளும்படியும் சொன்னபோது அந்தப் பெண் மனம் தன் கணவனுக்கு இந்த வழியிலாவது தானும் தந்தையும் உதவி செய்யமுடிந்ததே? என்று ஆறுதலடைந்தது. கட்டாயம் தந்தை உதவி செய்வார் என்றும் நம்பியது. அவர்கள் முதல் சந்திப்பே சிறையில்தான்! துயரத்தினூடே விடைபெற்றாள் கணவனிடம் சாந்தா.

இன்ஸ்பெக்டர் தமது வேலையை முடித்துவிட்டு வீட்டிற்குச் சென்றார். அவர் எதிர்பார்த்தபடியே அழுது கொண்டு அவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் சாந்தா. இதைச் சற்றும் எதிர்பாராத சாந்தாவுக்கு கோபமும் ஆத்திரமும் வந்தது. 'அப்பா' என்றபடியே அறையினுள் வந்தாள் 'என்ன?' என்ற முறையில் புருவத்தை உயர்த்திப் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

"அப்பா! உங்களை ஒரு வரம் கேட்கிறேன். மறுக்கமாட்டீர்களே" என்றாள்.

"கேளம்மா என் சக்திக்குட்பட்டதாயின் கட்டாயம் தருகிறேன். என் உயிர் வேண்டுமா? உத்தியோகமா...எது வேண்டும்" என்றார்.

"அப்பா! இது இரண்டுமே எனக்கு வேண்டாம். எனக்கு வேண்டியது என் வாழ்வு. அப்பா! உங்கள் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். யாரும் தன் கண்ணைத்தானே குத்திக் கொள்ளமாட்டார்கள். தன் மகளின் வாழ்வைக் கெடுக்கும் தந்தை உலகமெங்கும் தேடினாலும் இருக்கமாட்டார். அவரை எப்படியாவது எனக்காக விடுதலை செய்யுங்கள்! மனமிரங்குங்கள்" என்று அழுது கொண்டே கெஞ்சினாள். இதுவரை பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தவர் "சாந்தா! மகளாயிருந்தாலும் மருமகனாயிருந்தாலும் எல்லாருக்கும் ஒரே சட்டம்தான். நான் அந்தக் கேசை முடித்துவிட்டேன். சட்டம் அவனுக்குஅளிக்கும் தண்டனையை அவன் அடைந்தே தீர வேண்டும். அவர் பேசி முடிக்கும் முன் அவள் சீறிய புலியானாள்.

"இல்லையப்பா இல்லை! இப்போது அவர்மேல் பழிதீர்த்துக்கொண்டீர்கள்! உங்களை அவமானப்படுத்தி உமது மகளை வாழாவெட்டியாக்கியதற்கு அவர் வாழ்வைப் பாழாக்கினீர். இப்போது உமது மனதிற்குத் திருப்தி, சந்தோஷம் இல்லாவிட்டால் ஏன் உமது அன்பு மகளின் கணவர், உமது மருமகன் உங்கள் காலில் விழுந்து தம்மைக் காப்பாற்றும்படி கெஞ்சியும் சாய்க்கவில்லை. இன்ஸ்பெக்டர்களுக்கே உத்தியோக மமதையும் கர்வமும் உண்டு" என்றபடியே மேலே பேச முடியாமல் அழுதாள்.

அழுத தன் மகளின் தலையைத் தடவியபடியே "அழாதேம்மா, விதி பொல்லாதது. சில சமயங்களில் மதியும் அதை வெல்ல முடியாமல் போய் விடுகிறது. மகளே! உன்னைவிடப் பெரியது இந்த உலகில் எனக்கு ஒன்றுமில்லை. என் மகளின் இன்பவாழ்வுக்குத் தடையாயிருந்த இந்த உத்தியோகமே எனக்கு வேண்டாம். இதோபாரம்மா! என்னுடைய ராஜினமாக் கடிதம்" என்று அதை எடுத்துக் காட்டினார்.

"அப்பா! பாசத்தையும், அன்பையும் கடமைக்காக வென்ற நீங்கள் சிறந்த கடமைவீரர்." என்றாள் சாந்தா உணர்ச்சிப்பெருக்குடன். அங்கே பூரண அமைதி நிலவியது!

★

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணாடி சாமான்கள், பீங்கான், எனமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவித மான சாமான்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்
1/4, ஈவினிங் பஜார், பி. டி. மதராஸ்.

S. SANTHOSA NADAR & SON
1/4. EVENING BAZAR .... PT. MADRAS

கிளை ஆபீஸ்: 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்—3.
7, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

சரித்திர ஆதாரம் பெற்ற சிறு கதை:

வாழ்வுக்கு அழுதாளுள்

"இளம்பாரதி"

"ஆய்ச்சி, எனக்கு இது கொஞ்சங் கூடப் பொருத்தமானதாகத் தோன்றவில்லை. களத்திலிருந்து தப்பி வந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்வது நம் மரபிற்கு அப்பாற்பட்டதாயிற்றே! தோல்வியுற்றவன் களத்திலேயே இறந்துவிட வேண்டியதுதான் வீரர்களின் கொள்கை. அதை மறந்து நீங்கள் என்னை இங்கே கொண்டு வந்தது பாஞ்சாலங்குறிச்சியாரின் வீரத்தை நீங்களே கேலி செய்வது போலல்லவா இருக்கிறது..."

"அப்படிச் சொல்லாதீர்கள், மகாராசா! வீரர் குலத்திற்கு நான் என்றுமே மாசு தேட மாட்டேன். புலி பதுங்குவது தோல்வியின் அறிகுறி அல்லவே! உங்கள் உடம்பைச் சற்று தேற்றிக் கொண்டால் மீண்டும் நாட்டிற்குப் பாடுபடலாமல்லவா ? அதன் பொருட்டுத்தான் இதைச் செய்தேன். மேலும் இப்படிச் செய்வது என் கடமையாகி விட்டது"

இதைச் சொல்லி முடித்ததும் முட்டிக் கொண்டிருந்த கண்ணீர் வெள்ளமாகப் பெருக்கெடுத்தது. விம்மும் ஒலி அந்த வெள்ளத்திற்குச் சுதியாக அமைந்தது.

"ஆய்ச்சி, அழாதீர்கள்! நான் இறந்து விட்டால் உலகம் முழுதுமே முடிவைக் கொண்டுவிடுமா? கடமை மிகுந்த ஒரு தாயின் வீட்டில் இறக்கப் போகும் சந்தர்ப்பத்தை நினைத்துமகிழ்ச்சியுடன் தான் இருக்கிறேன். கடமை நிறைவேற்றிய மகிழ்ச்சி முகத்துடனேயே நீங்களும் இருங்கள், ஆய்ச்சி. அதுதான் எனக்கு மன ஆறுதலாக இருக்கும்"

"அந்த மகிழ்ச்சியை பாசம்வேரோடு அறுத்து விட்டதே, சாமி! சிவசங்கு..."

"அவனுக்கு என்ன நேர்ந்தது, ஆய்ச்சி?"

"அந்தப் படுபாவிகளின் குண்டுகளுக்கு இரையாகிவிட்டான், சாமி..."

ஊமைத்துரையின் உள்ளம் ஒரு கணம் திடுக்கிட்டது. நாட்டைக் காக்கும் காவலனின் காதுகளில் நாட்டு மக்களின் படுகொலை விவரங்கள் ரீங்காரம் செய்தால் மனச் சஞ்சலத்தைத் தவிர வேறென்ன எதிர்பார்க்க முடியும்?

"ஆய்ச்சி, என்னை மன்னித்து விடுங்கள். ஆய்ச்சி இதற்கெல்லாம் காரணம் நான் தான்! அடி பணிகிறேனென்று ஆங்கிலேயனுக்கு ஒரு சொல் சொல்லியிருந்தால் சிவசங்கு போன்றோர்கள் இறந்திருக்க மாட்டார்கள்; பசுமை நிலம் படுகளமாகியிருக்காது; நீங்களும் எனக்காக இந்தச் சிரமம் அடைந்திருக்க வேண்டியதில்லை, ஆனால் சுதந்திரத்தை அப்படி விலை கூறுவதை நீங்கள் சம்மதிப்பீர்களா ஆய்ச்சி?"

"இந்தக் கேள்வியைக் கேட்க உங்களுக்கே வேடிக்கையாகத்தோன்றவில்லையா, சாமி? சிவசங்கு இறந்து விட்டான் என்பதற்காகப் பாஞ்சாலங்குறிச்சியின் சுதந்திரத்தை—வீர சரித்திரத்தைக்— களங்கப்படுத்தும்படி நான் அவ்வளவு துரோகியாக இருக்க என்றுமே சம்மதிக்க மாட்டேன், சாமி. இன்று ஒரு சிவசங்கு இறந்து விட்டதற்காக வருந்தினல் நாளை ஆயிரமாயிரம் சிவசங்குகள் நாட்டிலே தோன்றவேண்டாமா? இதை நான் நன்ருக அறிவேன்; ஆனலும் தாய்ப்பாசம் என்னைச் சீர்குலையச் செய்கிறது!"

முன் நடந்த சம்பவங்களால் சோர்வுற்றிருந்த ஊமைத்துரையின் மனத்திற்கு ஆய்ச்சி முத்தம்மாளின் இந்தப்

காட்டிக் கொடுக்க வந்த கயவனை, சூழ்ச்சியால் முறியடித்த தமிழச்சியின் கதை!

பேச்சு ஒரு தனி ஊக்கத்தைக் கொடுத்தது. இறந்து போன சகோதரன் கட்டபொம்மனே நேரில் வந்து தாய் நாட்டைக் காக்கப் புரட்சி இரத்தத்தை உள்ளத்தில் ஏற்றி விட்டதாகப் புதுமை உணர்வு பெற்ருர் ஊமைத்துரை.

“ஆய்ச்சி! நீங்கள் வீரத் தாய்; பாஞ்சை நிலச்சரித்திரத்தில் உங்களுக்கு என்றென்றும் அழியாத புகழுண்டு!”

“சாமி, அதிகமாகப் பேசினுல் உங்கள் உடம்பு வலியுணரும். மௌனமாகப் படுத்துக் கொள்ளுங்கள்”

ஆய்ச்சி முத்தமாள் இப்படி அன்புக் கட்டளை இட்டதும் மன்னன் ஊமைத்துரை பதில் பேசாது படுக்கையில் படுத்துக் கொண்டார்.

ஆக்கரம்பட்டி கிராமத்திலிருந்து எல்லோரும் முத்தம்மாளின் வீட்டு முன்பு ஆவலாகக் காத்திருந்தார்கள். மன்னர் பிழைத்து விட்டாரென்று முத்தம்மாள் அவர்களிடம் தெரிவித்தபோது அவர்களுடைய உள்ளங்களில் எல்லையில்லாத களிப்பு உண்டாயிற்று. “துரை ராசாவுக்கு ஜே!” என்று முழங்கியபடி அங்

கேயே கொம்மாளம் போட்டுக் கூத்தாடினுர்கள். அப்படி நடந்து கொள்வது ஆபத்தானதென்று முத்தம்மாள் சொன்னதும் எல்லோரும் மௌனமாக அவரவர் தம் வீடுகளுக்குச் சென்று விட்டனர்.

அவர்களையெல்லாம் அனுப்பிவிட்டு முத்தம்மாள் வாயிற்படியிலிருந்து அடிவானத்தை நோக்கினுள். தன் மகன் சிவசங்கு அங்கே நின்று கொண்டு தன்னைப் பார்த்து முறுவலிப்பதாக அவளுக்குப் பிரமை



தோன்றிற்று. அவளை அறியாமலே கண்ணீர்'பொல பொல' வென்று தரையில் தெறித்து விழுந்தது.

* * *

கி. பி. ஆயிரத்து எண்ணூற்று ஒன்றும் ஆண்டு மே மாதம் இருபத்து நான்காம் தேதி அன்று துவங்கிய போர் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

ஆங்கிலக் கம்பெனியார் தம் தளவரிசைகளையெல்லாம் பிரயோகித்துப் பாஞ்சாலங் குறிச்சியைத் தாக்கினர். கோழி முட்டையின் வெள்ளைக் கருவை உபயோகித்துக் கட்டப்பட்ட பாஞ்சைக்கோட்டை, கொத்தளங்கள் ஆங்கிலேயர்களின் குண்டுத் தாக்குதல்களை எதிர்த்து நின்றன. நான்கு மாதங்

களாகியும் எதிரிகளை வெற்றி கொள்ள முடியவில்லையே என்று ஆங்கிலக் கம்பெனித் தளபதிகள் ஆலோசனையில் இறங்கி விட்டனர்.

அந்த ஆலோசனை வஞ்சக வழியைச் செப்பனிட்டது. புகைக் குண்டுகளை வஞ்சகமாகக் கோட்டைக்குள் செலுத்திக் கோட்டையைத் தாக்கினர். சரித்திர வழக்குப்படி வஞ்சகத்திற்கு வெற்றி கிடைத்தது. ஆங்கிலப்படை கோட்டைக்குள் நுழைந்து புகைக் குண்டுகளை இன்னும் அதிகமாகப் பிரயோகித்தது. ஆனல் எதற்காக அந்தக் கோட்டையைத் தாக்கினர்களோ அதில் ஆங்கிலேயர்களுக்கு முழு வெற்றி கிடைக்கவில்லை.

ஊமைத்துரை தம் படைகளோடு தப்பிவிட்டார்!

சதியாலோசனை மீண்டும் உருவாயிற்று. படைகளை நாலா பக்கங்களிலும் அனுப்பி வைத்து எதிரியைக் கைதியாக்கத் திட்டம் போட்டார் தளபதி அக்னியூ. படைகள் நாலாபக்கங்களிலும் பிரிவதற்கு முன்பு ஒரு உளவாளி அக்னியூவை சந்தித்தான். ஊமைத்துரையும் அவனுடைய ஆட்களும் அந்தக் கோட்டையிலிருந்து மூன்ருவது கல்லில் கூடாரமடித்திருந்ததாகவும், தற்செயலாக அவ்வழி வந்த ஆங்கிலப் படை அவர்களை வென்று முறியடித்ததாகவும் உளவாளி செய்தி கொண்டு வந்திருந்தான். இந்தச் செய்தியைக் கேட்டதும் தளபதியின் உள்ளம் வரம்பு மீறிக் குளிர்ந்து விட்டது.

"நல்ல செய்திதான் கொண்டு வந்திருக்கிருய். போர்க்களத்திலிருந்து யாரேனும் தப்பினர்களா? ஊமைத்துரையும் இறந்திருப்பானல்லவா?" மலர்ந்த முகத்திலே ஒரு சந்தேகக் குறியோடு அக்னியூ உளவாளியைக் கேட்டார்.

"நீங்கள் கொஞ்சமும் சந்தேகப்பட வேண்டாம். ஊமைத்துரை உட்பட எல்லோருமே சாவைத் தழுவிவிட்டார்கள். போர்க்களம் இப்போது பிணக்காடாக இருக்கிறது. நாம் செய்யவேண்டிய வேலையை இப்போது கழுகுகள் செய்து கொண்டிருக்கும்" உளவாளியின் குரலில் உறுதி பிணைந்திருந்தது. இருந்தாலும் தளபதியின் சந்தேகம் முழுதும் நீங்கி விடவில்லை.

"அமர் புரிந்த இடத்தில் குவிந்து கிடக்கிற பிணங்களுள் ஊமையன் கிடக்கின்ருனென்று ஆராய்ந்து பாருங்கள். அங்கே இல்லையானல் அங்கிருந்து சென்றுள்ள காலடிச் சுவடுகளின் வழியே தேடிப் போய் அவன் எங்கே இருந்தாலும் பிடித்து வாருங்கள். உயிரோடு அல்லது கொன்று அவனைக் கொண்டு வருபவர்களுக்குச் சிறந்த வெகுமதிகள் கொடுக்கப்படும். விரைந்து போய்க் காரியத்தை முடித்து மீளுங்கள்" என்று அக்னியூ உத்தர விட்டபோது சுற்றியிருந்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"இறந்து போன ஊமையனைக் கொண்டு வரப் படை முழுவதுமே செல்ல வேண்டியது அவசியந்தான? யாரேனும் ஒருவர் தலைமையில் ஒரு சிறு படை சென்றல் போதாதா?" என்று உபதளபதி ஒரு கேள்வியைக் கிளப்பியபோது அந்தக் கேள்வி அனுவசியமானது என்று அக்னியூ அதை ஒதுக்கிவிடவில்லை. சிந்தித்தார். சிந்தனை வழி காட்டிற்று.

"யாரேனும் ஒரு சிறு படைக்குத் தலைமை வகிக்கத் தயாராக இருக்கின்றீர்களா?" என்று படைத் தலைவர் கூட்டத்தை நோக்கி அக்னியூ கேள்வியை விட்டெறிந்தபோது "எட்டையாபுர மகாராஜாதான் இதற்குப் பொருத்தமானவர்" என்ற — பதில் கூட்டத்திலிருந்து வெளிவந்தது.

அதன் விளைவாகச் சிறிது நேரத்தில் எட்டையாபுரத்தைச் சேர்ந்த எட்டப்ப நாயக்கனின் தலைமையில் ஓர் ஆங்கிலப் படை போர்க்களத்தை நோக்கிப் புறப்பட்டது.

இதே சமயத்தில்......

"அம்மா, நான் பிழைக்க மாட்டேன்; இறந்து போவேன். எனக்காக வருந்தாதே. அதோ கிடக்கும் நம் சாமியைப் போய்ப்பார்! அவரைக் காப்பாற்றுவதில் உன் முயற்சியைச் செலவிடு"

போர்க்களத்தில் குற்றுயிராய்க் கிடந்த சிவசங்கு தாய் முத்தம்மாளிடம் இதைச் சொல்லி முடித்ததும் உயிரைப் பிரிந்த சிவசங்குவின் உடல் பிணக் குவியலில் ஒன்ருகி விட்டது.

நள்ளிரவில் மகனைத் தேடி வந்த முத்தம்மாள் தனக்குஇப்படிப்பட்ட கட்டளையொன்று தன் மகனிடமிருந்து ஏற்படுமென்று சிறிதும் எதிர் பார்க்கவில்லை. ஆனாலும் சாகும்போது மகன் இட்ட கட்டளை கடமையாக மாறி விட்டது முத்தம்மாளுக்கு. "எனக்காக வருந்தாதே; அவரைக் காப்பாற்றுவதில் உன் முயற்சியைச் செலவிடு!" என்ற வார்த்தைகள் முதுமை வாய்ந்த முத்தம்மாளிடம் ஒரு தனிப்பட்ட இளமையை வரவழைத்தது.

சிவசங்கு காட்டிய பிணக்குவியலுக்கிடையில் மகாராஜா ஊமைத்துரையின் தலை அசைவது தெளிவாக முத்தம்மாளுக்குத் தெரிந்தது. அவருடைய கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த அரச அடையாளம் வெண்ணிலவில் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. இறந்த மைந்தனின் தலையைத் தொட்டு முத்தமிட்டு விட்டு ஊமைத்துரையை நோக்கி நகர்ந்தாள். ஊமைத்துரைக்கு மூச்சு கஷ்டப்பட்டு வெளி வந்து கொண்டிருந்தது. தலையை எடுத்துத் தன் மடி மீது வைத்துக் கொண்டாள். நிலையற்றுச் சுழன்று கொண்டிருந்த ஊமைத்துரையின் கண் பார்வைக்கு முத்தம்மாளின் உருவம் அரை குறையாகத் தெரிந்தது. பேசுவதற்கு மட்டும் நா எழவில்லை.

தன்னைப் போலவே தன் மைந்தர்களைத் தேடிப் போர்க்களம் வந்திருந்த இன்னும் ஐந்தாறு பெண்களின் துணை கொண்டு அருகிலிருந்த தன் குடிசைக்கு ஊமைத்துரையை எடுத்துச் சென்றாள் முத்தம்மாள். செய்தி தெரிந்து கக்கரம்பட்டி கிராமம் முழுவதுமே அவளது குடிசைக்கு முன் கூடிவிட்டது, "மகாராஜா பிழைத்து நாட்டின் நிலைமை சீர்படுமா?" என்ற எண்ணம் ஒன்று தான் அந்தக் கிராமவாசிகளின் இதயங்களில் உழன்று கொண்டிருந்தது.

ஆண்களும் பெண்களும் சேர்ந்து செய்த சிகிச்சையின் பிரதிபலிப்பாய் ஊமைத்துரை பேசும் நிலைமையை அடைந்து விட்டார். கிராமவாசிகளின் ஆனந்தம் ஆட்ட பாட்டங்களாக எதிரொலித்தது! அந்த மகிழ்ச்சி ஆட்டங்கள் ஒரு வேளை ஊமைத்துரையை எதிரிகளுக்குக் காட்டிக்கொடுத்து விடுமோ? என்ற அச்சம் தோன்றியதும் சூழ்ந்திருந்தவர்களை அவரவர் தம் வீடுகளுக்கு அனுப்பி விட்டு முத்தம்மாள் நிலைப்படியில் உணர்வற்று நின்று விட்டாள். சிவசங்குவின் புன்னகையைச் சோக இதயத்தில் மானசீகமாக ரசித்தபடி.

* * *

"முத்தம்மா, மகாராஜாவைத் தேடித் துரோகிப் பயல் எட்டப்பன் வந்திருக்கானும். சண்டை செய்த இடத்தில் முதலில் தேடிவிட்டு இப்போது இங்கே வந்து கொண்டிருக்கிறானும். காடு காவல் காக்கப்போன என் மூத்த மகன் இதைக் கேள்விப்பட்டதும் என்னிடம் சொல்ல ஓடோடி வந்தான். உடனே ஆக வேண்டியதைச் செய்ய வேண்டும் முத்தம்மா!" என்று அடுத்த வீட்டுக் கிழவன் உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னபோதுதான் முத்தம்மாள் கனவை உதறித் தள்ளி விட்டுத் தன் நிலையை உணர ஆரம்பித்தாள். கிழவனுக்கருகில் அவனுடைய மூத்த மகன் குடிசைக்குள் எட்டிப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

"சரி,அண்ணைச்சி; நீங்க உடனே மதினியையும், இசக்கியம்மாளையும் வரச் சொல்லுங்கள். ஆகவேண்டியதை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்" என்று முத்தம்மாள் பதிலளித்ததும் கிழவன் போய்விட்டான். கிழவன் போன சிறிது நேரத்தில் கிழவனின் மனைவியும், கிழக்கு வீட்டு இசக்கியம்மாளும் வந்து சேர்ந்தார்கள். ஆக வேண்டியவை துரிதமாக நடைபெற்றன.

ஊமைத்துரையைப் பாயில் படுக்க வைத்துக் கண்ணை மூடிக் கொள்ளச் செய்தார்கள். சந்தனத்தை நீரில் குழைத்து இரண்டு கண்களிலும் திட்டுத் திட்டாக வைத்தார்கள். உடலெங்கும் இதே போல சந்தனம் பூசப்பட்டது. குடிசைக்குப் பின்புறமிருந்த வேம்பு மரத்திலிருந்து சிறு கிளைகள் ஒடிக்கப்பட்டு பாயைச் சுற்றிப் பரப்பப்பட்டன. சில கிளைகள் குடிசைக் கூரையிலும் தொங்கின.

எட்டப்ப நாய்க்கனின் தலைமையில் வந்த படை கக்கரம்பட்டியின் எல்லைக்குள் காலடி எடுத்து வைத்த போது சுமார் இருபது பெண்கள் முத்தம்மாளின் குடிசை முன்பு ஒப்பாரி வைத்து

அழுது கொண்டிருந்தார்கள். கிழவர்கள் கவலை தோய்ந்த முகத்தோடு கூரைச் சுவற்றை ஒட்டி வரிசையாகக் குந்தியிருந்தார்கள்.

"கண்ணோடிக் காப்பாற்றிக்
கையாலே கடன்கழித்து
மண்ணோடு புகழோடு
வாழ்ந்திருப்பாய் என்றிருந்தேன்!
விண்ணோடி இன்றுநீ
வேறாக மறைந்தாயே!
புண்ணோடு நெஞ்சோடு
புலம்புகின்றேன் போன்றாமல்"

முத்தம்மாளின் இந்த ஒப்பாரிக் குரல் மற்ற எல்லோருடைய குரல்களைக் காட்டிலும் எட்டப்ப நாயக்கனின் காதுகளில் 'கணீ'ரென்று ஒலித்தது.

"இங்கே என்ன அழுகைக் குரல்?" என்று எட்டப்பன் அருகிலிருந்த ஒரு கிழவியைக் கேட்டபோது, "இந்த முத்தம்மாள் தன் மகனை இதுவரைக்கும் ரொம்பச் செல்வமாக வளர்த்து வந்தாள். அவன் வைசூரியிலே விழுந்து நேற்று இராத்திரி இறந்துவிட்டான்" என்ற மறுமொழி வந்ததும் எட்டப்பன் நடுங்கிவிட்டார். விபரத்தை ஆங்கிலப் படைக்கு எடுத்துச் சொன்னதும் அடுத்த கணம் தலை தெறிக்கப் பின்னோக்கி ஓடிய ஆங்கிலப் படைக்குப் பின்னால் எட்டப்பனும் ஓட வேண்டிய நிலை ஏற்பட்டது. வைசூரியென்றால் வெள்ளையருக்கு அவ்வளவு அச்சமென்று எட்டப்பனுக்குத் தெரியாதோ என்னவோ?

"கண்ணே! என் கண்மணியே!
கைந்நிறைந்த கற்பகமே!
எண்ணேயென் எண்ணமெல்லாம்
இன்றிழந்தேன் நீ பிரிந்து
விண்ணேறி வீற்றிருக்க
வீணாயிம் மண்ணிழிந்து
உண்ணோயென் உயிர்நலிய
உற்றிருக்க ஒல்லேனே."

ஒப்பாரியின் ஒலி ஒடுக்க வந்த எதிரிகளை ஓட ஓட விரட்டியது.

பேய்சூழும் பிணக்காட்டில்
பிழைத்தெழுந்து வந்தாலும்
நாய்சூழும் படிவந்து
நண்ணுகின்ற நாடதனில்
தாய்சூழத் தமர்சூழத்
தன்கிளைஞர் அயல்சூழ
வாய்சூழ வாய்த்திருந்த
மாமகனே! மாண்டாயே!"

உயிர் கொடுத்தவள் — வாழ்வுக்கு அமுதானவள்—முத்தம்மாள் உணர்ச்சி வசப்பட்டுப் புலம்பிய இந்த ஒலி அலைகள் தம் காதுகளுக்கு எட்டாத தொலைவில் எதிரிகள் சென்றுவிட்ட பின்னர், ஊமைத்துரையைக் கட்டிலில் ஏற்றி உட்கார வைத்தார்கள் சுற்றியிருந்த பெண்கள். கண்ணிமைகளின் மேல் பூசப்பட்ட சந்தனத் திட்டுக்கள் உதிர்ந்து விழ்ந்தன, மன்னனை விட்டு சாவு விடை பெற்றுக் கொண்டதைப் போல.

★



அனுமான் பிராண்ட் சிகரி

நமது நாட்டில் விளையும் சிகரி கிழங்குகளிலிருந்து தயார் செய்யப்படுகிறது. நூற்றுக்கு நூறு உத்திரவாதமுள்ளது. விபரங்களுக்கு எழுதுங்கள்.

தயாரிப்பவர்கள்:

சரஸ்வதி காபி டிரேடிங் கம்பெனி,
318/320, தெப்பம் மேல் பஜார்,
விருதுநகர்.

ஒரு சொல்!

"கிருஷ்ணு"

தஞ்சாவூர் ரத்தினசாமிகோஷ்டியார் சங்கராபரணத்தைப் பிளந்து கட்டினர்கள். தெருவே கல்யாண வீட்டினுள் கசகசத்தது. அவ்வளவு கும்பல்! அத்தனை பேர் முகத்திலும் மகிழ்ச்சி பொங்கி வடிந்தது....

சீரடி பெயர்த்து, சிலம்பு ஒலிக்க நடந்து வந்தாள் பத்மா, மாலையும் கையுமாய்.

பந்தலுக்கு வெளியேயிருந்து மணமகன் சுந்தரம் ஏறுபோல், நண்பர் குழாம் புடைசூழ நடந்து வந்துகொண்டிருந்தான்...

மாலையும் கையுமாய் வரவேற்ருள் மங்கை...எங்கும் மங்களம் பொங்கியது!

தோழியர்கள் தூண்ட, இரு கன்னங்களிலும் நாணம் செம்பஞ்சுக் குழம்பைத் தீட்ட, கரம் தூக்கி கணவராகப் போகிறவன் கழுத்தில் மாலையிட முன் வந்தாள் அவள்.

நல்ல சோற்றுக்கிடையில் 'நறுக்' கென்று கல் கடித்தாற் போல "நிறுத்து! சுந்தரம், நிறுத்து" என்ற குரல் அத்தனை பேரையும் அசையாது நிறுத்திவிட்டது.

"வாடா! மாலையைக் கீழே போடு! இந்த சம்பந்தம் வேண்டாம்! வேண்டவே வேண்டாம்.

தமது பெருத்த தொந்தி குலுங்க ஓடி வந்தார் மணமகனின் தந்தை.

"அப்பா!—" பத்மாவின் விழி மலர்கள் பனித்தன. "என்னடா! பேசாமல் நிற்கிருய். நான் சொன்னல் சொன்னதுதான். இவர்கள் வண்டவாளம்வெளியாகிவிட்டது. உண்மை தெரிந்த பின் இவர்கள் வீட்டில் ஒரு வேளையாவது கை நனைப்பேனே? ஜாதி விட்ட ஜாதியில் சம்பந்தம் செய்து கொண்ட குடும்பமடா இது...நான் எப்பேர்ப்பட்ட குலத்தில் உதித்தவன் தெரியுமோ? தலைமுறை—தலைமுறையாய் ஒரு அப்பழுக்குச் சொல்ல முடியுமோ? எவனுவது விரலை மடக்கமுடியுமா? ஆச்சு! எனக்கும் ஒன்றில்லை இரண்டில்லை, மாதம் பிறந்தா அறுபது வயசாகப்போகிறது. இனிமேல் என் கொள்கைகளை விட்டு மாறுவேனே' உலகமே தலைகீழாய் மாறினுலும் நான் மாற மாட்டேனடா! எனக்கு எதற்கடா இந்தக் கோலம் எல்லாம்! நாம் தெற்கே இருந்து வந்தவர்கள் என்று தெரிந்து ஏமாற்றிவிட்டார்களடா! ..என்னடா இது! சொல்லிக் கொண்டே இருக்கிறேன். பேசாமல் இருக்கிருய்?"

தயங்கி நின்ற சுந்தரத்தினிடமிருந்து மாலையைத் தன் கரத்தினுலேயே பிடுங்கி எறிந்தார் அவர். மறுகணம் தமது பிள்ளையின் கையைப் பிடித்துக் கொண்டு பரபரவென்று வெளி யேறினர். அந்த சுருக்கிலேயே சம்பந்திகளின் டாக்ஸிகளும் ஸ்டேஷனை நோக்கி விரைந்தன. என்ன நடக்கிறது? என்றுபார்த்துத் தெரிந்துகொள்வதற்குள்ளேயே—வேகமாக—இந்த சம்பவம் நடந்துவிட்டது

அனைவரும் வியந்து நின்றனர். வேண்டியவர்கள் அனுதாபம்கூற, வேண்டாதவர்கள் மறைவில் நகைக்க, கல்யாணக் கூடம் கலகலத்துப் போய் விட்டது. மங்கள ஒலி நிரம்பி யிருக்க வேண்டிய இடத்தில் அபஸ்வரக் கூச்சல் அதிர்ந்தது. பத்மாவின் இமை விழிம்புகளில் உடைப்பெடுத்துக் கொள்வது போல நீர் திரண்டு நின்றது.

பாக்கியத்தின் கணவர் நாராயணன் தவித்தார், அந்தக் காலத்தில் படாத சிறுமைகள் எல்லாம் பட்டு எப்படியோ வேலையும் கிடைத்து

நாவினுல் சுட்டாள் பாக்கியம்; நடத்தையால் ஆற்றினுள் கல்யாணி!



குடித்தனமும் ஒன்று சேர்ந்து, ‘ஈறும் பேனாகி, பேனும் பெருமாளானது’ என்பது போல—இருந்திருந்து தலைச்சன் பெண்ணுக்குக் கல்யாணம் செய்கிறார். அந்தக் கல்யாணம் இப்படி அவலக் கூச்சலாய்ப் போனது அவரால் சகிக்கக் கூடாததாக இருந்தது. உள்ளம் பொங்கிய வேகத்தில் ஒரு வினாடியில் ‘எங்கேயாவது ஓடிவிடலாமா?’ என்று கூட நினைத்துவிட்டார்.

பாக்கியத்திற்கோ பெருத்த அவமானமாகத் தோன்றியது. இதிலிருந்து மீட்சி பெறத்தான் முடியுமா? மாலை மாற்றும் நேரத்தில் பெண் வேண்டாம் என்று உதறிவிட்டுப் போய்விட்டார்களே மகா பாவிகள்!—நேர்ந்த அவமானம் ஒரு புறம் இருக்க, இனி இந்தப் பெண்ணுக்கு வேறு வரன் தேடியாக வேண்டுமே! அது இனிமேல் சாத்தியமாகுமா?

திகைப்பு. வினாடிகளைப் பரபரவென விழுங்கிய அதே நேரத்தில் மனம் எண்ணாததெல்லாம் எண்ணிப் புண்ணாகியது. என்றோ மறந்துவிட்டதாக நினைத்திருந்த ஒன்றைத்தேடித்தேடித்துருவியது. தூணில் சாய்ந்தவாறு பாக்கியம் செய்வதறியாதவளாகி, கண்ணீர் பெருக்கினாள்...

“பாக்கியம்! பாக்கியம்!”

“ .... ”

“ஏண்டி! உன்னைத்தான் கூப்பிடுகிறேன். நேராக நிமிர்ந்து காட்டு. இப்படித் தலையைஅசைத்தால் எப்படிப் பின்னால் சரியாக வரும்?... என்று சற்றுக் கடிந்தாற்போல பேசினாள் கல்யாணி.

“எப்படி வந்தால் என்ன சித்தி! எனக்கென்ன அழகு வேண்டிக் கிடக்கு!”

“போடி அசடு! எங்கே, இப்படி முகத்தைத் திருப்பு பார்ப்போம். அடி பாவி ... அழுது கொண்டா இருந்தாய்?...

பாக்கியத்தின்மோவாயைப்பற்றி தன்பால் திருப்பிய கல்யாணி அவளுடைய விழிகளில் வேதனையின்

பளபளப்பான நீர் முத்துக்களைக் கண்டு திடுக்கிட்டாள். ஏன் இந்த நீர்ப்படலம்?

"எதற்காக இப்போ அழுகை?"

"அழாமல் பின் என்னசெய்வது? ஒன்ரு இரண்டா? மூன்று வருஷங்களாயிற்று. நான் இங்கே வந்து... இன்னும் அவருக்கு வேலை கிடைக்கவில்லையாம் ...... இன்று காலையில் வந்த தபாலிலும், அதே பல்லவிதான்..."

"கொடிக்கு காய் பாரமில்லையே பாக்கியம்?"

"போ சித்தி! கொடிக்கும் காய் பாரம்தான் ... பறிக்க வேண்டிய காலத்தில் பறித்தால்தான் நல்லது!..."

"போதும் போ! உன் வேதாந்தம் எல்லாம்...பெரிய கிழவிதான்.. பேசாமல் கிட.. உன் அப்பா வரட்டும். வேண்டிய பணத்தை அனுப்பச் சொன்னல் போகிறது... ஆமாம்...மாப்பிள்ளை பணம்கேட்டு எழுதியிருக்கிருரா?.."

"ஆமாம்; வேறென்ன...வேலை ஒன்று காலி இருக்கிறதாம். 'டெபாஸிட்' கட்டவேண்டுமாம். ஐந்நூறு ரூபாய் தேவையாம். இதோடு இது மூன்றும் தடவை...அப்பா எத்தனை தரம்தான் டணம் அனுப்புவதாம்?"

பாக்கியம் அலுப்புடன் சொன்னுள்.

கல்யாணி சிரித்தபடியே 'அந்தக் கவலை உனக்கெதற்கு? உனக்குச் செய்வதால் ஒன்றும் குறைந்து விடாது. பெற்றவர் அவர்...செய்கிருர்..."

"அதற்காக? ... செய்ய வேண்டிய கிரமப்படிக்கு எவ்வளவு வேண்டுமானலும் செய்யலாம்... அனுவசியமாய் கரும்பு ருசியென்று வேருடன் தின்பதா?...அப்பா நல்லவர் ... சித்தியும் நல்லவள் ... செய்கிருர் ... என்றும் இதுபோல் நடந்து விடுமா? எனக்கும்தான் இரண்டு குழந்தைகளாயிற்று. மேலும் எத்தனை பிறக்குமோ? எப்பொழுதும் ஒருவரே தாங்க

முடியுமா? ... அவருக்கு சுயமாக எப்பொழுதுதான் பொறுப்பு வருமோ?''

கவலை மிகுந்தவளாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் பாக்கியம். அவள் வருத்தப்படுவதைக் கண்ட கல்யாணிக்கு மனசாகவில்லை,

''ஏன் பாக்கியம் வீணுக வருத்தப்படுகிருய்? என்றைக்கும் உனக்கு நடக்கும். நாங்கள் இருக்கும் வரையில் உனக்கு ஒரு குறையும் வராது. பிறகு என் மகன் கிருஷ்ணன் இருக்கிருன். அவன் நாளைக்கும் பெரியவனுகி சம்பாதித்து முன்னுக்கு வராமலா இருக்கப் போகிருன். என் பிள்ளையைப் பற்றிப் பெருமையாய்ச் சொல்லுகிறேன் என்று எண்ணுதே... கிருஷ்ணனுக்கு உன்மேல் அவ்வளவு பிரியம். அவன் உன்னைக் கவனித்துக் கொள்ளாமலா போய் விடுவான்?''

சமாதானம்சொல்லும்தோரணையில் தான் கல்யாணி இப்படிச் சொன்னுள். ஆனல் பாக்கியத்தின் உள்மனதில் அதன் அர்த்தமே வேற்றுருவில் பதிந்து விட்டது.

''உன் புருஷனுக்கு காலணு சம்பாதிக்க வகையில்லை...இரண்டு பெண் பிறந்தாச்சு..உன்னைத்தகப்பனுர் வீட்டில் கொண்டு வந்து விட்டுவிட்டு பொறுப்பற்று நிம்மதியாய் ஊர் சுற்றுகிருன் அவன். இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டுமே! அவனுக்குத்தான் வேறு என்ன தெரியும்? அரைப் படிப்பும் கால் படிப்பும் படித்து விட்டால் போதுமா? ... நாளைக்கே என் பிள்ளை சம்பாதிப்பான். பெரிய மனிதனுவான். எங்களுக்குப் பிறகும் உன்னைச் சீராக காப்பாற்றுவான்...என்றல்லவா பேசுகிருள். உன் புருஷன் சம்பாதிக்கட்டும், நீ நன்ருக வாழ்வாய், என்று வாயில் வரவில்லையே! வருங்காலத்தில் நான் என் சித்தியின் பிள்ளையிடமும் கையேந்தி நிற்கவேண்டுமா?'' என்று பாக்கியம் நினைத்துக் கொண்டாள். கண்கள் நீரைத் தாரை தாரையாக வடித்தன.

சித்திக்கு அவள் பதிலே கூற வில்லை. உள்ளம் மட்டும் விம்மியது ... மீண்டும் மீண்டும் சித்தி சொன்ன வார்த்தைகளை மனத்தில் போட்டுப் புரட்டினுள்...எத்தனை தரம் கூட்டினுலும் அது தப்புக் கணக்காகவே இருந்தது. பாக்கியத்தின் உள்ளம் உச்சநிலையில் பொங்கி நின்றது,

கணவனுடன் குடித்தனம் நடத்த வேண்டிய பெண்ணுக்குப் பிறந்த வீட்டிலிருப்பது போன்ற வேதனை வேருென்றுமில்லை. அதை ஏன் கல்யாணி உணர்ந்து பேசவில்லை?

தலையை வாரிப் பின்னி முடித்ததும் கல்யாணி ''சரி, சரி, எழுந்திருந்து போய் முகத்தை அலம்பி நெற்றிக்கு இட்டுக்கொள். பூவைப் பறித்துக் கொண்டுவா! தொடுத்து வைக்கிறேன். அப்பப்பா வெள்ளிக்கிழமையும் அதுவுமாக உன்னைப் பார்க்கச்சகிக்கவில்லை...உம்..வருத்தம் வேறு, கடமை வேறு...பாக்கியம். நான் கவலைப்படுகிறேன் என்றஒரு மூலையில் உட்கார்ந்திருந்தால் கடமைகள் தாமாகவே நிறைவேறி விடுமா? சித்தி இப்படிச் சொல்கிருளே என்று அதற்கு வேறு வருத்தப்படாதே,பாக்கியம் எல்லாம் உன் நன்மைக்காகத்தான் சொல்கிறேன்'' என்ற கல்யாணி சீப்பிலிருந்த ரோமத்தை உருவிச் சுருட்டியவாறே எழுந்துவிட்டாள்.

பாக்கியம் முகம் கழுவிக் கொள்வதற்காககுழாயடிக்குச்சென்ருள். குழாயடியில் அவள் தம்பி கிருஷ்ணன் துவைக்கும் கல் மேல் உட்கார்ந்திருந்தான். அவன் மடியில் பாக்கியத்தின் ஐந்து வயதுப் பெண் பத்மா உட்கார்ந்து அவன்

சட்டைப் பைக்குள் தன் கையை விட்டு ஏதோ விஷமம் செய்து கொண்டிருந்தான்.

தமக்கையைக்கண்டதும் மலர்ந்த முகத்துடன் "அக்கா! உன் பெண்ணைப் பாரேன்! என்னை என்ன பாடு படுத்துகிறாள் என்று பார் அக்கா! அவள் என்னையே தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாளாம்" என்றான் கிருஷ்ணன் சிரித்தவாறு.

பாக்கியத்திற்கு அன்றைக்கு என்ன கேடுகாலம் பிடித்திருந்ததோ தெரியாது. உள்ளத்து உணர்வுகள் ஆத்திர நிலையில் ஒரு முகப்பட்டிருந்ததால் அவள் 'வெடுக்'கென்று பதில்சொன்னாள்.

"ஆமாம்! உன்னைத்தான் அவள் அவசியம் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். எல்லா விதத்திலும் அவளுக்கு சரியான ஜோடி நீ தான் ... என் தகப்பனார் செய்த தவறையே நானும் செய்ய வேண்டுமா? அவரை ஊராரும் உற்றாரும் சிரித்து, கரித்து, ஒதுக்கி வைத்தது போதும்,என்னையும் அந்த மாதிரிச் செய்ய வேண்டாம்!"

பாக்கியம் அலட்சியமாக தோள் பட்டையில் இடித்துக் கொண்டாள். உம், இவன் சம்பாதித்து இவன் கீழே நான் கையேந்தி நிற்க வேண்டுமாமே! சித்தி சகஜமாகச் சொன்ன அந்த வார்த்தைகளின் எதிர்பொருள் அவள் கண்களை அடியோடு மறைத்து விட்டது. நாவைச் சுழற்றி வார்த்தைகளைக் கொட்டி விட்டாள்.

கிருஷ்ணன் ஒரு முறை அதிர்ந்தான். ஒருவினாடி ஏதோ யோசனை செய்தவன் 'சட்'டென்று தமக்கையின் புறம் திரும்பினான். முகம் வழிய சோப்பு நுரையுடன் நின்று கொண்டிருந்தாள் பாக்கியம். ஆகவே கிருஷ்ணனின் கண்களில் நீர் நிரம்பி நின்றதை அவள் உணரவில்லை.

"அக்கா! நீ சொல்வது வாஸ்தவம்தான், நாம் இருவரும் என்ன வித்தியாசமில்லாது பழகினாலும் அக்காள்—தம்பி என்கிற உண்மையான வாஞ்சையுடன் பழகினாலும் நாளைக்கேபத்மாவிற்குக்கல்யாணம் என்றால், உன் தம்பி என்ற பெருமையுடன் நான் அந்த சபைக்கு வர முடியுமா? மாமன் முறை தான் அங்கு மதிக்கப்படுமா? அக்கா! என்னதான் ஒரு தகப்பன் வயிற்றில்பிறந்தாலும் நான் வேறு ஜாதிப் பையன்தானே..."

வர வர கிருஷ்ணன் குரல் தழுதழுத்தது.

பாக்கியம் 'சோப்பை வழித்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தாள், கிருஷ்ணன் பத்மாவைக் கீழே இறக்கி விட்டு விட்டு புழக்கடை வழியாக வெளியேறுவது அவளுக்குத் தெரிந்தது.

"ரொம்ப புத்திசாலித்தனமாகப் பேசி விட்டாயே பாக்கியம்?" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள் பாக்கியம். தாழ்வாரத்து தூணைப் பிடித்தபடி கல்யாணி நின்று கொண்டிருந்தாள். பாக்கியம் தன்னைப் பார்த்ததும் கல்யாணி 'வெடுக்' கென உள்ளே சென்று விட்டாள்.

பாக்கியத்தின் இதயத்தில் கிருஷ்ணன் மொழிந்த வார்த்தைகள் சுரப்பித்தன. 'பரபர'வென குளிர்ந்த நீரை விட்டு முகத்தை அலம்பிக் கொண்டாள். குளிர்ச்சியினூடே சுடு நீர் சரங்களை கண்கள் பெய்தன. என்ன இருந்தாலும் தான் அப்படி பேசியிருக்கக் கூடாது என்று பட்டது பாக்கியத்திற்கு. வேறு ஜாதிப் பெண்ணானாலும் சித்தி கல்யாணியின் அன்பு இல்லாவிடில் அவளுக்குத் தகப்பனார் ஏது? பிறந்த வீடுதான் ஏது? நினைத்துப் பார்க்கப்பார்க்க பாக்கியத்திற்கு வேதனையாகத்தானிருந்தது.

முதல் கோணல் முற்றும் கோணல் என்று ஒரு பழமொழி

உண்டு. பாக்கியத்தின் தகப்பனார் ஏறக்குறைய அப்படிப்பட்ட ஒரு காரியம் செய்திருந்தார். இந்தக் காலமாக இருந்தால் அவரது செய்கைக்கு ஏராளமான வரவேற்புகளும் பாராட்டுதல்களும் கிடைத்திருக்கும். அந்தக் காலமானதால் அவரைத் தம்மிலிருந்து பிரித்து வைத்து விட்டார்கள், அவருடைய இனத்தவர்கள். அவருடைய மூத்த மனைவி சௌந்திரம் ஒரு பெண்ணைப் பெற்று ஆறு வயது வளர்த்ததோடு தன் வாழ்வை முடித்துக் கொண்டு விட்டாள். சம்சாரக் கடலில் கப்பல் சில காத தூரம் செல்வதற்குள்ளேயே அவருடைய துடுப்பு நழுவி விட்டது, ஆபீஸ் விஷயமாக வெளியூர் சென்றவர் மனதிற்குப் பிடித்த ஒரு பெண்ணை மனைவியாக்கிக் கொண்டார். வேறு ஒன்றையும் அவர் லட்சியம் செய்யவில்லை.



சிலர் 'அவள் வடக்கத்திக்காரி' என்றனர். 'சிலர் இல்லை, இல்லை, மலையாளத்துப் பெண்தான். அவளுடைய தாழம்பூ நிறமும் நீண்ட தலைமயிரும்அதைச்சொல்கிறதே?' என்றனர். அவள் அழகைப் பல வாறு வர்ணித்தனர். அவளது குணத்தைக் கூடப் புகழ்ந்தனர். ஆனால் அவள் கையால் ஒரு டம்ளர் ஜலம் கூட வாங்கிக் குடிக்காமல் தம் ஜாதியைமட்டும் பத்திரமாகப் பாதுகாத்துக்கொண்டனர். இதயத்தில் ஊறிய அன்புக்கு அவர்கள்பிரதானம்அளிக்கவில்லை. அவரை விலக்கி வைப்பதிலும் அவர்களுக்குச் சிரமம் ஒன்றும்ஏற்படவில்லை. அவருடைய முதல் மனைவி சௌந்திரத்தின் பெண் பாக்கியம் மட்டும் ஊரில் தன் தாயைப் பெற்ற பாட்டியிடம் வளர்ந்து வந்தாள்.

யார் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும். ஒவ்வொருவன் தாலி கட்டிய மனைவியைக் கதறக்கதற அடித்துவிட்டு அந்தரங்கத்தில் எவ்வளவோ அக்கிரமங்கள் செய்கிறான். மனச்சாட்சிக்கும்தெய்வத்திற்கும்கூடப்பயப்படாமல் தான் என்ற மமதையுடன் மதத்துத்திரிகிறான்.ஊறிய

உலகறிய ஓர் ஏழைப்பெண்ணுக்கு வாழ்வளித்தது பாபமாகி விடுமா? அப்படி அது பாபமேயானல் அதன் விளைவை நான் ஏற்கச் சித்தமாகவே இருக்கிறேன். எமலோகத்தில் எண்ணெய்க் கொப்பரையி விட்டுப்பொரித்தாலும் சரி. நெருப்பாற்றில் தள்ளினுலும் சரி, அக்கரையில்லை, அதற்காக அவளை ஒரு போதும் கைவிட மாட்டேன்.' என்று தமது இளைய மனைவி கல்யாணியுடன் 'ஜாம் ஜாம்' என்று குடித்தனம் நடத்தி வந்தார் அவர், கல்யாணிக்கு ஒரு பிள்ளையும் பிறந்தது. அவரது வாழ்வின் படகும் ஒழுங்கான கதியில் ஆனந்தமாகச் சென்று கொண்டிருந்தது, பாக்கியத்திற்கும் அவர் ஒரு குறைவும் வைக்கவில்லை...பாட்டி வளர்த்தாளே ஒழிய அவளுடைய முழுப் பொறுப்பையும் தகப்பனுர்தான் ஏற்றுக் கொண்டிருந்தார். மூத்த பெண்ணிடத்தில் அவருக்கு மிகவும் பிரியம். கல்யாணியும் அவரை அனுசரித்தே நடந்து வந்தாள்.

பாக்கியம் நன்ருகப் படித்தாள். படிப்பு முடிந்ததும் அவளுக்கு வரன் வேட்டையில் இறங்கினுர் அவள் தகப்பனுர். இந்த இடம் அவருடைய வாழ்க்கையில் ஒரு பெரிய சோதனைக் கட்டமாக இருந்தது. பிள்ளையைப் பெற்றவர்கள் அந்தக் காலத்தில் அவரோடு முகங்கொடுத்துப் பேசத் தயங்கினர்.

"அறிவற்ற மக்கள்! கூடிய விரைவில் எல்லாம் ஒன்ருகிவிடப் போகிறது. அதற்குள் ஆயிரத் தெட்டுப் பிரிவினைகள். பதினுயிரத்தெட்டு ஜாதி வித்தியாசங்கள்! என்ன பிரமாதம்? என் பெண்ணுக்கு நான் கல்யாணம் செய்து வைக்காமலா இருக்கப் போகிறேன்! இவர்கள் முன்னிலையிலேயே அது ஜாம்! ஜாம்! என்று நடக்கிறதா இல்லையா பார்க்கிறேன்" என்ருர். அதே போல நடத்தியும் காண்பித்தார்.

பணம் பாய்ந்தது. சொன்னபடி ஆடியது. பாக்கியம் இல்லத்தரசி ஆனுள், அவள் கணவன் நாராயணனுக்கு ஏதோ ஒரு கம்பெனியில் எழுபது ரூபாய் சம்பளம் அந்தக் காலத்தில். அவ்வளவுதான். தகப்பனுரின் உதவியும் அவ்வப்பொழுது கிடைத்து வந்ததினுல் குடித்தனம் நடந்து வந்தது. நாராயணன் ஏழைதான், அதோடு சற்று படபடப்பான சுபாவமும் உடையவன். எனவே எந்த ஸ்தாபனத்திலும் நிலையாகத் தங்கி அவனுல் வேலை பார்க்க முடியவில்லை. வெங்காய ஏற்றுமதியிலிருந்து வைர வியாபாரம் வரை எல்லா இடத்திலும் அவன் உத்தியோகம் பார்த்தும் ஒன்றிலாவது சேர்ந்தாற்போல இரண்டு வருஷம் நிலைத்தது கிடையாது. பாக்கியத்திற்குச் சீக்கிரமே பெண் பிறந்துவிட்டது. அது பிறந்த வேளை அவ்வளவு நல்லதல்ல போலும்!

குழந்தை பத்மாவிற்கு இரண்டு வயது கூட ஆகவில்லை. நாராயணனுக்கு வேலை போய்விட்டது. தொடர்ச்சியாக அடுத்த வேலை கிடைக்காது போகவே பாக்கியம் தன் தகப்பனுரை அண்டி வர வேண்டியதாயிற்று.

இனி தன் கணவனுக்கு வேலை கிடைத்த பின்னர்தான் அவனுடன்வாழமுடியும்என்ற நிர்ப்பந்தத்தில் இருந்தாள் அவள். கல்யாணியும் எவ்வளவோ நல்லவள்தான். பாக்கியத்தை பெற்ற பெண்ணுக்கும் மேலாகவே நடத்திவந்தாள்...

அன்பு செய்தும் பயனில்லையே! ஒரே வார்த்தையில் வேம்பாகக் கசந்து விட்டதே! பாக்கியத்திற்கு தான் முற்றிலும் அனுதையாகி விட்டது போல ஒரு பிரமை...... அன்றைய கோபத்துடன் தகப்பனுரிடம் விடைபெற்றுக் கொண்டு கணவனிடம் வந்து சேர்ந்தவள் தான் பாக்கியம். நாராயணனுக்கு

கடிகாரம் 'ரிப்பேர்' செய்பவருக்கு மூக்குக் கண்ணாடி தேவையில்லை!

வேலை கிடைக்கவில்லை. தகப்பனாரிடமிருந்து பணம்பெற விரும்பாத பாக்கியம் தானே உபாத்தியாயினியானாள். கஷ்டப்பட்டாள் தகப்பனார் இறந்தவுடன் மட்டும் ஒரு முறை பிறந்தகம் போய் வந்தாள். அவ்வளவுதான். கல்யாணியும் கிருஷ்ணனும் கல்யாணியின் சொந்த ஊருக்குப் புறப்பட்டுப் போய் விட்டார்கள் என்பது மட்டும் தான் பாக்கியம் அறிந்த கடைசிச் செய்தி. அத்துடன் அவளது பிறந்தகத்துப் பந்தமும் ஒழிந்தது.

எந்தக் காரணத்தைக் காட்டி, அன்று விளையாட்டாகப் பேசிய தம்பியின் உள்ளத்தை சுடுசொல்லால் சுட்டாளோ, இன்று அதே காரணத்திற்காக அவள் பெண்ணின் கல்யாணம் நின்றுவிட்டது. குனிந்த தலை நிமிராமல் கண்களைத் துடைத்துக் கொண்டாள் பாக்கியம்.

"அக்கா!" என்ற குரல் அவளை நிமிர்ந்து பார்க்கச் செய்தது.

அவள் எதிரில் சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணன் நின்று கொண்டிருந்தார்.

"நீயா கிருஷ்ணா?"

"ஆமாம் அக்கா! நானே தான், நீ தான் எனக்கு அழைப்புக் கூட அனுப்பவில்லை. உடன் பிறந்த பாசத்தையும் மூடிவிட்டு உலகத்துக்குப் பயந்து கொண்டு பேசாமலிருந்து விட்டாய். ஆனால்... ஆனால்...நான் வந்து விட்டேன் அக்கா!...அம்மா கூட வந்திருக்கிறாள்...ஸ்டேஷன் வெயிட்டிங் ரூமிலேயே இருக்கிறாள்."

"கிருஷ்ணா! என்னை மன்னித்து விடப்பா!" மேலே ஏதோ சொல்ல வாயெடுத்தவளைப் பேச விடாமல் கிருஷ்ணனே பேசினான். "வரும் வழியிலேயே எல்லாம் கேள்விப்பட்டேன் அக்கா, ஒன்றுக்கும் நீ கவலைப்படாதே! உனக்கும் அத்திம்பேருக்கும் சம்மதமானால் மனப்பூர்வமாகச் சொல்! நானே பத்மாவை இதே முகூர்த்தத்தில் பண்ணிக்கொள்றேன்...உன் துன்பம் எனக்கும் துன்பம்தான் அக்கா!"

கிருஷ்ணன் தமக்கையின் அருகில் உட்கார்ந்தான். அவளது இரு கைகளையும் பிடித்துத் தன் கையினுள் அடக்கிக் கொண்டான். பாக்கியம் தன் தம்பியை ஏறெடுத்துப் பார்த்தாள். உணர்ச்சிப் பெருமிதத்தினால் அவள் உதடுகள் துடித்தன. கண்கள் நன்றிநீர் பெருக்கின.

"கிருஷ்ணா! எனக்கு மனப்பூர்வமான சம்மதம்..."

"எங்களுக்கு என்று சொல் பாக்கியம்!" என்றார் அருகில் இருந்த நாராயணன்...

கல்யாணி முதன் முதலாக தன் மகள் வீட்டினுள் நுழைந்தாள். "சித்தி!" என்ற ஒரு வார்த்தைக்கு மேல் பாக்கியத்தால் பேச முடியவில்லை. தன் பாதங்களில் வீழ்ந்து எழுந்த பாக்கியத்தை கல்யாணி ஒரு சிறு குழந்தையைப்போல் அணைத்து மகிழ்ந்தாள்.

தீயினாற் சுட்ட புண்ணை மருந்துகள் ஆற்றும், நாவினாற் சுட்ட புண்ணையும் ஆற்றுவதற்கு ஒரே ஒரு மருந்து உண்டு.

அதுதான் மாறாத அன்பு.

பாக்கியம் இந்த வார்த்தைகளின் பொருளைப் பூரணமாக உணர்ந்து கொண்டாள்.

ஊருக்கென்ன உபதேசம்?

ஜியாவுதீன்

திடுக்கிட்டுக் கண் விழித்தார், மசூதி 'முசூத்தீன்' முஹம்மத் யூசுப்!

அப்போது தான் மணி நான்கு அடித்து விட்டு ஓய்ந்தது. இன்னும் ஒரு மணி நேரகாலம் கடந்து 'பஸர்' காலைத் தொழுகைக்குப் பாங்கு கொடுத்து அனைவரையும் அழைக்க வேண்டும்.

காலைக் குளிர் காற்று 'ஜில்' லென்று வீசியது. மஸ்ஜிதின் முற்றம் சிமெண்டு பூசியதாகையினால் குளிர்ச்சியாக இருந்தது. படுத்துறங்கவும் மனம் இல்லாது எழுந்து கடமையாற்றவும் மனமில்லாது, புரண்டு கிடந்த வண்ணம் இருந்தார் யூசுப்!

'ஹஜ்ரத் பிலால்' அவர்களின் புனிதமான வேலையை மேற்கொண்டு நடத்தும் மௌதீன் முஹம்மது யூசுப் வருடம் முழுதும் மசூதியில் தான் படுத்துறங்குவார்! வெயிற் காலத்தில் மட்டும் மற்றவர்களும் காற்றுக்காக அங்கு வந்து துயில் கொள்வர். சுருங்கச் சொன்னால் அந்த மசூதியின் முக்கிய வேலைகள் அத்தனையும் யூசுப் தான் கவனிப்பார். பெயருக்குத்தான் 'டிரஸ்டி-மேனேஜர்' என்றெல்லாம் இருக்கிறார்களே தவிர 'முப்பது' ரூபாய் சம்பளத்திற்காக, தனக்கும் ஒரு வயிறு இருக்கிறது,—அதனுடன் போட்டியிட்டு வாழ ஒரு பஞ்சக் குடும்பமும் நிற்கிறது என்பதை உணர்ந்து உழைத்து வந்தார் முஹம்மத் யூசுப்! எப்போதாவது 'பாத்திஹா' ஓத வெளியாட்கள் வந்து அழைத்துப் போவார்கள்; அப்போது ஏதாவது அதிகப்படியான வருமானம் கிடைக்கும்—அதற்குமல்லவா 'மௌல்விசாஹப்' இப்போது போட்டிக்கு நிற்கிறார்!

இருள் இன்னும் சரியாக விலகவில்லை. எழுந்து கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து 'ஹவுஸில்' நிரப்பி விட்டல்லவா மற்ற வேலைகளைக் கவனிக்க வேண்டும்? முஹமத் யூசுப்புக்கு வெறுப்பாக இருந்தது; மறுகணமே 'அஸ்தகபிருல்லாஹ்' என்று தன்னையறியாமல் இறைவனிடம் மன்னிப்புக் கேட்டார்! இந்த வேலையில் இருக்கும் ஆத்ம திருப்தி வேறு எந்த வேலையில் கிடைக்கப் போகிறது? ஐந்து வேளைத் தொழுகையும் கிடைத்து விடுகிறது; வாழ்க்கை நடத்தவும் இந்த வயதான காலத்தில் வகையான ஒரு வழி! 'ஹஸ்ரத் பிலாலுக்'குக் கிடைத்த பாக்கியத்தில் ஆண்டவன் நூறில் ஒரு பங்காவது தமக்கு அளிக்காமல் இருப்பானா? இதை எல்லாம் நினைத்த போது முஹம்மத் யூசுப் தனக்குள் பெருமிதம் அடைந்து மனம் நிறைந்தார், துண்டை எடுத்து 'ஷம்லா' விட்டு தலைப்பாகையை இறுகக் கட்டிக் கொண்டார், சோர்வுடன் எழுந்து கண்களைமூடிக் கொண்டே இருட்டில் தட்டுத் தடவியபடி எழுந்து நடந்தார், 'செஹன்'

காமம் ஊனக் கண்ணை மறைத்தது; கனல் மனக் கண்ணைத் திறந்தது!

கடோசி வரை சென்று திரும்பி, ஒரு எட்டு எடுத்து வைத்தார், காலில் மிருதுவாக ஏதோ ஒன்று நசுக்கப்பட்டு விட்டது போல் உணர்ந்தார்.

மறுவிநாடி, "ஆ... ஹ்! அல்லா ... ஹ்!!" என்றலறி எழும் குரல் கேட்டுத் திடுக்கிட்டார், பாவம்! தூக்கக் கலக்கத்தில் படுத்திருந்த ஒருவர் கையில் 'நசுக்'கென மிதித்து விட்டார்.

"அடடா, மன்னிச்சுக்குங்கோ. பாய்! இருளில் தெரியாமல் மிதிச்சுட்டேன். 'மாஃப்' செய்து கொள்ளுங்கள்" பதறியபடி மன்னிப்புக் கேட்டார், மௌதீன யூசுப் சாயபு,

"அதுக்கென்ன பாய். தெரியாமல் தானே மிதிச்சுட்டீக; பரவாயில்லே—போங்கோ!"—மிதிபட்டவர் தன் வேதனையைப் பொருட்படுத்தாது, மனிதத் தன்மையுடன் நடந்து கொண்டார்.

ஆஹா! எவ்வளவு நல்லவராக இருக்கிறார்? மறுவார்த்தை பேசாதல்லவா மன்னித்து விட்டார்? எல்லோருமா இப்பேர்ப்பட்ட மனோ பாவத்துடன் நடந்து கொள்கின்றனர்? எத்தனை பேர் சினந்து சீறி விழுந்திருக்கிறார்கள்?! ஏன், தான் கூட ஒரு நாள் பகல் பொழுதில் அந்த தாவூத்ஷாவை எப்படி எல்லாம் பேசி மனம் நோகச் செய்தோம்? என்றெல்லாம் எண்ணியவராகி கிணற்றடி நாடிப் போனார் யூசுப்.

கிணற்றுக்குள் கடகால் வாளியை இறக்கி தண்ணீர் இறைக்கத் தொடங்கிய யூசுப்பின் மனதில், அந்தச் சுழலும் சக்கரம் பழைய சம்பவத்தை நினைவுக்கு முன் கொண்டு வந்து நிறுத்தியது.

நட்ட நடுப்பகல்!

'சொஹா' மதியத் தொழுகைக்குப் பின், முன்னிரவு 'மௌலூது' ஓதக் கண்விழித்த களைப்பால் அயர்ந்து குறட்டை விட்டுக் கொண்டு மசூதி செஹனில் தூங்கிக் கொண்டிருந்தார், யூசுப்!

யாரோ தன் காலை 'சதக்'கென மிதித்து விடவே திடுக்கிட்டுத் தூக்கம் கலைந்த அவர் முன்னால், தாவூத்ஷா நின்றிருந்தார்.

"அடடா! தெரியாமல் கால் பட்டு விட்டதே" என்று தனக்குள் வருத்தப்படுவது போல் கூறிக் கொண்ட அவரது கண்ணிமைகள் படபடத்தன.

யூசுப்புக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. மிதித்ததைப் பற்றிக் கூட அவர் பெரிதாகக் கவலைப் படவில்லை; தூக்கம் கெட்டு விட்டதே! விரட்ட ஆரம்பித்தார்.

"இந்த மிதிக்குப் பெயர் கால் படறதா? மிதிச்சது தான் மிதிச்சீக, நல்லவேளை—குரல் வளையிலே கால் வெக்காமப் போனீகளே! பாக்கப் பெரிய 'ஆத்மீ' மாதிரி தோன்றீக; உங்களுக்கு நான் என்ன பாவஞ்செஞ்சேன்னு இப்புடி மிதிச்சீக? 'அல்லா' தான் கேக்க வேணும்; ஏன் 'பாவா' இப்படி ஏழை எளிய வங்களோட வாயிலே உழுவுறீக?"—ஆத்திரத்தோடு வெகுகாரமாகப் பேசினார் யூசுப்,

"நான் செஞ்ச பாவத்துக்குத் தான் அந்த நாயன் எனக்குச் சரியான தண்டனை கொடுத்திட்டானே! இன்னும் என்ன வேண்டியிருக்காம்? மன்னிச்சுங்கோங்க, ஸாப்! தெரியாமே நடந்திடுச்சு" என்ற தாவூத்ஷாவின் உதட்டோர விழிம்பிலே வறட்டுச் சிரிப்பொன்று நெளிந்து நின்றது.

"தெரியாமே என்ன 'ஜீ'? கண்ணு என்ன உச்சந்தலையிலேயா இருக்கு? இப்படி பட்டப் பகலிலேயே கட்டப் போலே கெடக்குற மனுஷனை 'பசக்'குனு மிதிக்கிறீகளே!"—பொறிந்து தள்ளினார்.

தாவூத்ஷாவின் இமைக்கோட்டிலே இரு சொட்டு நீர் துளிர்த்தது!

"செஞ்ச தவறுக்கு மன்னிப்புக் கேக்கறது மனிதச் செயல்;மன்னிக்கிறது 'தெய்வச் செயல்'னு பெரியவக சொல்லுவாக; அசந்தர்ப்பமா நடந்த இந்தச் சின்னத்தப்புக்கே இப்புடி வையறீகளே?"—தாவூத்ஷா பொருமையுடன்—தான் பேசினார்.

"அசந்தர்ப்பமா, இது? அசல் முரட்டுத்தனமா. என்ன? கண்ணைத் திறந்தமானிக்கு வந்தாக்க மிதிப்பீகளா?"—யூசுப்பாயின் கோபம் தணிந்த பாடில்லை.

"உபதேசம் மத்தவகளுக்கு செய்யறது மிகவும் லேசான விஷயம். அதைக் கடைப் பிடிக்கிறது தான் ரொம்ப 'கஸ்டம்! நானும் அந்த மாதிரி நடந்துக்கிட்டதுனாலே தான், உங்களை மிதிக்க நேர்ந்தது. இல்லேன்னா..." என்று கூறிக் கொண்டு வந்த தாவூத்ஷாவின் பேச்சின் இடையில் வெட்டினார், யூசுப்!

"மிதிச்சதுக்கு காரணம் கேட்குறேன்; அதுக்குச் சரியான 'ஜவாப்' சொல்லாமே கதை அளக்க ஆரம்பிச்சுட்டீகளே?!"

"கதையல்ல; காரணம் தான் கூற வந்தேன். நீங்கள் ஆத்திரக்காரர் என்பதோடு அவசரக் குடுக்கை என்றும் தெரிவித்துக் கொள்றீக!"

"என்ன திமிர்? கடைசியிலே மிதிச்சமட்டோடு நிக்காமே என்னையே ஆத்திரக்காரன்—அவசரக்காரன்னு அடிச்சுப் பேச ஆரம்பிச்சுட்டீகளா? பெரிய மனுஷன்னு விடறேன்; வார்த்தையை அத்தோட விட்டுட்டு வழியப்பாத்து போங்க 'ஜனுப்'!...'ஏளன இளக்கார சுருதி கூட்டிப் பேசினார், யூசப் சாயபு.

"வழியைப் பார்த்துப் போக கண் பார்வை அவசியமல்லவா? அதையே இழந்து 'அந்தா'கபோதியாக இருக்கும் நான், செய்த பாபத்திற்காகக் கஷ்டப்படுவதுடன் உங்களைப்போலவங்களிடமும் இப்புடி ஏச்சும் பேச்சும் வாங்கனுமின்னு 'தக்தீர்' விதியிலே எழுதியிருக்கும் போது........." என்று உணர்ச்சியுடன் தொண்டையடைக்கக் கூறிக் கொண்டு வந்த தாவூத்ஷா சோகத்தால் வார்த்தையை முடிக்க முடியாமல் தவித்தார்.

"என்ன?! கண்பார்வை இல்லீங்களா?!"—'மௌதின் யூசுப்பின் இதய விளிம்பிலே தேள் கொட்டினாற்போல்'சுருக்'கென்று தைத்தது தான் நடந்து கொண்டதற்கு மிகவும் மனம் வருந்தினார். தாவூத்ஷா மன்னிப்புக் கேட்டது போக இப்போது அவரிடம் முஹம்மது யூசுப் மன்னிப்புக் கேட்டார்.

"நீங்கள் என்ன செய்து விட்டீர்கள் என்று நான் உங்களை மன்னிப்பது? முடிந்தால் அந்த எல்லாம்வல்ல 'அல்லாஹ்'விடம் எனக்காக பாபமன்னிப்பை 'துவா' கேளுங்கள்; நான் கொடுத்து வைத்தவனாவேன்!"—வரண்டு போன நெஞ்சில் சுரந்தன இந்த ஈரமுள்ள வார்த்தைகள்.

யூசுப்சாயபுவின் நாவுபேச இயலாமல் உலர்ந்து போயிற்று! கண்களில் கூட லேசாக மூடுநீர் சுரந்தது; அவரும் மனிதர் தானே? அல்லாவின்மேல்'ஈமான்'கொண்ட நம்பிக்கையுள்ள 'மூமின்' தான்! 'அடஅல்லாவே! இப்படி முன் பின் யோசிக்காமல் பெரியவரோடு மனம் நோகும்படி பேசி விட்டேனே?' என்று உளம் நொந்தவராக அவரிடம் தன் கோபத்திற்கு மீண்டும் மீண்டும் மன்னிப்புக் கேட்டார்.

அப்போது தான் அவரது பெயர் தாவூத்ஷா என்றும், ஒரு 'ரிடையர்டு' ரெயில்வே டிரைவர் என்றும் அறிந்தார். அடிக்கடி',

அவர் தனது பாபச் செயலால் தான் பார்வை இழந்தார் என்று கூறுகிறாரே' ஏன் என்று யோசித்தார், அவரிடமே கேட்டும் விட்டார்! பதில்?—அவர் கூறினால் தானே! தன்னைப் பற்றிய மற்ற விஷயங்களைக் கூற மறுத்து விடுவார்!

'நடந்து கடந்து மறைந்த அந்த 'பேமானி'ச் செயலை கூறக் கூட தன் நா கூசுகிறது' என்று ஏதேதோ கூறி மழுப்பி விடுவார். ஆனால் ஆண்டவனிடம் அந்த ஒரு பாபத்திற்காக மன்னிப்புக் கோரி அடிக்கடி கையேந்தி 'துவா' செய்தார்.

......இதை எல்லாம் நினைத்தவாறே சிந்தனையை ஓட விட்டிருந்த முஹம்மத் யூசுப் நீர் நிறைந்து வடிவதைக் கண்டு தண்ணீர் இறைப்பதை நிறுத்தினார். அவரது கைகள் வலி எடுத்தன. தான் சற்று முன் தற்செயலாக மிதித்துவிட்ட நபரைக் காண வேண்டுமென்ற ஆவல் எழுந்து உந்த அந்த இடம் நோக்கி விரைந்தார்.

இருள் சற்று விலகி இருந்தது—மிதிபட்டவர், எழுந்து அமர்ந்து இருகரங்களையும் பரப்பி ஏந்தி, ஆதி அந்தமில்லா அந்த அனந்தமான இறையோனிடம் 'துவா' வேண்டுதல் புரிந்து கொண்டிருந்தார். அவரது ஒளியிழந்த நயனங்களில் நீர் நிறைந்து வழிந்த வண்ணமிருந்தது. யூசுப் சாயபு அந்த மனிதரைக் கூர்ந்து கவனித்தார். வேறு யாருமில்லை; தாவூத் ஷா தான்!



சாந்தமாகத் திகழும் அவர் உள்ளத்துள்ளே அரித்துத் தின்றுபேயா

டும் வேதனை தான் என்ன? ஏன் அதைக் கூற மறுக்கிறார்?

அன்று மாலை 'அஸர்' தொழுகையின் போது யாரோ 'மவுத்'தாகி 'ஜனஸா' வந்திருப்பதாகவும், தொழுகை நடத்தி விடுமாறும் மௌதீன் யூசுப்பாயை ஒருவர் கேட்டுக் கொண்டார்!

வழக்கமாக 'ஜனஸா' தொழுகையைக் காஜி யாரோ, அவரில்லாதபட்சத்தில் 'மௌல்விஹ்' சாயபுவே தான் நடத்துவார்கள். அந்த இருவரும் இன்றிருந்தும், தன்னை அழைக்கக் காரணம் கேட்டார். யூசுப் சாயபு!

பதிலைக் கேள்வியுற்று சீறி விழுந்தார்!

"இறந்து போனவர் ஒரு 'ஷைத்தான்' மனசு படைத்தவர். வாழ்நாள் முழுதும் சூதும் குடியுமே பழக்கமாகக் கொண்டவர்! அத்தோடு மட்டுமிருந்தால் தேவலையே ஐம்பது வயதைத் தாண்டிய பிறகும் தனது தம்பி மனைவியையே தாரமாக்க நினைத்தாராம்—சண்டாளர்!" என்ற விஷயத்தைக் கேள்வியுற்றும் யூசுப்பால் கோபப்படாதிருக்க முடியுமா?

"சே! அல்லாஹ், அவரை உயிரோடு பொதச்சிருக்க வேணும்?" என்று கருவினார். அதற்கும் பதில் கிடைத்தது; "அவர் தம்பியோட சம்சாரமே அதுக்கு

தண்டனை கொடுத்திட்டானாம். தீய எண்ணத்துடன் தன்னை நெருங்கிய அவரை தன் கையிலிருந்த சாம்பிராணித் தட்டை அவர் முகத்தில் வீசி எறிந்தாளாம்! எந்த ஒரு அழகைக்

கண்டு ரசித்து, கருத்தை வெறுப்புத்தரும் வழியில் செலுத்தத் தூண்டியதோ அந்த இரு கண்களிலும் சின்னஞ்சிறு தீக்கங்குகள் விழுந்து சுட்டுப் பொசுக்கி விட்டனவாம். அதற்கப்புறம் பத்து வருடகாலம் குருடராகப் படாத பாடுபட்டு, இன்று திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டு 'மவுத்' ஆகி விட்டாராம்!'' இதை எல்லாம் கேள்வியுற்ற 'மௌதீன்' யூசுப் சாயபுவின் முகத்திலே ஒரு சிறு கலக்கம்; கரிசனை!

''இறந்தவரின் பெயரென்ன?'' என்று தனக்கே புரியாத ஒரு சந்தேகக் கேள்வியை எழுப்பிய யூசுப்பின் இதயத்துடிப்பு பலமாக அடித்துக் கொண்டது.

''தாவூத்ஷா! ரிடையர்டு ரெயில்வே டிரைவர்!'' எந்த ஒரு பெயர் பதிலாகக் கிடைக்கக் கூடாது என்று நினைத்தாரோ அதே பெயர்தான், பதிலாகக் கிடைத்தது.

'மௌதீன்' முஹம்மத் யூசுப் பிரமை பிடித்தாற் போலானார். அவர் நெஞ்சம் துடிதுடித்தது. தாவூத்ஷா ஒரு சமுதாயத் துரோகியா?' என்ற கேள்வியை தனக்குள் எழுப்பினார். அதை மழுப்பிற்று, மனத்தின் மற்றொரு கூறு!

சுற்றிலும் ஒருமுறை கண்ணோட்டம் பாய விட்டார் முகம்மது யூசுப்! 'ஹாஜி'களும் 'மௌல்விஹ்'களுமாக நின்றிருந்தனர்—தொழுகை நடத்த மறுத்து! என்ன மதியீனம்?! இவர்களெல்லாம் ஊருக்குபதேசம் செய்யத்தான் இருக்கிறார்களே தவிர, தன்னைத் தானே சீர்திருத்திக் கொள்ள ஏன் முற்படுவதில்லை? அதற்கு விடை......?–'ரஹ்மான்' அவர்களையும் மன்னிப்பாராக!

துணிந்து தொழுகை நடத்தக் கிளம்பினார் 'மௌதீன்' முஹம்மத் யூசுப்! எண்ணி நான்கே பேர்கள் தான் அவருக்குப்பின் நின்று 'ஜனாஸா' தொழுகையை நிறைவேற்றினார்கள்.

''ஆமாம் நீங்க போடற 'பொம்மனாட்டி' படங்களிலே முகம் கோரமாவே இருக்கே! ஏன்?''

''உம் முகத்தை அடிக்கடி பார்க்கிறதனாலேதான்!''

''இந்த 'மௌதீன்' பயல் பணங்காசுக்காக எந்த 'ஹராமான' செயலுக்கும் உடன் படுவானே!'' என்ற ஒரு குரல் எழும்ப அதற்குச் சுருதி கூட்டினார் போல் பலர் சிரிப்பொலி கிளப்பினர்!

அதை எல்லாம் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை யூசுப்!

தாவூத்ஷாவை 'கபர்' புதைகுழியில் இறக்கினார்கள். மூன்று பிடி மண் அள்ளிப் போட்டார் முஹம்மது யூசுப்! தாவூத்ஷாவிற்கு பாபவிமோசனமளித்து சொர்க்க வாசிகளான 'பிர்தௌஸி'களில் ஒருவராகத்திகழ அருள்புரியுமாறு வல்லோன் 'அல்லாஹ்'வை பரிசுத்த இதயத்தோடு வேண்டிக் கொண்டார்!

'தானே, சரியாகத்திருந்தாத போது ஊருக்கென்ன உபதேசம்?' என அடிக்கடி முணுமுணுத்தன அவரது உதடுகள்.

தெலுங்கில் :
அங்கர வெங்கட்ட கிருஷ்ண ராவ்

தமிழில் :
புதுமைச்சித்தன்

இரண்டு நாட்கள் கலக்கும் வேளை; நிசி இரவு. நான், இந்தக் கதையின் பாத்திரங்கள் நிகழ்த்திய நிகழ்ச்சிகளைக் கோடிட்டுக் காட்டுவதற்காகப் பேனாவை எடுத்த அந்தக்கணத்தில், என்முன் ஒரு காட்சி விரிந்தது.

பஞ்சுமேகத் துணுக்குகளுக்கிடையிலிருந்து வந்த வெண்ணிலவின் மங்கிய ஒளியால் மின்னியது மணல். நிசப்தமான இரவில், அடியுண்ட வேங்கையின் கர்ஜனையைப் போலிருந்தது கடலின் 'ஹோ' என்ற பேரிரைச்சல். நிலையாக நிற்காமல் படுவேகமாக வீசியது காற்று. விசாகப் பட்டினக் கடற்கரை!

அந்தப் பயங்கர வேளையில், இருந்தும் இல்லாமலும் இருந்த ஒளியில், மணலில் 'சரக்-சரக்'என காலடி ஓசைப்பட இலட்சியமில்லாத ஓட்டத்துடன் நீர்வரை வந்த ஒரு பெண் நின்று விட்டவளாய் வானத்துச்சந்திரனைப்பார்த்தாள்! நிலவொளியில் உருகிய தங்கம் போன்ற அந்தப் பெண்ணின் அழகு முக ரோஜாக் கன்னத்தில் ஒரு கண்ணீர் துளி ஜொலித்தது— மின்சார விளக்கொளிபட்டு மூக்குத்தி பேஸரியின் வைரங்கள் மின்னுவது மாதிரி!

'இவள் தன் கைகளாலேயே உயிர்க் கொலை செய்து கொள்ளப் போகிறாளா?—என் பேனா என்னைக் கேட்டது. பேனாவைக் கீழே வைத்த நான் தலையைத் தடவிக் கொண்டேன், அந்தக் கேள்விக்குரிய பதிலை அந்தப் பெண்ணே அளிக்க வேண்டும். என் பாத்திரங்களை நான் கட்டளை இட மாட்டேன். அவர்களே வந்து தங்கள் விதியை நிர்ணயித்துக் கொண்டால் நான் எழுதுவேன், பார்த்ததைப் பார்த்தபடி, கேட்டதைக் கேட்டபடி!

கைக்கடிகாரம், "டிக் – டிக்" என்ற மெல்லிய ஓசையுடன் பத்து நிமிடங்களைக் கடத்தியது. என் பேனா எழுந்து மீண்டும் வேலை செய்ய வந்தது. அங்கே,

வண்டு ஒன்றுதான்! மலர்களோ மூன்று! மலர்களின் மனப்போராட்டத்தைப் படம் பிடிக்கிறது, 'நீலக்கடல்'!

தப்பியோடி விட்டமானைக் கண்ட சிங்கத்தின் கர்ஜனையைப் போல, அலைகள் 'ஹோ' என ஆர்ப்பரித்தன!

★

தந்தியைப் படித்தவுடன் அருணா எகிறிக்குதித்தாள். "நாளை காப்டன் பாலு வருகிறான்"- தந்தி பேசியது.

மதருஸ் மெயிலில் புறப்பட்டுச் சென்று அவனை எதிர்கொண்டழைக்க வேண்டாமா? அதற்காக கார் அனுப்பச் சொல்லி அப்பாவுக்குப் ஃபோன் செய்தாள் அருணா. கார் வந்தது. எத்தனையெத்தனையோ புடவைகளை, இரவிக்கைகளைமாற்றிக்கடைசியில் எப்படியோ அவள் உடுத்துக் கொண்டாள், 'கஷ்'! கடுமையாக உள்ளதென்று, 'ஆட்டோ தில் பஹார்' அல்ட்டி விடுகிறதென்று, 'ஜாஸ்மின்' காட்டாக இருக்கிறதென்று, புனுகை எடுத்து இரு விழிப்புருவங்களிலும் தீட்டிக் கொண்டு மீதியை 'பளபள' என மின்னும் கூந்தலில் தடவி அதன் சுக மணத்தில் சுற்று மெய்மறந்து நின்றாள். முடிவில், வண்ணத்துப் பூச்சி போல் தயாராகி விட்டாள். காரில் ஏறி 'ஹௌரா' ஸ்டேஷனை யடைந்தாள்,

மெயில் வந்தது; ஜன சமுத்திரத்தைத் துளைத்துக்கொண்டு ஆவலுடன் முதல் வகுப்புப் பெட்டிகளின் அருகில் சென்று பார்த்தாள். அவள் மனம் சிறுத்து விட்டது. பாலு வரவில்லை! எப்பொழுதும் ஆயிரக் கணக்கில் ஜனசந்தடி கொண்ட ஹௌரா ஸ்டேஷன் நிர்மானுஷ்யமாகத் தோன்றியது அவளுக்கு! மெதுவாக வந்து காரில் உட்கார்ந்தாள்.

"கேப்டன் சார் வரவில்லையா அம்மா?" என்று கேட்டான் டிரைவர். 'உம்' என்ற முகத்துடன் "இல்லை" என்றாள். கார் வீட்டை நோக்கி விரைந்தது.

அருணா, தன் அறைக்குச் சென்று சோர்வுடன் விழுந்து விட்டாள். எதிரில் இருந்த நிலைக்கண்ணாடியில் தன் பூரண உருவத்தைக் கண்டதும் அவளுக்குக் கண்களில் நீர் சுரந்தது. அந்த ஆசாபங்கத்திற்கு மிகவும் நொந்து கொண்டாள் அருணா.

சாப்பாட்டை அப்படி இப்படி முடித்துக் கொண்டு சோபாவில் அமர்ந்தவளாய் தந்தியைப் பார்த்தாள்; பார்த்ததில் குறையில்லை! 'கேப்டன் பாலு ஏன் வரவில்லையோ, தெரியவில்லையே!"-அவள் மனம் பலப்பல விதமாகச் சென்றது.

பிற்பகல் மூன்று மணிக்கு அருணாவின் தந்தை ஹீராலால் வீட்டிற்கு வந்தார். அவர் கல்கத்தா ஹைகோர்ட் ஜட்ஜ். அவர் ஜுடீஷியலில் பஞ்சாப், உத்திரப் பிரதேசம், மத்திய பாரதம், முதலிய இடங்களில் நெடுங்காலம் ஊழியம் புரிந்து விட்டு கல்கத்தாவிற்கு வந்து ஒரு வருஷமே ஆகிறது. கௌரவமான குடும்பஸ்தர்; பக்தியுடையவர்; மாமிசம் புசிக்காதவர். அவர். அருணாவின் வாடிய முகத்தைக் கண்டு 'விஷயமென்ன?' என்று கேட்டார். அருணா பதில் கூறாமல் தந்தியை அவரிடம் கொடுத்தாள்.

"மறந்து விட்டேன் அம்மா, பாலு வரவில்லையா?"

"வரவில்லை அவர்!"

"அவன் இராணுவ ஆசாமி உத்திரவுக்குக் கீழ்ப்படிபவன்: வேறெங்காவது போகச் சொல்லி உத்திரவு வந்ததோ: இல்லாவிட்டால், வழியில் எவராவது தெரிந்தவர்கள் பலவந்தமாக இறக்கி விட்டார்களோ, என்னவோ! பின்னால் தெரியும்! சாயந்திரம் எல்லாம் தெரியும்!"

முதல் வார்த்தைகள் அவளைக் கொஞ்சம் சந்தேகத்தில் ஆழ்த்திய

தென்ருலும், கடைசி வார்த்தைகள் பயத்தில் ஆழ்த்தின!

மற்ருெரு அலை அடியுண்ட கருநாகம் போல் சீறி எழுந்து தரையில் மோதியது, நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். திட்டு திட்டான மேகங்களுக்கிடையில் பிரகாசித்த சந்திர ஒளி, சிதறிய அலையின் நீர்த்துளி மீது பட்டு—உருக்கிய தங்கம் போல் பிரகாசிக்கச் செய்தது. அந்த ஸ்திரியின் முகத்தின் மீது சாந்தியின் காந்தி விரிந்தது. 'சட்'டென்று காட்சி மாறியது.

"பாலு... என் கோரிக்கையை நிறைவேற்றி விட்டாயே!"

"கோரிக்கை என்ன; உன் ஆக்ஞை...நான் வருவேனென்று உனக்கு எப்படித் தெரியும், ரமா?"

"ரமாவுக்குக் கனவு காண்பதில் நல்ல பழக்கமுண்டு. வருங்காலத்தை சாதாரணமாக ரமா, சொப்பனத்திலேயே அறிந்துகொள்வாள். நீங்கள் வருவீர்களென்று நேற்றிரவு கனவு கண்டிருப்பாள்!" என்ற பவானியின் பேச்சைக் கேட்டு, பாலு 'கல கல'வென்று சிரித்தான். ரமா, லேசாகப் புன்னகைத்தாள்.

'தலக்' ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டரின் மகள் பவானி. ரமாவும்பவானியும் பள்ளித்தோழிகள். இவர்கள் இருவரும், கல்கத்தாவில் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருப்பவர்கள்.

"ரமா மகா குறும்புக்காரி. நாங்கள் பிறந்தது ஜலந்தரில்; நாங்கள் அடுத்த அடுத்த வீட்டினர். இவள் என்னை விட திடகாத்திரமாக இருந்தாள். என்னைச் சாக அடிப்பாள் என்ருன் கேப்டன் பாலு.

"பவானி, பாலுவின் பேச்சை நம்பாதே! பின் கதவைத் தாழிட்டு 'எவரும் வராமல் பார்த்துக்கொள்' என்று என்னைக் காவல் இருக்கச் செய்வார். எவராவது பார்த்து விட்டால் அடி உதை எல்லாம் எனக்கே தான்; தப்பித்துக் கொண்டால் தான் பறித்த கொய்யாப் பழங்களில் ஒன்றுகூட எனக்குத் தரமாட்டார்!"

"அப்போது இவள் என்ன செய்வாள் தெரியும், பவானி? மேலே விழுந்து சீறி தலைமயிரைப் பிடித்துக் கொண்டு...பார்த்தீர்களா! மணிக்கட்டில் காயம்; இது இவளுடைய பிரசாதமே! இதோ பாருங்கள், இரண்டு பற்கள் அடையாளம்!" என்று பாலு சொன்னவுடன் மூவரும் சிரித்தார்கள்.

'தலக்' ஸ்டேஷனில் எப்பொழுதும் நிற்காத மெயில் எதிர்பாரா விதமாக அன்று அரை மணி நேரம் நிற்க நேர்ந்து விட்டது. பாலு உட்கார்ந்திருந்த பெட்டி சரியாக ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டின் முன் நின்றது. வராந்தாவில் உட்கார்ந்து ரமாவும் பவானியும் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர், அப்பொழுது பாலு அவர்கள் கண்ணில் பட்டு விட்டான், ரமாவுக்குத் தன் கண்களையே நம்பமுடியாமல் போய் விட்டது!

அன்று அவர்களுக்கு வகுப்பு இல்லை. அதனுல் ரமா பவானியின் வீட்டிற்கு வந்திருந்தாள், அவர்கள் இருவரும் பிராண சிநேகிதிகள், அதனுலேயே தன் வீடாக இல்லாது போயும் ரமா, பாலுவை பலவந்தமாக இறக்கி விட்டாள். அருணவுக்குத் தந்தி கொடுத்திருக்கும் செய்தியை அவன் சொல்லியும் ரமா, தன் பிடிவாதத்தை விடவில்லை. "நாளை காலேஜுக்கு லீவு போட்டு விடுவோம்; மூவருமாக அருணவிடம் செல்வோம்" என்ற ரமாவின் பேச்சை அவனுல் தட்ட முடியவில்லை.

சாப்பாடெல்லாம் முடிந்த பிறகு மூவரும் வீட்டின் எதிரிலிருந்த மாந்தோப்பிற்குச் சென்ருர்கள். திண்டு மெத்தை. நீர் நிறைந்த

கூஜா, இரு தம்ளர்கள் முதலிய வற்றுடன் சென்றார்கள். மூவரும் தோப்பில் உட்கார்ந்தார்கள்.

அது ஏப்ரல் மாதம்; வெய்யில் கொளுத்தியது; அனற் காற்று வீசியது; ஆனால், தோப்பில் குளுமை இருந்தது. சுற்றுப் புறத்தில் தீய்ந்தது போக எஞ்சியிருந்த ஏரித் தண்ணீரின் மீதிருந்து சிறிது சிறிதாக வீசிய தண் காற்று வியர்வைத் துளிகளை வற்றச் செய்து ஆயாசத்தை நீக்கியது; உல்லாசத்தை அளித்தது.

"விசேஷப் பயிற்சிக்காக பெங்களூர் போயிருந்தேன். அது முடிய இன்னும் ஒரு வாரம் ஆகும். இந்த வாரத்திற்குள் பதினான்காவது படையின் தலைமை ஸ்தானத்திலிருந்து உடனே புறப்பட்டு வரச் சொல்லி தந்தி வந்து விட்டது. என்னை இம்பாலுக்கு அனுப்பப் போகிறார்களென்பது ரகஸ்யமாகத் தெரிய வந்தது"

"இம்பால்!...இம்பாலை ஜப்பானியர்கள் ரகஸ்யமாகச் சுற்றிக் கொண்டிருக்கின்றார்களென்று வதந்தியாக உள்ளது. நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள், பாலு" என்றாள் பவானி.

"பாலுவுக்கென்ன பயம்? பாலுவின் உருண்டு திரண்ட புஜங்கள், பத்து ஜப்பானியர்களுக்குக் கூட பதில் சொல்லுமே!...இது ரமா.

பவானியின் உடல் ஜில்லிட்டது. அந்த இரண்டு மணி நேரத்திற்குள்ளேயே, பாலு அவளுக்கு ஆத்மபந்துவானது — போல் ஆகி விட்டது!

"சும்மா சொல்லவில்லை, ரமா; நீ வருகிறாயா?"

"பயந்து விட்டேன் என்று நினைக்கின்றீர்களா? இன்னும் என் படிப்பு முடியவில்லையே, பாலு! மேலும், நமது தாய் நாட்டிற்காக யுத்தம் செய்ய வேண்டி வரும் போது முதலாவதாக நான் இரண களத்தில் குதிப்பேன்!" என்றாள் ரமா.

"அந்தச் சமயம் வரும் போது நாங்கள் உன் கொண்டையைப் பிடித்து அந்த இரண களத்திற்கு இழுப்போம்! ஆனால், எதிர்பாரா விதமாக அவ்வளவு அவசர நிலை சீக்கிரத்தில் இந்த யுத்தத்திலேயே ஏன் வரக் கூடாது?" என்று

கேட்டான் பாலு.

"அப்பொழுது இரணகளத்தில் இறக்கை கட்டிக் கொண்டு குதிப்பேன். காப்டன் ரமா வந்து கர்னல் பாலுவுக்கு 'ஷேக்-ஹேண்டு' கொடுப்பாள்!"

"வராவிட்டால்...?"

"சுட்டுக் கொன்று விடுங்கள்!"

சந்தோஷத்தால் பாலுவுக்கு உடல் புல்லரித்தது, பவானியின் இதயக்

கோயிலில், பாலு தங்க விக்கிரக மாய்ப் பிரதிஷ்டையானுன்.

மீண்டும் சிங்கத்தின் அறையைப் போல் கடலின் பிரவாகம் கரையை மோதியது. என் மனதிலும் ஏதோ அலங்கோலம் புறப்பட்டது. வரப் போகும் கடம்காட்சியை முடிக்க முடியுமோ என்ற சந்தேகம் தோன்றியது!

★

காலே ஒன்பது மணி. பாலு, ரமா, பவானி மூவரும் அருணுவின் வீட்டிற்குப் புறப்பட்டனர். அவர்கள் வருவதற்கு முன், பாலு கொடுத்த தந்தியைப் பார்த்தவளாய் நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள் அருணு. அப்பொழுது தான் ஸ்நானம் செய்து விட்டு வந்திருந்தாள், இன்னும், தேநீர் பலகாரம் சாப்பிடவில்லே. தந்தியாக வந்த காகிதத்தின் மீது அவள் கண்களிலிருந்து நாலேந்து நீர்த் துளிகள் விழுந்தன!

வேலேக்காரன் ஓடி வந்து, ''கேப்டன் பாலு வருகிருர்'' என்ருன். ஆநந்தத்தால் அருணுவின் இதயம் அடித்துக் கொண்டது. எதிர்பாராவிதமாக அவள் கண்கள் நனேந்தன. விரைந்தோடிச் சென்று கண்ணுடியில் முகம் பார்த்துக் கொண்டாள்: முகம், வாடியிருப்பதை உணர்ந்தாள், பாலு வரும் போது அவள் உடுத்திக் கொள்ள நினேத்த புடவை, ஸ்டாண்டின் மேலேயே கிடந்தது. பாலு, அவளுக்குப் புதியவன் அல்லவே! தன் வடிவத்தை நேரில் கண்டவுடன் வெண்ணே உருகுவது போல் உருகி விடுவாரென்று சமாதானமடைய முடியவில்லே, அவளால்!

அரை நிமிஷ காலத்தில் அவள் இதயம், தூக்கணுங்குருவிக் கூடு போல் ஊசலாடியது. பாலு பெரிய குரலில் பேசிக் கொண்டே வருகிருன்; மற்ற இரு பெண் குரல்கள் விதவிதமாகச் சிரிப்பது கேட்கிறதே!

''மன்னிக்க வேண்டும். அருணு தந்தி கொடுத்தது—போலவே வர முடியாமல் போய்விட்டது...ம்... இவர்கள் என் சிநேகிதிகள்... இவள் ரமாமணி. இவ்வூர் பிரபல வியாபாரி சந்தன்லாலின் மகள்.. இவர்கள் பவானி தேவி; தலக் ஸ்டேஷன் மாஸ்டர் பியூஸ காந்தியின் மகள்...'' என்ற பாலு, ரமா பவானியிடம் அருணுவைக்காட்டி, ''இவள் ஹைகோர்ட் ஜட்ஜ் கோஷாலின் மகள்; பெயர் அருணு, என் அத்யந்த அன்பிற்குரிய அருணு'' என்ருள். அறிமுகம் முடிந்தவுடன் ரமா முன்னுக்கு வந்து அருணுவின் கையைப் பிடித்துக் கொண்டு ''சகோதரி, அருணு! பாலுவை ஒன்றும் சொல்லாதே... வழியில், அவரை நான் தான் இறக்கி விட்டேன்; மன்னிக்கவும்'' என்ருள்.

''ஆமாம்...இறங்கா விட்டால் கொன்று விடுவாளோ என்று பயந்து விட்டேன்!''

'கப-கப' வென்று சிரித்தாள் ரமா.

லேசாக-மதுரமாகச் சிரித்தாள் பவானி.

பலவந்தமாக உதட்டளவில் சிரித்தாள் அருணு.

ரமாவைக் கண்டதும் அருணுவின் இருதயத்தில் வெறுப்புப் பிறந்தது. அருணுவைக் காட்டிலும் அந்த பஞ்சாபிப் பெண் ரமா உயரமானவள், ரமாவின் யௌவனம் அலட்சியத்துடன் பிரகாசித்தது. அவள் சிரித்தால் அறையெல்லாம் ஒளியால் நிறைவது போலிருந்தது, திரண்ட தோளனை பாலுவின் வடிவத்திற்கு ரமாவைப்போன்ற சரீரியானவள் இல்லே யென்ருல் ஜோடிப் பொருத்தம் இருக்காதென்று அருணு சந்தேகித்தாள். ரமாவை விடச் சற்றே உயரக் குறைவாக இருக்கும் அருணு, இதயப் பலஹீனத்தால் மிகக் குறைவானவளென்று கருதிக் கொண்டாள்!

சாப்பாடெல்லாம் முடிந்த பிறகு, பாலுவும் பவானியும் ஒரு சோபாவில் எதிரில் மற்றொரு சோபாவில் ரமாவும் அருணாவும் உட்கார்ந்து ஏதேதோ பேசிக் கொண்டிருந்தனர்,

"பாலு, நீங்கள் ஜப்பானியர்களைப் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டாள் ரமா,

"நாலைந்து தடவை ஜப்பானியக் கைதிகளைப் பார்த்திருக்கிறேன், 'காக்ஸ் பஜார்' பிரதேசத்தில் இரண்டு தடவை ஜப்பானியப் படை எதிர்ப்பட்டு விட்டது" என்றான் கேப்டன் பாலு...

"காக்ஸ் பஜார் என் அக்காவின் மாமியார் ஊர். அம்மம்மா—அவர்கள் நம் தேசத்தில் காலடி வைத்து விட்டார்களா?" என்று கேட்டாள் பவானி'

"காக்ஸ் பஜார் என்ன ராமோ வரைக்கும் கூட வந்திருக்கின்றார்கள். அவர்கள் கும்பலாக வரமாட்டார்கள், ஒவ்வொருவராகவே வருவார்கள்!" என்றான் பாலு.

"அதென்ன பவானி, அப்படிக் கேட்கிறாய்? பாலு, எத்தனை ஜப்பானியர்களைப் பிடித்தாரென்று கேள்?"—இது ரமா.

இந்தப் பேச்சால் அருணாவின் நெஞ்சு எரிந்தது. பவானி வெல வெலத்து' விட்டாள். இரு கைகளையும் தெரியாமல் குவித்து மார்பிற்கெதிராக வைத்து ஹீனக் குரலில், "அப்படிச் செய்யாதீர்கள்!" என்றாள்'

"நீ சொல்ல வேண்டாம், பவானி பாலுவின் தைரியம் எனக்குத் தெரியும்; ஓடிப் போகும் மந்திரம் படிப்பதில் இவர் முதல் ஆள்...' என்றாள் ரமா.

இந்தப் பேச்சு நடக்கும் போது துக்கத்துடன் இருந்த அருணாவின் நெஞ்சில் இந்தக் கடைசி வார்த்தைகள் அம்பு போல் தைத்தன! ரமாவின் மீதிருந்த வெறுப்பு கனன்றது.

ஜப்பானியர்கள் மிகவும் சாகஸக்காரர்கள். போர்க்களத்திற்குப் போகும் போது அவரவர்களின் தாய்மார்கள் 'திரும்பி வராதே' என்று சொல்லுவார்களாம். மனைவிமார்கள், ஆயிரம் பெண் கைகளின் ஊசியால் குத்தப்பட்ட 'பெல்ட்'டை இடுப்பில் சுற்றி அனுப்புவார்களாம். அது ஆயிரம் பெண்டிர் கை பட்டதால் புனித முற்று துப்பாக்கிக் குண்டிலிருந்து அவர்களைக் காக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை. தாய்மார்களின் ஆசிர்வாதமும், மனைவிமார்களின் ரக்ஷா பந்தனமும், எல்லாவற்றையும் விட தாய் நாட்டைக் காக்க வேண்டுமென்னும் வீர சிங்கங்கள் ஜப்பானியர்கள்!" என்றாள் ரமா மீண்டும்.

பாலு, ரமாவின் கைகளைப் பிடித்துக் குலுக்கி சிறு நகையுடன் உனக்கு இவ்விஷயம் எப்படித் தெரியும்?" என்று கேட்டான் பாலு.

அருணா 'விருட்'டென்று எழுந்து வராண்டாவை யடைந்து தெருவைப் பார்த்தவளாய் நின்றாள். இதை எவரும் கவனிக்கவில்லை! ரமா விழுந்து விழுந்து சிரித்து பாலுவின் முதுகில் 'படபட'வென தட்டி, "எனக்குத் தூர திருஷ்டி—தூரக் கேட்டல் முதலிய சக்திகள் இருக்கின்றன தெரியுமா' என்றான். அந்த அடிகள் தன் முதுகில் விழுந்ததென, நினைத்தாள் அருணா.

அப்படியே சிரித்துக் கொண்டு நிலைக்கண்ணாடியின் முன் சென்று தன் கூந்தலை சரிப்படுத்திக் கொண்டு."புறப்படுங்கள், கடைத் தெருவுக்குச் சென்று வரலாம்" என்றாள் ரமா.

பாலு, அருணாவைத் தயாராகச் சொல்லிக் குரல் கொடுத்தான்; அருணா, தன்னை விட்டுவிடுமாறு கேட்டுக் கொண்டாள், அப்படி விட முடியாதென பவானி இடை

மறிக்க, ரமா வராண்டாவிற்குஓடி, கீழே தோட்டத்து மூலையில் கார் ஷெட்டில் நின்று கொண்டிருந்த டிரைவரை தயாராக இருக்கும்படி எச்சரித்தாள். அருணா வாடிய முகத்துடன் அப்பொழுதும் வீதி யையே பார்த்துக் கொண்டிருந் தாள். பாலு அவளருகில் சென்று "என்ன அருணா, இப்படி இருக் கிறாய்?" என்று கேட்டான்,

"எப்படி இருக்கிறேன்?"

"நான் நினைத்தது போல!"

"நீங்களும் நான் நினைத்தது போலவே இருக்கின்றீர்கள். எனவே நான் இப்படி இருப்பது தவறல்ல என கருதுகிறேன்".

பாலுவிற்கு அவள் அந்தரங்கம் புரியவில்லை! அவர்கள் வற்புறுத்த லினால் எப்படியோ புறப்பட்டு விட்டாள்.

அவர்கள் முதலில், 'திகிரேட் ஈஸ்டர்ன்' ஹோட்டலுக்குச் சென் றார்கள். வட்ட மேஜையைச் சுற்றி உட்கார்ந்தவுடன் ஹோட் டலில் ஸர்வர் முதலில் ரமாவிடம் வந்து, "உத்திரவு கொடுங்கள்" என்று நின்றான். அந்தக் கூட்டத் தில் மிகவும் கவரக் கூடிய உருவம் ரமா என்றறிந்து வேதனைப்பட் டாள் அருணா. முதலில் பாலுவின் பக்கம் உட்கார்ந்தாள்; பின் 'திடுக்' கென்று எழுந்துபவானியை இங்கு வரச் சொல்லி அந்த இடத்தில் சென்றமர்ந்தாள். "ஏன்?" என்று கேட்டான் பாலு. "நாற்காலி மிகவும் குள்ளம்" என்றாள் அருணா. உண்மையில் நாற்காலி களெல்லாம் ஒரே விதமானவை; வேற்றுமை எல்லாம் மனதில் தான்!

பேசிக் கொண்டே நால்வரும் ஐஸ்கிரீம் சாப்பிட்டார்கள். பாலு, பவானியிடம் யுத்த விஷயங்களை அதே வேலையாகப் பேசிக் கொண் டிருந்தான். ரமா நாலைந்து ஸ்பூன் கள் சாப்பிட்டாள் அருணா ஒரே ஸ்பூன் ருசி பார்த்து நிறுத்திவிட் டாள். ரமா மெதுவாக தன் கோப்பையிலிருந்த ஐஸ்கிரிமை பாலுவின் கோப்பை காலி ஆக ஆக போட்டுக் கொண்டிருந்தாள். பேச்சு மும்மரத்தில் அதைக் கவ னிக்காத பாலு, அதைத் தின்று கொண்டே இருந்தான். அதைக் கவனித்து விட்ட பவானி, 'முசு முசு' வென்று சிரித்துக் கொண் டாள். அருணாவின் பாதாதி கேசம் பற்றி எரிந்தது! இன்னும் தன் கிண்ணம் காலியாகாததால் பாலு, ரமாவை நோக்கினான். ரமா குறும்புத் தனமாகச் சிரித்தாள்!

வெளியில் வந்து டிரைவரை மைதானத்திலிருக்கச் — சொல்லி விட்டு 'பார்டைஸ் ஹாலு'க்குப் போகலாம் என்றாள் ரமா. "எனக் குத் தலைவலி; சினிமா பார்க்க முடியாது" என்றாள் அருணா ஹீனக் குரலில். அதனால், "எல் லோரும் வீட்டிற்குப் போகலாம்" என்றான் பாலு. ஆனால், ரமா அருணாவை வற்புறுத்தினாள். அருணா, "வருவதற்கில்லை" என்று பிடிவாதம் செய்தாள். அவள் நெற்றியில் வியர்வை அரும்புகட்டி யது அதைத் துடைக்கும் பாவனை யாய் கட்டுப் படுத்த முடியாது பொங்கும் கண்ணீரை, கைக்குட் டையால் துடைத்துக் கொண் டாள். முடிவில், அருணா வீட்டிற் குப் புறப்பட்டாள் அருணாவிற்கு துணையாக நானும் வீட்டிற்குப் போகிறேன்" என்று பவானி யும் புறப்பட்டாள்.

பாலுவின் தொண்டையை உருண்டையான ஏதோ ஒன்று அடைத்தது. ரமா, பாலுவின் கையைப் பிடித்துக் கொண்டு அருணாவை நோக்கி, "ஒன்பது மணிக்கு காரை அனுப்பு" என் றாள். அருணாவின் இதயமெல் லாம் கழுத்தில் கூடி உருண்டை யான கட்டையாகி சொற்களை அடைத்து விட்டது போல், தலை யைமட்டும் அசைத்தாள் 'சரி'

என்பது மாதிரி!

திடீரென்று அருணுவுக்கு தலை வலி வந்ததை அக்கரையுடன் கேட்டு தன் மடியில் படுக்க வைத்துக் கொண்டாள் பவானி. அவள் மடியில் கண் மூடினாள் அருணு. மூடிய விழிகளில் ஏதேதோ காட்சிகள் சுழன்றன! அவளுக்கு எங்கிருந்தோ 'கபகப' வென்ற சிரிப்பொலி கேட்டது.

மீண்டும் ஒரு பெரிய அலை கரையை மோதியது, மேகத் துணுக்குகளுக்கிடையிலிருந்து நிலவு வேகமாக ஓடி—இந்தப் பெண் முகத்தின் மீது அழகு அலைகளை வீசியது. அவளின் நிமிர்ந்த முகம் அப்படியே ககன குசுமத்தையுடைய சந்திர அழகை கவனித்துக்கொண்டிருந்தது!

காப்டன் ரமாவும் மேஜர் பாலுவும், ரங்கூனில் ஒரு பெரிய ஹோட்டலில் திடீரென்று சந்தித்துக் கொண்டார்கள். அன்றுதான் ரங்கூன் திரும்பவும் நேச தேசப் படைகள் வசமாயின. ஆயிரக் கணக்கான சிப்பாய்கள்—பல்வேறு விதமான மக்கள்—நகரத்தில் நிர்ப்பயமாகத் திரிந்து கொண்டிருந்தார்கள். போய் விட்ட ஜப்பானியர்கள் கோரமாக அக்ரமங்களை ஆனந்தத்தின் பெயரால் செய்தார்கள். வயிற்றுப் பசி விபசாரமாக மாற, உதட்டின் மீது வரவழைத்த புன்னகையுடன் மிருக இன்பத்தில் ஆழ்ந்தனர்.

நகரம், கோடிக் கணக்கான விளக்குகளால் மின்னியது. உண்பவர்களால், குடிப்பவர்களால், ஆடுபவர்களால் அந்த ஹோட்டல் ஒரே சந்தோஷமயமாக இருந்தது. ஏற்றத் தாழ்வின்றி எல்லா யூனிபாரமும், காக்கிப் புடவைகளும் கௌன்களும் புஜாபுஜங்களுடன் நடந்து கொண்டிருந்தன. இந்த மனிதத் தத்துவ மானமற்ற கூட்டத்திலிருந்து விலகி, ரமாவும் பாலுவும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

ரமாவைப் பார்த்தவுடன் பாலு ஆச்சரிய மடைந்தான். அவள் ஷில்லாங் 'ஐ. எம். எச்'சிலிருந்து அதற்கு முதல் நாள் விமான மூலம் வந்ததாக—அந்த ஆஸ்பத்திரியின் ஒரு பிரிவுக்கு அதிகாரிணியாக தானே விரும்பிக் கோரி வந்ததாக—தெரிந்தவுடன் பாலு ஸ்தம்பித்து விட்டான்!

அங்கிருந்து எழுந்து இருவரும் கடைத் தெரு வழியாக நடந்தார்கள். குடித்திருந்த ஒரு வெள்ளைக்கார சார்ஜென்ட் வெறியுடன் அவர்கள் எதிரில் வந்து ரமாவை முத்தமிடப்போய் அவள் தோளில் இருந்த பூக்களைக் கண்டு பின்னடைந்து 'சல்யூட்' செய்து விட்டு தன் வழியே நடந்தான்.

அவர்கள், பாலுவின் அறையை அடைவதற்குச் சரியாக இரவு பன்னிரண்டு மணியாகியது, அப்பொழுது அவர்கள் இருவரிடையே பெரிய வாக்குவாதம் நிகழ்ந்தது.

"பாலு...ஆஜாத் இந்தியப் படையில் சேருவதற்காகவே வந்திருக்கிறேன்!" என்றாள் ரமா.

அது பாலுவுக்குப் பிடிக்கவில்லை. "நேதாஜி செய்து கொண்டிருக்கும் வேலை, தெளிவில்லாத வேலை" என்று வாதித்தான் பாலு. ரமாவுக்குக் கோபம் வந்தது கண்களின் சிவப்பில் தெரிந்தது.

"நான் அந்த நாள் தலக் ஸ்டேஷனிலிருந்த மாங்தோப்பில் சொல்லவில்லையா, தாய் நாட்டிற்காகப் போராட வேண்டிய சமயம் வரும் போது யுத்தக்களத்தில் இறக்கைகள் கட்டிக் கொண்டு குதிப்பேனென்று! இப்பொழுது அந்தச் சமயம் வந்து விட்டது; அதற்காகவே, வார்த்தைக்கு வார்த்தை என் சபதத்தை நிறைவேற்றினேன்!" என்றாள் ரமா.

"எல்லாம் நன்றாகவே இருக்கின்றன; ஆனால், அவர்கள் நிலத்தை விட்டு விட்டு தடிச் சண்டை செய்வார்கள். எதிரிகளின் பலத்தைப் புரிந்து கொள்ளாமல் போராடுவது வீணானது!"

"பரவாயில்லை; நாம் இரத்தத்தைக் கொடுத்தால், நேதாஜி நமக்கு சுதந்திரத்தைக் கொடுக்கிறேன் என்கிறார். இப்பொழுதில்லாவிட்டாலும் எப்பொழுதாவது உலகம் இதை உணரும். வருங்காலத்தில் எப்பொழுதாவது பாரத தேசத்திற்கு சுதந்திரம் வந்தால், அது ஆஜாத் இந்தியப் படைகள் சிந்திய இரத்தத்தால் என்று நினைத்துக் கொள். இது சத்தியம்!' என்றாள் ரமா.

அவர்கள் இரவு இரண்டு மணி வரை தீவிரமாக வாதித்துக் கொண்டிருந்தார்கள்...அந்த அபிப்பிராயங்களில் ஒருவருடையது மற்றவருக்குப் பிடிக்கவில்லை!

திரும்பவும் ஒரு அலை கரையை முத்தமிட்டது, நிர்மலமான வானில், நிலவு லேசான பார்வையுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. சந்தேகம் விலகியது போல், பிரகாசத்தில் மூழ்கியது உலகம்.

நேதாஜியின் இராணுவத்தின் மீது சாப பரம்பரைகள் வீழ்ந்தன! 'துரோகிகள்' என்றவர்களே மீண்டும் அந்த வீரர்களுக்கு கல்கத்தாவின் பொதுக் கூட்டத்தில் மலர்மாலை சூட்டினார்கள். பாம்பிற்கு இரண்டு நாக்குகளே தவிர, மனிதர்களுக்குப் பல நாக்குகள்! காப்டன் ரமாவின் மேல் அரசாங்கம் வழக்குத் தொடுத்தது. அவள் நிரபராதி என்று ருஜுவான பின் கல்கத்தா வந்தாள், வந்த மறு நாளே அருணாவின் வீட்டிற்குச் சென்றாள்.

"என்ன அருணா. இப்படி இளைத்து விட்டாய்? உன் முகமும் பொலி விழந்திருக்கிறது?"

அருணா உடனே பதில் சொல்ல வில்லையே தவிர, சிறிது நேரங் கழித்து சோர்வுடன், "இளைத்து விட்டேனா?" என்றாள். ரமா, "ஆமாம்" என்று கூறிவிட்டு, எவ்வளவோ கேள்விகளை தன் மாமூல் தோரணையில் கேட்டாள்.

அருணா சுருக்கமாகப் பதில் கூறினாள்; ஆனாலும், அவளுள் ஏதோ ஒருவித பயம் குடி கொண்டிருந்தது. ரமா முன் போலவே 'கப கப'வென சிரித்து, "பாலுவைக் குறித்துக் கேட்கவில்லையே!" என்றாள்.

அருணாவின் இருதயம் ரயில் மாதிரி ஓடியது; ஆனால், உற்சாகமின்றி அதை அமுத்தி விட்டாள். கடைசியில் வார்த்தைகளை பலவந்தமாக வெளியில் தள்ளி, "கேட்டு என்ன பிரயோஜனம்? துன்பங்களைக்கடப்பது மிகவும் கஷ்டமென்பதைக் கற்றுக் கொண்டேன்!" என்று முணுமுணுத்தாள் அருணா.

"புரிந்து கொள்ளாமல் பேசுகிறாய், அரு! என்னுடைய மேலெழுந்த செய்கைகளைக் கண்டு என்னையொரு பாராங்கல் என்று

நினைத்துக் கொண்டாரோ, என்னவோ!"

அருணாவின் கண்கள் சற்றுப் பிரகாசம் அடைந்தன, இருதயம் வெந்து போயிற்று. பொங்கும் உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ள முயன்றாள்; அதைக் கண்டு கொண்ட ரமா, அருணா கேட்காத முன்னர், பாலு இந்த உலகத்தில் இருக்கிறாரோ, இல்லையோ, சொல்ல முடியாது என்றால்! நான் நேதாஜியின் படையில் சேர்ந்த பிறகு ஒரு ஜப்பானியப் படையுடன் எங்கள் படை இணைந்தது. அங்கே, பிடிபட்ட கைதிகள் வந்து இரண்டு மூன்று நாட்கள் இருந்து வெவ்வேறு இடங்களுக்குக் கொண்டு போகப்பட்டார்கள். ஒரு நாள் ஜப்பானியர்பிடித்த கைதிகளில் பாலு காணப்பட்டார்! குண்டடியால் அவர் வலது கை போய்விட்டது. அவரை என் ரெஜிமெண்டிற்கு இழுத்துக் கொள்ள நான் என் சக்தியையெல்லாம் பிரயோகித்தேன்; ஆனால், பலனில்லை. இரு நாட்களுக்குப் பிறகு ஜப்பானியர்கள் அவரை எங்கோ கொண்டு சென்று விட்டார்கள்!" என்றாள்.

அருணாவின் இதயம் 'குபீ'ரென்றது; தலை மீது இடிவிழுந்தது போல் ஆகிவிட்டது. அவளுக்கு, ரமா ஒரு ராட்சசி போலத் தோன்றினாள். கோபம் அடக்க முடியாததாகி விட்டது.

"அதற்காகவா நீ அவரைக் காதலித்து என்னைத் தூரத் தள்ளினாய்?" என்றலறினாள் அருணா.

"நான் அவரைக் காதலித்தது உண்மையே; ஆனால், சகோதரன் போல! அவரும் நானும், பால்ய சிநேகிதர்கள். ஒரே தட்டில் சாப்பிட்டவர்கள். ஆனால். உண்மையாக நீ அவரைக் காதலிக்கவில்லை! அவரைச் சுற்றி சுவரெழுப்ப முயற்சிக்கிறாய்; காதல் சுவர்களை இடித்துத் தள்ளுமே தவிர, சுவரெழுப்பாது! நான் என் வாழ்க்கையில், எவரையும் இல்லறசுகத்திற்காகக் காதலிக்கவில்லை! தேச சேவையில் மூழ்கிவிட்ட எனக்கு இவைகளுக்கு நேரமில்லை! அந்த நாளில் பவானியுடன் கலந்து நாமெல்லாம் கடைத்தெருவுக்குச்சென்றபொழுது நீ பட்ட வேதனைகளை நான் கவனிக்காமல் போகவில்லை!"

அருணாவுக்கு துக்கம் பொங்கி எழுந்தது; எழுந்து சென்று ரமாவின் மடியில் தலை வைத்து 'ஹோ' என்றழுதாள் ... "அக்கா, நானென்ன செய்வேன்!" எனத் தேம்பினாள் அருணா.

"அரு... கவலைப்படாதே; அவரை, நீ காதலி! உன் இதயத்தை அவர் அன்பால் ஒளி மயமாக்கு. அந்த சுடர், பாலுவின் உயிருக்கு வாழ்க்கை முழுவதிற்கும் ஆபத்துண்டாக்காதென்று உன் இதயத்திற்கு மெய்ப்பி. இந்த நம்பிக்கை

யுடன் வாழ்க்கை நடந்து விட்டால் பரவாயில்லை. காதலுக்கு, கண்ணீர்த் துளிகளும் நெட்டுயிர்ப்புகளும் நெருங்கிய உறவினர்கள்! என்றாள் ரமா.

இந்த வார்த்தைகள் அருணாவின் நெஞ்சில் புத்துணர்வைக் கூட்டின. ஆனால், அந்த உணர்வுகளை மீறி அந்த வீட்டில் பத்து நாட்களுக்குப் பின் ஒலிக்கப் போகும் நாதஸ்வர இசையின் பைரவி ராகம் 'ஹோ' என ஒலிப்பது போலிருந்தது. பாலுவின் ஆசைகளை விட்டு விட்டு தன் அத்தை மகனை மணந்து கொள்வதற்கு, அவள் அன்று விடியற்காலையில் தான் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்!

நிச்சய தாம்பூலமும் ஆகிவிட்டது! அதற்குப் பிறகுதானே ரமா வந்தாள்!

அவள், ரமாவின் மடியில் தலை வைத்த நிமிஷத்தில் கோஷால் அங்கு வந்தார். அவர் தன் தாடியை வருடிக் கொண்டே, "சமயத்தில் வந்தாய், ரமா.. ஓ! இப்பொழுதில்லை ...பத்துநாட்களில் அருணா கல்யாணப் பெண்ணாக வருவாள்; அப்பொழுது ஆசிசெய்!" என்றார்.

ரமா மேலுக்கு சிரித்தாள்!

இனி நீலக்கடல்...அங்கு நின்று கொண்டிருந்த பெண்...எனக்கு அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள், அவளுக்குவேதனை உணர்ச்சி அலைகள் இல்லை; ஒரே சாந்தி; ஒரே நிலவொளி!

காலச் சக்கர ஓட்டத்தில் அந்தச் சக்கரத்தின் கீழ் விழுந்து தேசம் துண்டானது. பின் 'கர கர'வென நசுங்கி, சூடான இரத்த வெள்ளம் பொங்கி வழிந்தது. மனிதர்களுக்குள் இருந்த பேய், சீறி எழுந்தது. அதன் பாத உராயவில் மனிதத் தன்மையின் மதிப்பு துகள் துகளாகியது!

உத்தியோகம் முடித்து விட்டு சொந்த ஊரான சிட்டகாங்கில் இருந்த பியூஷகாந்தியின் குடும்பம், தேசத்தில் தலைவிரித்தாடியபேய்த்

காலன்!

"சார் அவசரமா ஒரு காலன் 'பெட்ரோல்' போடுங்க...!..."

தனத்தில் பட்டு சின்னாபின்னமாகியது! மனிதன் மீது மனிதன் கொண்ட துவேஷ அக்கினிக்கு, பவானியின் பெற்றோர்களும் சகோதரர்களும் ஆகுதியாகி விட்டார்கள்! அவள் சொந்த ஆஸ்பத்திரியின் மீது அக்னி தேவன் தாண்டவமாடினான், காந்திஜியின் அன்புப் பிரவாகத்தில் அவள் ஒரு நீர் துளியாகி தன் கடைசி சகோதரனுடனும் கிழ அத்தையுடனும் விசாகையை அடைந்தாள்!

விசாகையில் தன் 'மெடிகல் பிராக்டீஸை' ஆரம்பித்தாள் பவானி. அவள் கடலின் எதிரிலிருந்த தன் பங்களாவிலிருந்து கடற்கரைக்கு வந்து, ஒவ்வொரு சமயம் விடியற் காலை வரை சந்திர ஜாலங்களைக் கவனித்துக் கொண்டிருப்பாள்! மேகம், சந்தேகங்களை அனுப்பிக் கொண்டிருக்கும், பதிலை விரும்பாமல்!

அவள் ஏன் தன் கையால் உயிர்க் கொலை செய்து கொள்ள வேண்டும்! அவள் காதலில் அவ்வளவு பலஹீனமானவள் அல்லவே!

கதையைக் கேட்டு, என் பேனா கண்ணீருடன் மகிழ்ந்தது!

பழமையில் மோகம்

"குச்சாமாமா"

(ஏழாம்பாகம்)

●

தன் பிள்ளைகள் இருவருக்கும் உபநயனம் செய்யக் காலந் தவறிவிடுகிறது. தன் வீட்டில் அதை நடத்தத்தான் துடியாய்த் துடித்தாலும் அம்மா ஒரு நாழிகூட அப்பாலோ இப்பாலோ போகக்கூடாதென்கிருள். தள்ளாத கிழவிவை விட்டு அவள் சொல்லையும் மீறி எப்படிப் போவது? எப்படிப் போகாமல்தான் இருப்பது? என்றும் மற்ளெரு சகோதரி லாபமடைகிருள். தானும் ஏன் அவ்விதமே ஓரளவேனும் லாபமடையக்கூடாது? அவ்வளவுதான் உத்தேசம்.

பாவம் பார்த்தஸாரதி என்ன செய்வான்? எனதென்று ஒரு வீடும், வீட்டைக் கவனித்துக்கொள்ள ஒரு கிரகிணியுமிருந்தால் அம்மா என்னுடனல்லவா இருப்பாள்! அப்போது இச் சகோதரிகளிடம் இவ்விதம் சிக்கித்தவிக்கக் காரணமிராதல்லவா?

அவரவர்வீட்டுவிசேஷங்கள் அவரவர் பொறுப்பில் நடக்கும். அழைப்பிற் கிசைந்து நான் கல்யாணத்தன்று அவர் வீட்டில் விருந்துக்குச் சென்று — கலியாணப்பிள்ளைகளின் அம்மான் என்ற வகையில் ஏதாவது "ஓதியிட்டு" விட்டு பதில் மரியாதையாக அவர்கள் கொடுக்கும் ப்ரதிஸம்பாவனையைப் பெற்றுக் கொண்டு வந்தால் போதுமாயிருக்குமே. இப்போது அவர்கள் வீட்டுக் கலியாணச் சடங்குகள் யாவும் என் செலவில் என் மேற்பார்வையில் என் வீட்டில் நடக்கின்றன. இவ்வளவு செலவும் நானே ஏற்றதோடு அம்மாஞசீர்வாதமும் செய்து பிரதிஸம்பாவனையாக ஒரு தொகையையும் நானே எனக்குக் கொடுத்துக் கொள்ள வேண்டும். இத்தனையுஞ் செய்தும் சகோதரிக்கு என்ன திருப்தியுண்டா? தன் விட்டில் நடத்த முடியாத குறையையே எப்போதும் சொல்லிக் கொண்டிருப்பாள். இதற்கெல்லாம் காரணமென்ன? எனக்குப் பழமையில் மோகம். ராஜலக்ஷ்மிக்கும் பழமையில் வெறுப்பும் புதுமையில் மோகமும். இந்த கஷ்டத்திற்கு விமோசனமில்லை. அனுபவித்துத்தான் தீரவேண்டுமென்று எண்ணினன். ஆயினும் இதையெல்லாஞ் சற்றும் வெளிக்குக் காட்டாமல்... "அதற்கென்ன! உபநயனம் இங்கேயே நடக்கட்டும். உன் வீட்டில்
நடப்பதாகவே நினை[illegible] ...ாள்.
சகல வசதிகளும் செ[illegible]
பது என் பொறுப்பு" என்[illegible]
சொன்னன் பார்த்தஸாரதி[illegible]

இப்படியேதான் பார்[illegible]
யின் ஸகோதரரும் தமக்[illegible]
சம் லாபம் வரட்டுமே எ[illegible]
வார்கள். அவர்கள் [illegible]
உபநயம், பெண்களு[illegible]
இத்யாதிகள் அம்ம[illegible]
ருந்தபடியாகவேனும்[illegible]
பார்த்துக் களிப்பா[illegible]
களும் அம்மாவின் ஆ[illegible]
நேரிடவே பெறலாம், எ[illegible]
மசோதாவைக் கொண்டு[illegible]
கள். பார்த்தஸாரதி என்[illegible]
முடியும். மசோதாவை[illegible]
வந்தவர்களே அதை ஏக[illegible]
தீர்மானிப்பார்கள். [illegible]
பறக்கவேண்டியதுதா[illegible]

டனே உடனே எதுவானுலுஞ் சரி இவர்களே இவ்வாறு ஆதரிப்பதில் அம்மாவுக்குச் சந்தோஷ மேற்படுகிறது. ஆகவே இவற்றைச் செய்வதுதான் என் கடமையென்று எண்ணிய பார்த்தஸாரதி ஆயிரங்களேயுமனுபவித்ததில்ஒரு சந்தோஷத்தைக் கண்டான்.

இதனிடையில் பார்த்தஸாரதியின் எட்டிய உறவினர்களும் நண்பர்களும் கோவிந்தாச்சாரியாரையும் ராஜலக்ஷ்மியையும் கண்டு பேசி ஒரு ஸமரஸத்தை யுண்டாக்கிடச் செய்த வீண் முயற்சிகள் சொல்லி முடியாது. ஒவ்வொருவருக்கும் கோவிந்தாச்சாரியார் "நீகு பெப்பே" என்பார். ராஜலக்ஷ்மி "நீ தாதகு பெப்பே" என்பாள்.

பார்த்தஸாரதியின் எட்டின உறவினரொருவர் பெரு முயற்சி செய்தார். ராஜலக்ஷ்மியிடம் தனது நியாய வார்த்தைகள் பலியாததைக்கண்டு பார்த்தஸாரதிக்கும் கஷ்டங்களே எடுத்துச் சொல்லி அவள் மனதில் ஒரு இரக்கம் தோன்ற வேண்டி முயற்சித்தார். அதுவும் பயன்படவில்லே. பிறகு பரந்திரையாக அங்கு ராஜலக்ஷ்மி வாழ்வதையும் பார்த்த
ஸார… குடித்தனம் நடத்தினுல்
எ… கத்தானிருக்க வசதி
…ன்றும் எடுத்துச் சொன்
…ன செய்தும் என்ன சொல்
…தாளம் முருக்க மரத்திலி
…ங்கவே இல்லே. இவ்வனு
…சலிப்புற்ற இவர் பார்த்த
…ம் வந்து "அது கெட்டது,
…நான் சொல்வதைக்
…யாணத்தைப் பண்
…ராகக் குடித்தனம்
…ஒரு யோசனை சொன்

…ாரதி ஒரு வறட்டுச் சிரிப்
…சொன்னன். "இன்னு
…ற பரீக்ஷையா? புதிய
…ழயவளே நல்லவளுக்கும்
…ானல்? அல்லது இங்கு
…டித்தனம் நடத்துவா
…ஏற்றுக்கொள்கிறேன்.
அப்பொழுது என் சம்பாத்யம் முழுவதும் அவளிடம் ஒப்புவித்து நான் கைகட்டி என் செலவிற்கே காத்து நிற்கவேண்டியபடி அதிகாரஞ் செலுத்துவாள். இரண்டாந்தாரத்தைவிட மூன்றாந்தாரத்திற்கு இவ்வித உரிமை அதிக மல்லவா? ஊரில் என் கையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் அம்மாவுக்கும், அம்மாவைச் சாக்கிட்டுக் காலங் கழித்து வரும் பிறருக்கும் ஒரு காலணு கிடைக்குமா? அவர்கள் அங்கு அல்லல் படும் போது எனக்கு இங்கு என்ன மன நிம்மதி இருக்கமுடியும்? அல்லது ஊருக்குப் பணம் அனுப்பிய பிறகுதான் நம் வீட்டுச் செலவிற்கும் பணமெடுக்கலாமென்று சொல்லிக் கைகேயியின் பிடிவாதக் குணத்துடன் போராட்டம் தொடங்குவதுதான் அக்கம் பக்கத்தார் முன் அழகாகுமா? அதெல்லாம் வேண்டாம். ஏதோ இப்படியே நடக்கட்டும். என்று பதில் சொல்லி உறவினரைச் சமாதானப் படுத்தினன்.

ஒரு நாள் பார்த்தஸாரதியின் அன்னேயுங் காலமானள். ஆனல் இறக்கும் முன் அம்மூதாட்டி பார்த்தஸாரதியைத் தன்னருகிலழைத்துச் சில நன்மொழிகளேச் சொன்னுள் "ஸாரதி! பெற்ருல் தன்னேப்போல் ஒரு பிள்ளேயைப் பெற வேண்டும். மற்றபடி பிள்ளேகள் என்ன பிள்ளேகள்? அணிப் பிள்ளே கிரிப்பிள்ளேகள்தான். என்னுல் உனக்குத்தான் எவ்வளவு துன்பம்? எவ்வளவு செலவு? எவ்வளவு அல்லாட்டம்? எவ்வளவு பெரிய குடும்பம். இதில் மூன்று குடும்பம் ஒன்ருயிருக்கிறது. இத்தனே பெரிய குடும்பத்தை நிர்வகிப்பது சாமான்ய காரியமா? என்னமோ! போ! ராமாயணம்னும், பாரதம்னும் என்னென்னமோ சொல்லுவார்கள். அதெல்லாம் நெஜமோ பொய்யோ! நிஜமாகத்தான் நீ பிள்ளேயாய்ப் பிறந்தாய்..." என்று இவ்வகையில் தன் மனத் திருப்தியை பார்த்தஸாரதிக்கு தெரிவித்தாள்.

இச் சொற்களைக் கேட்ட பார்த்தஸாரதிக்கு தான் அன்று வரையில் அனுபவித்த ஸகல கஷ்டங்களும் கனவுதானெனத் தோன்றின. தனி வாழ்க்கையின் இலக்ஷியத்தைப் பெற்று விட்டதாகச் சந்தோஷமெய்த்தினான் இதைவிட ஸ்வர்க்கமென்பது ஒன்று இல்லை எனத் தெளிந்தான்.

செலவைப்பொருட்படுத்தாது தன் அன்னையின் ஈமக்கடன்களை செய்தான்.

கதை முடியுங்கட்டம் அடுத்துவிட்டது. பார்த்தஸாரதி அன்னை காலமான மூன்று வருஷங்களாயின. இதற்குள் தனது ஆஸ்திபாஸ்திசளை விற்று கடன்களைக் அடைத்து விட்டு அன்றாட செலவிற்குக் கடவுளை நம்பி வாழும் பழைய நிலைக்கே வந்து சேர்ந்தான் பார்த்தஸாரதி. வருஷங்கள் கழிந்து வரலாயின. பார்த்தஸாரதி சம்பாதித்ததில் குறைவில்லை. ஆயினும் ஒரு வகை திட்டமில்லாத வாழ்க்கை. ஒரு லக்ஷ்யமில்லாத வாழ்க்கை. காலத்தினால் உந்தப் பட்டவனாய் ஏதோ ஒரு வாழ்க்கை. ஊரிலுள்ள பிரமுகர்களுடன் இன்று சுற்றிக்கொண்டிருப்பான். நாளை மகா மேதைகள் படிப்பாளிகள், பிரபல எழுத்தாளர்கள் இடையில் அளவளாவிக் கொண்டிருப்பான். மற்றொரு நாளைக்கு பிரபல நடிகர்கள், நடிகளிடையில் பழகிக்கொண்டிருப்பான். கண்ட விடத்தில் வசிப்பான்.

(தொடரும்)

M. E. T. A.

A Name to remember for

Electrical Installations of every description and Radio Servicing Charges Moderate

Get the Best

Buy from :—

Madras Electric Trades & Agencies

Engineers, Contractors & Dealers

80/3, Lloyds Road, Gopalapuram, Madras-6.

Prop. K. M. ABRAH

ஈசுவர தரிசனம்

●

மேகம் சூரியனை மறைப்பதுபோல, மாயையும் ஈசுவரனை மறைக்கின்றது. மேகம் அப்பால் அகன்று போனதும் சூரியன் காணப்படுகிறது. அதுபோல மாயை அகன்றதும் ஈசுவரன் கண்ணுக்குத் தென்படுவார்.

★

நீர்ப் பானையின் அடியில் வெகு சிறிய துவாரமொன்று இருந்தாலும் அதன் வழியாக நீரெல்லாம் போய்விடும்; அதுபோல சாதகன் ஒருவனது மனத்தில் உலகப்பற்று பிரயத்தனங்களெல்லாம் வீணாய் முடியும்.

★

சூரியன் உலக முழுவதுக்கும் உஷ்ணத்தையும் வெளிச்சத்தையும் கொடுக்கக்கூடியது என்றாலும் ஆகாகாயத்தில் மேகங்கள் தோன்றிச் சூரியனை மறைக்குமானால் அதன் பிரகாசமும் மறைந்து போகும். அதுபோல மனத்தில் அகங்காரம் குடிகொண்டிருக்கும் வரையில் அதில் ஈசுவரஜோதி பிரகாசிக்காது.

மழைத் தண்ணீர் மேட்டு நி... ...ற்பதில்லை. பள்ளமான
இடத்திற்கு ஓடிவந்து விடுகிறத... ...சுவர கிருபையானது தற்
பெரு... ...ம் கர்வமுள்ளவர்களுடை... ...ல் தங்கி நிற்பதில்லை, பணி
வ... ...ின் உள்ளத்தில்தான் ... ...ரும்.

★

...ந்து கருகிப்போன கயிறு தன் பழைய உருவத்தோடிருந்தாலும்,
...யும் கட்டுவதற்கு உதவாது. பிரம்ம ஞானத்தால் எரிக்கப்பட்ட
...ரமும் அப்படிப்பட்டதே.

★

...கீதா, கீதா என்று அடுத்தடுத்து அவசரமாக கீதா என்ற வார்த்
...முறை சொன்னால் த்யாகம் செய்! என்று பொருள்படும்.
...ற சப்தம் வருவது போலக் கேட்கும். உலகப் பற்றுள்ளவர்
...கொள்ளுங்கள்! எல்லாவற்றையும் விட்டு ஈசுவரனிடம் இரு
...லை நிறுத்துங்கள் என்று கீதையானது ஒரே வார்த்...
...க்கின்றது.

★

...ம் செய்யப்பட்ட கற்கண்டைத் தின்றவனுக்கு அழகுக்ள்ள வெல்
...ல் திருப்தியிருப்பதில்லை; அரண்மனையில் படுத்துறங்கியவனுக்கு
...ர குடிசையில் படுத்துறங்குவதில் சுகமில்லை. அதுபோல தெய்
...ன்பத்தை அனுபவித்த ஆத்மாவுக்குச் சாதாரணமான உலக
...ந்தோஷமென்பதில்லை.